# உதயன்

பக்கம் : 68

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

■சுடர்: 29 ■கதிர்: 001 ■வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 11, புதன் 27.11.2013




மழைக்கான
சாத்தியம் உண்டு





பக்கம் 05

ஐந்தாவது சமய குரவர் நாவலர் பெருமான்



பக்கம் 06

உலகத் தமிழர்கள் ஒன்றுபடவேண்டும்



பக்கம் 07

கொதித்தெழுந்தனர் மக்கள்



பக்கம் 24

புரோம்விச்-அஸ்ரன் ஆட்டம் சமநிலையில்


# பிரபாவின் பெயரால் நேற்று நாடாளுமன்று கொந்தளிப்பு

## கூட்டமைப்பு எம்.பியின் உரையால் அரச தரப்பினர் சீற்றம்

கொழும்பு, நவம்பர் 27
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் பிறந்ததினமான நேற்று அவரின் பெயர் மற்றும் மாவீரர் நாள் தொடர்பில் நாடாளுமன்றில் அரச தரப்பு சீற்றமடைந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சபையில் நேற்று பிரபாகரன் குறித்தும் இன்று அனுஷ்டிக்கப்படும் மாவீரர்நாள் தொடர்பிலும் ஆற்றிய உரைக்கு ஆளும்தரப் பால் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

நாடாளுமன்றில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் முடிவடைந்த பின்னர் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் ஆரம்பமானது. இதில் உரை யாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் தொடர்பிலும் மாவீரர்நாள் சம்பந்தமாகவும் உணர்வுபூர்வமான கருத்துகளை வெளியிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் உரையைத் தொடர்ந்து ஒழுங்குப் பிரச்சினை யொன்றை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாருக்., பிரபாகரன் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பேசிய விடயங்களை ஹன்சாட்டிலிருந்து நீக்குமாறு சபாபீடத்திடம் கோரிக்கை விடுத்தார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## 29 ஆவது ஆண்டு

இன்று 29 ஆவது அகவையில் கால் பதிக்கிறான் 'உதயன்' இந்த நாளில் உதயனுக்கு தங்களது ஆதரவை வழங்கி வரும் அன்பான வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் உதயனின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆண்டு நிறைவு வர்ண சிறப்பிதழ் உள்ளே...

## பிரபாவின் பிறந்ததினம் நேற்று; புலம்பெயர் நாடுகளில் கோலாகலம்





கொழும்பு, நவ.27
தமிழீழ வீடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 59 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம் நேற்று புலம்பெயர் தேசங்களிலும், தமிழகத்திலும் வெடி கொளுத்தி, கேக் வெட்டிப் பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாள் ஒவ்வொரு வருடமும்

21 ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவுப் பிரதேச சபையின் தலைவர் நேற்று திடீர்ச் சாவு

யாழ்ப்பாணம், நவ.27
நெடுந்தீவுப் பிரதேச சபையின் தவிசாளர் டானியல் றெக்ஷியன் நேற்றுத் திடீரென உயிரிழந்தார்.

ஈ.பி.டி.பியின் ஆளுகைக்குட்பட்ட நெடுந்தீவுப் பிரதேச சபையின் தவிசாளராகக் கடமையாற்றி வந்த அவர், கடந்த இரண்டு மாதங்களாகச் சபை நடவடிக்கைகளுக்குச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அவர் நேற்றுத் திடீரென உயிரிழந்துள்ளார்.

அவர் நஞ்சு அருந்தித் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று உறவினர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனினும் அவரது தலையிலும் வயிற்றிலும் இரத்தக் காயங்கள் காணப்படுவதாக உறவினர்கள் சிலர் தெரிவித்தனர். இதனால் அவரது மரணத்தில் சந்தேகம் உள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

21 ஆம் பக்கம் பார்க்க


## காணாமற்போனவர்களை பதியும் படிவம் உதயனில்

*யாழ்ப்பாணம், நவ.27*
*காணாமற்போனவர்களைப் பதிவு செய்யும் விண்ணப்பப் படிவம் நாளை வியாழக்கிழமை உதயனுடன் வெளிவரவுள்ளது.*

*ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணை ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிப்பதற்காக காணாமற்போனவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மன்னார் பிரஜைகள் குழு வினால் கடந்த மாதம் முன்னெடுக்கப்பட்டிருந்தன.*

*இதன்போது பதிவு செய்யத் தவறியவர்களை மீண்டும் பதிவு செய்வதற்காக குறித்த விண் ணப்பப் படிவம் நாளைய உதயனுடன் வெளிவரவுள்ளது.* (த-5)

## புத்தூர் விபத்தில் இளைஞர் சாவு



யாழ்ப்பாணம், நவ.27
சாவு வீட்டுக்குச் சென்று திரும்பிய இளைஞர் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவில் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்தில் அங்கு உயிரிழந்தார்.

இந்த விபத்தில் காயமடைந்த மேலும் மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

புத்தூர் சந்தியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது. மோட்டார் சைக்கிள்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதியமையால் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த கந்தசாமி ரனோஜன் (வயது -19) என்பவரே உயிரிழந்தார். அவரும் அதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை ஜெயக்குமார் (வயது -32) ஆகிய

21 ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர் நாடுகளில் இன்று மாவீரர் நினைவுநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம். நவ.27
தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் நாள் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை புலம்பெயர் தேசங்களில் நினைவு கூரப்படுகின்றது.

அத்துடன் தமிழர் ஒழுங்கிணைப்புக் குழுக்களால் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.'

தாயக விடுதலைக்காக வித்தாகிப்போன மாவீரர்களை நினைவு கூர்ந்து வருடம் தோறும் நவம்பர் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படுவது வழமை. 2009 ஆண்டுக்கு முற்பட்ட

21 ஆம் பக்கம் பார்க்க

## இராசகுமாரனிடம் நேற்று விசாரணை

யாழ்ப்பாணம், நவ.27
யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர். இராசகுமாரன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்று செவ்வாய்க்கிழமை

21 ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன் அம்மன் கோயில் நேற்று இடித்துத் தரை மட்டம்

யாழ்ப்பாணம், நவ.27
காங்கேசன்துறை அம்மன் கோயில், சந்திரா அச்சகம் என்பன படையினரால் நேற்று செவ்வாய்க்கிழமை இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வலி.வடக்கில் இராணுவத்தால் கையகப்ப டுத்தி வைக்கப்பட்டுள்ள 6 ஆயிரத்து 382 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளடங்கும் பகுதியிலுள்ள வீடுகள், ஆலயங்கள் என்பன இராணுவத்தினரால் இடித்தழிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் 26 ஆம் திகதி

21 ஆம் பக்கம் பார்க்க

## பிரதேச சபை தவிசாளர்களின் வீடுகள் மீது தாக்குதல்கள்

### வலி.மேற்கில் கல்லெறி

யாழ்ப்பாணம், நவ.27
வலி.மேற்கு பிரதேசபைத் தவிசாளர் திருமதி ஐங்கரன் நாகரஞ்சினியின் வீட்டின் மீது இனந்தெரியாதோர் இன்று அதிகாலை கல்வீசி தாக்கியுள்ளனர். இதன்போது எவருக்கும் சேதம் ஏற்படவில்லை.

மாவீரர் தினத்தை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேச சபையால் மரநடுகைக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள பின்னணியில் இந்தக் கல்வீச்சுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. (ங)

### கரவெட்டியில் அட்டகாசம்

யாழ்ப்பாணம், நவ.27
கரவெட்டிப் பிரதேச சபையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்ட நிலையில், சபைத் தலைவரின் வீட்டின் மீது நேற்று அதிகாலை இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாயக விடுதலைக்காக வித்தாகிப் போன மாவீரர்களுக்காக நவம்பர் 21 ஆம் திகதி நவம்பர் 27 ஆம் திகதி வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படுவது வழமை.

21 ஆம் பக்கம் பார்க்க

# மக்களின் உரிமை காக்க உயிர் நீத்த எம் மறவர்களுக்கு சிரம்தாழ்த்தி எம் அஞ்சலி





இன்று உதயன் 29ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கின்றான். மக்கள் பணிக்காக உதயனுடன் இணைந்திருந்து தம் உயிர் நீத்த எம்மவர்களுக்கும் 'உதயன்' வெளிவர இதுவரை காலமும் எம்மைச் சூழ்ந்துதவி மக்களுக்காக இன்னுயிர்களை உவந்தளித்த வீர மறவர் களுக்கும் எமது சிரம் தாழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



# மாதம் ரூ.1,500 'ஷோகம் வரி'

## அறவிட அரசு திட்டம்; சபையில் ஐ.தே.க. தகவல்

விசேட வர்த்தகப் பொருள்கள் மீதான வரி அறவீடு என்ற போர்வையில் நாட்டின் பிரஜை ஒருவரிடமிருந்து அடுத்த வருடம் மாதமொன்றுக்கு ஆயிரத்து 500 ரூபாவை 'ஷோகம் வரி' ஆக அரசு அற விடத் திட்டமிட் டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க நேற்று நாடாளு மன்றில் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

பொதுநலவாய மாநாட்டுக்கான செலவுகள் தொடர்பான சரியான தக வல்கள் அரசால் இதுவரையில் நாட்டுக்கு அறிவிக்கப்படவில்லை. மாநாட்டுக்காக எச்- 400 பென்ஸ் கார்கள் 54 கொள்வனவு செய்யப்பட்டன. இந்த 54 கார்களும் ஏதோ ஒரு நிறுவனத்தால் தீர்வை அற்ற வகையில் இறக்குமதி செய்யப்பட்டன. இவ்வாறு தீர்வை அற்ற வகையில் கார்களை இறக்குமதி செய்ய அரசுதான் நடவடிக்கை எடுத் துள்ளது.

இது உட்பட பொதுநலவாய மாநாட்டுக்கான அனைத்து செலவுகளுக்கு மாக விசேட வர்த்தகப் பொருள்கள் மீதான வரியினூடாக ஆயிரத்து 288 கோடி ரூபாவை நாட்டு மக்களிடமிருந்து அறவிட அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்காக சீனி கிலோ ஒன்றுக்கு 30 ரூபாவும், பருப்பு கிலோ ஒன்றுக்கு 22 ரூபாவும், நெத்தலி கிலோ ஒன்றுக்கு 26 ரூபாவும், ரின்மீனுக்கு 102 ரூபாவும் என கருவாடு, தேங் காய் எண்ணெய், கொத்த மல்லி, மிளகாய்த் தூள் உள் ளிட்ட அனைத்துப் பொருள்களுக்கும் அரசு வரி அறவிடவுள்ளது.

மேலும் சுப்பர் மார்க்கட் வரியினூ டாக 1500 கோடி ரூபாவையும் தொலைபேசிக் கட்டணங்கள் ஊடாக 400 கோடி ரூபாவையும் அரசு வரியாக அறவிடவுள்ளது. இந்த வரவு - செலவுத் திட்டத்தினூடாக மக்களுக்கு மானியம் வழங்குவதற்குப் பதிலாக அத்தியாவசியப் பொருள்கள் மீதான வரியை அறவிட்டு அதனூடாக மக்க ளிடமிருந்து பணத்தைப் பெற அரசு முயற்சிக்கிறது. எந்தவித திட்டமிட லும் இன்றி தான்தோன்றித் தனமாக அரசு செயற்படு கிறது - என்றார்.

# அடுத்த தேர்தலில் அரசைத் தோற்கடிப்போம்

## புதிய வியூகங்கள் தயார் என்கிறது ஜே.வி.பி.

இனிவரும் தேர்தல்களில் அரசை தோற்கடிப்பதற்காக பலம் வாய்ந்த புதிய வியூகங்களை ஜே.வி.பி. வகுத் துள்ளது என தெரிவித்தார் அக்கட்சி யின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் லால் காந்த.

தமது புதிய கொள்கைகள் டிசெம்பர் மாதம் உத்தியோக பூர்வமாக வெளியி டப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தாவது-

"அடுத்த வருடம் நடைபெறவுள்ள மேல்மாகாண சபை தேர்தல், ஜனாதி பதித் தேர்தல் ஆகியன குறித்து தற்போது கட்சிக்குள் கலந்தாலோசிக்கப் பட்டு வருகின்றது. இந்த அரசை எப்படி யாவது வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதே எம் அனைவரினதும் ஒரே நோக்கமாகும். இதற்காக நாம் மும் முரமாக செயற்பட ஆரம்பித்துவிட் டோம்.

தமிழ், சிங்கள புதுவருடத்திற்கு முன்னர் நடைபெறவுள்ள மேல் மாகாண சபைத் தேர்தலில் அரசின் பலத்தை அடியோடு குறைத்து, அடுத்து நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதே எமது ஒரே இலக்காகும். மாகாணசபைத் தேர்தலை பொறுத்தமட்டில் மேற்கும், தெற்குமே எமது இலக்காகவுள்ளது. இந்த இரண்டு மாகாணங்களிலும் வெற்றிவாகை சூடுவோம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

காரணம், நாம் வகுத்துள்ள கொள் கைகள் அந்தளவு பலம் வாய்ந்தவை. இதை நாம் டிசம்பர் மாதம் உத்தியோகபூர்வமாக வெளியிடுவோம். இந்த கொள்ளைகள் மட்டும் வெளிவந்துவிட்டால் மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கை பலமடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது. இது பிரதானமாக ஜனாதி பதி தேர்தலை இலக்கு வைத்து வகுக்கப்பட்டுள்ளது.

எமது கட்சியைப் பொறுத்தமட்டில் இன்னமும் தலைமைத்துவ மாற்றம் சம்பந்தமாக எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. அப்படி தீர்மானங்கள் எடுத்தால் உடனே அறிவிக்கப்படும்" என்றார். (ங-சி)

# நாவற்குழியில் கைக்குண்டு நேற்று மீட்பு

சாவகச்சேரி. நவ. 27.

சாவகச்சேரிப் பிரதேச சபையின் நாவற்குழி உப பணிமனையின் கட்டடத்தின் பிளாற் பகுதியிலிருந்து மூன்று கைக்குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. உப பணிமனையின் திருத்த வேலையில் ஈடுபட்டுள்ள கட்டடத்தொழிலாளர்களால் இந்தக் கைக் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கட்டடத்தின் மேற்பகுதியிலுள்ள பிளாற்றில் ஆண்கள் அணியும் சட்டை ஒன்றில் சுற்றப்பட்ட நிலையில் இந்தக் கைக்குண்டுகள் இருந்துள்ளன. இது தொடர்பாக உப அலுவலகப் பொறுப்பதி காரியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து படையினரின் உதவியுடன் அவை அகற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-400-13)

# பிரதேச சபை உறுப்பினருக்கு நேற்று நிபந்தனையுடன் பிணை

யாழ்ப்பாணம், நவ.27

அரச உத்தியோகத்தரைக் கடமை செய்ய விடாமல் தடுப்பது அவரை அவமானப்படுத்தும் வகையில் நடந்து கொள்வது தண்டனைக் குரிய குற்றமாகும். என்று சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சாவகச்சேரி நீதிமன்றில் எச்சரிக்கை செய்யப்பட்டு நிபந்தனையுடன் கூடிய ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கை விரலில் வெட்டுக் காயத்துடன் ஒருவரைக் கொண்டு வந்துள்ளனர். அவ்வேளை கடமையிலிருந்த வைத்தியர் விடுதிகளில் நோயாளர்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்ததால் பத்து நிமிடங்கள் கழித்து வெளிநோயாளர் பிரிவுக்கு வந்துள்ளார். அவ் வேளையில் அங்கு நின்ற பிரதேச சபை உறுப்பினர் சிறிஸ்கந்தராசா ஸ்ரீரஞ்சன் உட்பட ஐந்து பேர் வைத்திய அதிகாரியை கடமையை செய்ய விடாமல் அவமானப்படுத்தும் வகையில் தரக் குறைவான வசனங்களைப் பிரயோகித்துத் தடுத்தனர் என்றும், வைத்திய அதிகாரி அவசர சிகிச்சை பிரிவினுள் கடமையில் இருந்த போது அனுமதியின்றி உள்ளே சென்றதுடன் அவர் எழுதிய மருத்துவ அறிக்கையை எடுத்து வெளியே கொண்டு சென்று பார்வையிட்ட பின்னர் மீண்டும் ஒப்படைத்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இது தொடர்பாக வைத்தியசாலை பொலிஸ் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டு அங்கு வந்த பொலிஸார். குறித்த பிரதேச சபை உறுப்பினரைத் தடுத்து வைத்திருந்தனர். குறித்த நபர் மீது நேற்று சாவகச்சேரி பொலிஸார், வைத்திய அதிகாரியை அவமானப்படுத்தியதுடன் கடமை செய்ய விடாமல் தடுத்ததாகக் குற்றம் சாட்டி சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறித்த நபரை எச்சரிக்கை செய்த நீதிவான் நிபந்தனையுடன் கூடிய ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டார். குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் முன்னிலையானார்.

வழக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய உதயனில் 2 ஆம் பக்கத்தில் பிரசுரமான இது தொடர்பான செய்தியில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் என்பதற்குப் பதிலாக சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் என்று தவறுதலாகப் பிரசுரமாகி விட்டது. தவறுக்கு வருந்துகிறோம். (த)

# யுவதி கைது

யாழ்ப்பாணம், நவ.27

யாழ். வைத்தியசாலை வீதியிலுள்ள உணவு நிலையம் ஒன்றில் தேநீர் அருந்திய யுவதி அங்கு சிறு தொகைப் பணத்தைத் திருடினார் என்று குற்றஞ் சாட்டி அங்கு நின்றிருந்தவர்களால் பிடிக்கப்பட்டுப் பொலிஸில் ஒப்படைக்கப் பட்டார்.

யாழ். நீதிமன்றில் நேற்று முற்படுத்தப் பட்ட அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

சங்கானையைச் சேர்ந்த யுவதி ஒருவரே இந்தக் குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-4-14)


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

**நாகநாதி தம்பாப்பிள்ளை**
(தபால் ஊழியர் – அச்சுவேலி)



தோற்றம் 20.09.1932 — மறைவு 20.11.2011

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகநாதி தம்பாப்பிள்ளை

வருடங்கள் இரண்டு கடந்திடினும்
ஆறிடுமோ உங்கள் நினைவுகள் - எமக்கு
ஐயா, அம்மா எமையெல்லாம் சடுதியாய்
துன்பக் கடலிலே தவிக்கவிட்டு நீங்கள்
வரமுடியாத இடத்துக்குச் சென்றுவிட்டீர்கள்
உங்கள் பிள்ளைகளோ உங்கள்
நினைவுகளுடன் வாழ்கின்றோம்.
ஐயா, அம்மா உங்கள் பிரிவால் நாங்கள்
இழந்தது அதிகம் சொல்ல வார்த்தைகள் இல்லை.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய வைரவப் பெருமானின்
ஆசி வேண்டி நிற்கின்றோம்

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

நீங்காத நினைவுகளுடன்
தம்பாப்பிள்ளை சிந்தாமணி
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர் து. தயாளன் அவர்களின் அன்புத் தாய்

**கனகம்மா புஸ்பராஜலிங்கம்**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## மரண அறிவித்தல்

**இன்னாசிமுத்து யோண்பிள்ளை**



அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இன்னாசிமுத்து யோண்பிள்ளை கடந்த (25.11.2013) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (28.11. 2013) வியாழக்கிழமை மு. ப. 10.30 மணிக்கு மண்கும்பான் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் அல்லைப்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

3ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி. (40503)(14.17)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**கந்தையா அரியரட்ணம்**
(முன்னாள் C.T.B பொறியியலாளர்)



கோண்டாவிலை பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய கந்தையா அரியரட்ணம் 26.11.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியலட்சுமியின் (பேபி) அன்புக்கணவரும் காலஞ் சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற அப்பச்சிப்பிள்ளை - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் அரியராணி ஆகியோரின் சகோதரரும் சிவறஜனி, ஜெயபாரதி, சயந்தி, சுகந்தி ,சுதன்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவசகாயம், செல்வகுமார், இராசசேகரம், ரமேஸ்வரன் ஆகியோரின் மாமனும் துஸ்யந்தன், துவாரகா, கார்த்திகன், சிவானா, சிவராணி, சகானா, சதுர்சன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.11.2013 வியாழக்கிழமை 8 -11 மணிவரை நடைபெற்று 8911 Woodbine Avene Markham, Ontario Canada வில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல் :
சுபந்தி (மகள் - 077 9359681)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 29.10.2013 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

அமரர் **Dr. வல்லிபுரம் பத்மநாதன்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 26.11.2013 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை 28.11.2013 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

கண்ணகி ஹாட்வெயர்,
13 ஆம் கட்டை, விசுவமடு.

குடும்பத்தினர்.

# யாழ். மாநகர சபை முன்பள்ளி சிறாரின் கண்காட்சியும் கலை நிகழ்வும்

யாழ்ப்பாணம், நவ.27

யாழ்ப்பாணம் மாநகரசபை முன்பள்ளிச் சிறுவர்களது கண்காட்சியும் கலை நிகழ்ச்சியும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நல்லூர் பண்டார மாளிகை வளவில் உள்ள முன்பள்ளி யில் நடைபெற்றது.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.


சிறப்பு விருந்தினர்களாக ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன், கிராம அலுவலர் திருமதி இ.இராகினி,

மாநகரசபை பொதுசனத் தொடர்பாளர் எஸ்.லோகசிவம், மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கண்காட்சியில் சிறுவர்களால் உருவாக்கப்பட்ட பொருள்கள் இடம் பெற்றிருந்தன.

காட்சியில் வைக்கப்பட்டிருந்த பனையில் இருந்து பெறப்படும் பொருள்களைத் தாங்கிய சிறிய வடலி சிரட்டைகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட சிறிய செடி என்பன பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தன.

கண்காட்சியுடன் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-7)





# மனித உரிமைகள் தொடர்பாக முள்ளியவ்வளையில் செயலமர்வு

மாங்குளம், நவ.27

மனித உரிமைகள் தொடர்பான சட்ட திட்டங்கள், மற்றும் பிரதேச சபை சட்ட திட்டங்கள் என்னும் தலைப்புக்களிலான செயலமர்வு இன்று, புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் முள்ளிய வளை தம்பா ஹோட்டலில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்தியத்தின் ஏற்பாட்டில் இன்றுதுணுக்காய் மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர்கள், உதவித் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கும் - நாளை மனித உரிமைகள் செயற்பாட்டு விழிப்புணர்வுக் குழுக்கள், தாம் சார்ந்த பிரதேசங்களில் மனித உரிமைச் செயற்பாடுகளும் அதன் பிரச்சினைகளும் என்னும் தலைப்பில் முல்லைத்தீவு பிரஜைகள் குழு மற்றும் உறுப்பினர்களுக்கு இந்தச் செயலமர்வு நடைபெறவுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட பிராந்திய இணைப்பாளர் எம்.ஆர்.பிரியதர்ஷன தெரிவித்துள்ளார். (ஓ-400,422)

# குடாநாட்டு கிணறுகளில் குடிதண்ணீர் மாசடைவு

*நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.27

யாழ்.மாவட்ட கிணறுகளில் உள்ள குடிதண்ணீர் மாசடைந்துள்ளதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

மக்கள் சுத்தமான குடிதண்ணீரைப் பெறக் கூடியதாக இரணைமடு நீர் விநியோகம் குறித்த திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன்.

யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் குறித்த விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போதே உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாடும் குறிப்பாக தீவுப் பகுதிகளும் குடிதண்ணீர் வசதியின்றி பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றது.

நைதரசன் அளவு நிலத்தடி நீரில் கூட அதிகளவில் உள்ளது. நாம் பயன்படுத்தும் நீர் குடிப்பதற்கு உகந்ததாக இல்லை. மக்களின் தண்ணீர்தேவையை நிறைவு செய்யும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் மூலம் மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். அத்துடன் விவசாயத்துறையும் பயனடையும்.

இதன் மூலம் கிடைக்கக் கூடிய கருத்துக்களைக் கவனத்தில் எடுத்து பாதிப்புகளற்ற வகையில் திட்டத்தை நடை முறைப் படுத்தவுள்ளோம். மக்களின் கருத்துக் களைக் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும் என்பதாலேயே இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டது.

உங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதன் மூலம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதால் நீங்கள் அவற்றைத் தெரிவிப்பது முக்கியம்-என்றார். (வ-7)

# கடன் சுமையால் உயிரை மாய்க்கும் விவசாயிகள்

*விவசாய அமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.27

வடமாகாண விவசாயிகள் வங்கிகளில் பெற்ற விவசாயக் கடன்களை மீளச் செலுத்த முடியாது தங்களின் உயிரை மாய்த்துக் கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாண விவசாயிகள் பொருளாதார ரீதியாக மிகவும் நலிவடைந்துள்ளனர். விவசாயக் கடன்களைப் பெற்ற விவசாயிகள் அவற்றை மீளச் செலுத்துவதற்கு திண்டாடுகின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை ஊரெழு பகுதியில் விவசாயிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது அவர்கள் இதனை என்னிடம் தெரிவித்தனர். இந்த நிலையில் விவசாயிகள் கடன்களைச் செலுத்தும் கால எல்லையை மேலும் 6 மாத காலத்துக்கு நீடிக்குமாறு வட மாகாண வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடத் தீர்மானித்துள்ளோம்.

> "–"
> யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது வட மாகாணம் முழுவதும் இதே நிலைமை தான் உள்ளது.

கடன்களை மீளச் செலுத்த முடியாது வங்கி உத்தியோகத்தர்களுடன் விவசாயிகள் கைகலப்பில் ஈடுபடும் நிலையையும் அவதானிக்க முடிந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது வடமாகாணம் முழுவதும் இதே நிலைமை தான் உள்ளது. அதற்கான மாற்று நடவடிக்கைகளை விவசாய அமைச்சு மேற்கொள்ளும்-என்றார். (வ-14)


# ஐந்தாவது சமய குரவர் நாவலர் பெருமான்

*கணேசானந்த மகாதேவா சுவாமிகள் தெரிவிப்பு*


"நல்லைநகர் தந்த ஆறுமுக நாவலர் சைவமும் தமிழும் செழித்தோங்கப் பாடுபட்ட பெருமகன். அது மட்டுமல்ல சமயகுரவர்களில் ஐந்தாவது குரவராக வைத்துப் பூசித்து வணங்கப்பட வேண்டியவர்" இவ்வாறு கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சைவச் சிறார் இல்லத்தில் அதன் தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் இடம்பெற்ற குருபூசையின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மகாதேவா ஆச்சிரமத்தின் முதல்வரும் மகாதேவா ஆச்சிரம சிறார் இல்லக் காப்பாளருமான கணேசானந்தா மகாதேவா சுவாமிகள் தெரிவித்தார்.

அந்நிய சமயங்கள் எம்மக்களை ஆட்கொள்ள நினைத்த வேளையில் நாவலர் துணிந்து தமது சமயப் பிர சங்கங்கள் மூலமும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் சைவ மக்கள் மத்தியில் எழுச்சி ஏற்படுத்தியதுடன் சைவ வழி நின்று வாழ வேண்டிய வழி களையும் தமது எழுத்து, பேச்சு ஆகியவற்றின் மூல மாக வெளிப்படுத்தியவர். சைவமும் தமிழும் செழித் தோங்கப் பாடுபட்டார். அவரது சைவ வினாவிடை, இலக்கணச் சுருக்கம் போன்றவை தமிழும் சைவமும் மக்கள் மத்தியில் செழித்தோங்க உறுதியுடன் உதவின- என்று மேலும் அவர் தெரிவித்தார்.

சிறுவர்கள் சிலரும் அங்கு உரை நிகழ்த்தினர். இந்தக் குருபூசை கிளிநொச்சி திருநெறிக் கழகத் தலைவர் எஸ்.மகாலிங்கத்தின் வழிகாட்டலில் இடம்பெற்றது. இதன்போது கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயப் பரிபாலன சபைத் தலைவர் எஸ்.செல்வரட்ணம், மகாதேவா ஆச்சி ரம சிறார் இல்லப் பொதுச் செயலாளரும் முன்னாள் விசேட ஆணையாளருமான பொன்.நித்தியானந்தன் உட்பட பல பிரமுகர்களும் பெருமளவு அறநெறிப் பாட சாலையைச் சேர்ந்த சிறுவர்க ளும் இல்லக் குழந்தைகளும்கலந்துசிறப்பித்தனர்.(க)



# சாவகச்சேரி நகரசபையின் வருமானப் பகுதி கணினி மயம்





சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 20 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கணினி மயப்படுத்தப்பட்ட வருமானப் பகுதி நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா இதனை வைபவரீதியாகத் திறந்து வைத்து கணினி செயற்பாட்டு களையும் ஆரம்பித்து வைத்தார்.

நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கே.சயந்தன், ஈ.ஆனோல்ட், பா.கஜதீபன், க.சிவாஜிலிங்கம் ஆகியோரும் சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலர் ர.சுபாகரன், யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கொன்ஸ்ரைன்ரன் ஜக்ஸீல், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், நல்லூர் பிரதேசசபைத் தலைவர் வசந்த குமார், சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ-9)

# மேய்ச்சல் தரவையில் வெட்டப்படும் புற்கள்

*கால்நடை வளர்ப்போர் விசனம்*

தென்மராட்சி, நவ.27

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதி தரவைப் பகுதியில் ரயில் திணைக்களப் பகுதி யினர் புற்கற்றைகளை வெட்டி எடுப்பதால் கால்நடை களை மேய்ச்சலுக்கு விட முடியாத நிலை ஏற்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

காலபோக நெற்செய்கை ஆரம்பித்தவுடன் கால் நடைகளைமேய்ச்சலுக்காக தரவைப் பகுதிக்குக் கொண்டு சென்று விடுவதாகவும் அண்மைக் காலமாக ரயில் பாதைக்கு பயன்படுத்துவதற்காக ரயில்வே திணைக் களத்தினர் வாகனங்களில் வந்து புல்லை கற்றைகளாக வெட்டிச் செல்கின்றனர்.

இதனால் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து வருகின்றனர் எனவும் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு வருவது டன் இவ்வாறான நட வடிக்கையில் ஈடுபடு வோர் மீது சட்ட நடவடிக்கைமேற்கொள்ள வுள் ளதாகவும் தெரிவித்தார். (வ-9)

## சிவாஜி சிலையை அகற்ற முடிவு

சென்னை, நவ.27

தமிழகத்தில் சென்னை மெரினா கடற்கரை அருகே அமைக்கப்பட்டுள்ள நடிகர் சிவாஜியின் சிலையை அகற்றுவதற்கு தமிழக அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

குறித்த சிலை போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுகின்றது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த மனுக் குறித்து விசாரணை மேற்கொண்ட நீதிமன்றம் அதுகுறித்து தமிழக அரசிடம் விளக்கம் கோரியிருந்தது.


அந்த மனுவுக்கு விளக்கமளித்துள்ள தமிழக அரசு, "போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்திருக்கும் பட்சத்தில் சிவாஜியின் சிலையை அகற்றுவதில் எந்த ஆட்சேபமும் இல்லை" என்று தெரிவித்துள்ளது.

தமிழக அரசின் இந்த முடிவுக்கு திரையுலகத்தினரும், வேறு அமைப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

நடிகர் சிவாஜியின் சிலையை அங்கிருந்து அகற்றக் கூடாது என்று கோரி சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு திரைப்படச் சங்கங்கள் மனுக் கையளித்துள்ளன. (ற)

# உலகத் தமிழர்கள் ஒன்றுபட வேண்டும்

### வலியுறுத்துகின்றார் வைகோ



சென்னை, நவ.27

ஈழத் தமிழர் உரிமைக்காக உலகத் தமிழர்கள் ஒன்றுபட்டுப் போராட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ.

பொங்குதமிழ் இயக்கத்தின் ஏற்பாட்டில் பெங்களூரில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஈழத் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க உலகெங்கும் பரந்திருக்கும் தமிழர்கள் ஒன்றுபட்டுப் போராட வேண்டும். இலங்கையில் நடந்த இனப்படுகொலையை இந்தியா தான் அரங்கேற்றியது. ஆரம்பத்தில் ராஜீவ்காந்தி அரசும் தற்போது பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான அரசும் அதனைத் தொடர்ந்து செய்து வருகிறன. தமிழ் இனத்தை அழிக்க இந்திய அரசு ஆயுத உதவிகளை அள்ளி வழங்கியது. பாகிஸ்தான் மீது போர் தொடுக்க கூட இந்தியா அவ்வளவு ஆயுதங்களைப் பயன்படுத்தியதில்லை.

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரில் தமிழர்கள் மீது இலங்கை இராணுவத்தினரால் பெரும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அதற்கு சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள காணொலிக் காட்சிகளே சாட்சி.

இலங்கையில் நடந்த இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்தியுள்ள பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமரூனை நன்றியுள்ள தமிழனாகப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

ஒவ்வொரு ஆண்டும் பொதுவாக்கெடுப்புகள் மூலம் ஒவ்வொரு புதிய நாடுகள் உருவாகி வருகின்றது. அது போன்று தமிழீழம் அமையவும் பொது வாக்குகெடுப்பு நடத்த வேண்டும். உலகத் தமிழர்கள் ஒன்றுபட வேண்டும். எம்மால் முடியாதது என்று ஒன்றுமே இல்லை." என்றார். (ற)

# வறுமைச் சுவர்களை காங்கிரஸ் உடைக்கும்

### ராகுல் காந்தி கூறுகின்றார்

ராஜஸ்தான், நவ.27

இந்தியாவின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் வறுமைச் சுவரை காங்கிரஸ் கட்சி உடைக்கும் என்று தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி.

ராஜஸ்தான் மாநிலத்தில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறும்போது,

"நாடு வளர்ச்சி அடைவதற்குச் சாலைகள், ரயில்வே பாதைகள், விமான நிலையங்கள் போன்ற நாட்டின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவது மிகவும் அவசியமானது. அதே நேரத்தில் ஏழை மக்கள் எதிர்பார்க்கும் உதவிகளைச் செய்ய அரசு தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டியதும் முக்கியம். நம் நாடு வேகமாக வளர்ச்சி அடைய வேண்டுமென்றால் வறுமையை ஒழிக்க வேண்டியது அவசியமாகும். நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ள வறுமை என்கிற அந்த கடினமான சுவரை காங்கிரஸ் கட்சி உடைத்து எறியும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஆந்திராவைப் பிரிக்க அனுமதிக்க முடியாது

### அந்த மாநில முதலமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

கடப்பா, நவ.27


ஆந்திர மாநிலத்தை ஒரு போதும் பிரிக்கவிடமாட்டேன் என்று அந்த மாநில முதலமைச்சர் கிரண் குமார் ரெட்டி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.



கடப்பா மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு உரையாற்றும்போது, "தனி மனிதர்கள் எப்போதுமே நிரந்தரமானவர்கள் அல்ல. ஆனால் மாநிலம் என்பது நிலையான ஒன்று. ஆந்திர மக்களின் ஆதரவுடன் மாநிலத்தைப் பிரிக்காமல் இருப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொள்வேன். மாநிலத்தின் எதிர்கால நலனைப் பற்றி சிந்திப்பவர்கள் யாரும் ஆந்திராவைப் பிரிப்பதற்கு துணைபோக மாட்டார்கள். தன்னலமுடையவர்கள் தான் மாநிலத்தைப்பிரிக்க துணைபோவார்கள். ஆந்திராவை நான் ஒருபோதும் பிரிக்க விடவே மாட்டேன்" என்று தெரிவித்துள்ளார் கிரண்குமார் ரெட்டி.

அதேவேளை, தனித் தெலுங்கானா அமைப்பது குறித்த சட்ட வரைவு குறித்து காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி பல்வேறு அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றார். (ற)




இந்தியச் சட்டங்களின்படி, ஓரினச்சேர்க்கை என்பது 10 ஆண்டு சிறைவாசத்திற்குரிய கடுங்குற்றமாக முன்னர் கருதப்பட்டது. அந்தச் சட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் புதுடில்லி உயர்நீதி மன்றம் 2009ஆம் ஆண்டு ஓரினச்சேர்க்கையில் தவறில்லை என தீர்ப்பளித்தது. இந்தநிலையில் தங்களுக்கு மறுக்கப்பட்டு வரும் சமஉரிமையை நிலைநாட்டவும், சமூகம் தங்களைப் புறக்கணிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நூற்றுக் கணக்கான ஆண்-பெண் ஓரினச்சேர்க்கையாளர்கள் பேரணி நடத்தினர். ஜந்தர் மந்தர் பகுதியில் வானவில்லின் நிறங்களை கொண்ட கொடிகளை ஏந்தி, மேளதாளம் முழங்க பேரணியாகச் சென்ற அவர்களை பொதுமக்கள் ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்தனர். (ற)

# கட்டடம் இடிந்து வீழ்ந்து பெங்களூரில் மூவர் சாவு

சென்னை, நவ.27

பெங்களூரில் நேற்று கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் ஒரு குழந்தை உட்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர். பெங்களூர் அடுகோடி பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றே இடிந்து வீழ்ந்துள்ளது. குறித்த கட்டடம் 40 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும் அந்தக் கட்டடத்தில் 5 வீடுகள் இருந்தன என்றும் கூறப்படுகின்றது.

"கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கனமழை காரணமாகவே குறித்த கட்டடம் இடிந்து வீழ்ந்துள்ளது. மீட்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் உயிரிழப்பு அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது" என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ற)

## சேதுசமுத்திர திட்டம் அண்ணாவின் கனவு

சென்னை, நவ.27

சேதுசமுத்திரத் திட்டம் அறிஞர் அண்ணாவின் கனவு என்று தெரிவித்துள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதி அதனை நிறைவேற்றுவதற்கு தமது கட்சி தொடர்ந்து போராடும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை தமிழக அரசு தடை செய்து வருகின்றது. அதன் மூலம் தமிழகத்தின் வளர்ச்சியை அ.தி.மு.க. தடுத்து வருகின்றது. எனினும் தி.மு.க. சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றாது ஓயாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# 'தங்கம் இல்லாவிட்டால் சிறை செல்லவும் சாமியார் தயார்'

### சோபன் சர்கார் சாமியாரின் சீடர் அதிரடித் தகவல்

கான்பூர், நவ.27

"உன்னாவ் கோட்டையில் தங்கப் புதையல் உள்ளது. நிறுத்தப்பட்ட பணியை திரும்ப தொடங்க வேண்டும். அங்கு தங்கம் கிடைக்காவிட்டால் சாமியார் சோபன் சர்கார் சிறைக்குச் செல்லவும் தயாராக இருக்கின்றார்" என்று அதிரடியாகத் தெரிவித்துள்ளார் சோபன் சர்கார் சாமியாரின் சீடர் ஒருவர்.

உத்தரபிரதேச மாநிலத்தின் உன்னாவ் மாவட்டத்தில் உள்ள மன்னர் ராஜா ராவ் ராம் பக் சிங் கோட்டையில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புதைக்கப்பட்ட தங்க புதையல் இருக்கின்றது என்று கனவு கண்டு கூறினார் சாமியார் சோபன் சர்கார். அவரின் கனவை நம்பிய இந்திய மத்திய, மாநில அரசுகள் புதையல் வேட்டையில் இறங்கின.

இந்திய புவியியல் ஆராய்ச்சி நிறுவனமும், தொல்லியல் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து அந்தப் பகுதியைக் கிளறிச் சல்லடை போட்டுச் சலித்தலில் பழங்கால செங்கல் சுவர் ஒன்றையும், உடைந்த சில பாத்திரங்களின் துண்டுகளையும் மட்டுமே கண்டெடுத்தன. ஒரு துண்டுத் தங்கம் கூட கண்டெடுக்கப்படாத நிலையில் புதையல் தேடும் முயற்சிகளைக் கைவிட்டு அவை பின்வாங்கிக் கொண்டன.

அதன் பின்னரும் அயராத சோபன் சர்கார் சாமியார் கனரக இயந்திரங்கள் சகிதம் தங்கம் தேடும் முயற்சியில் இறங்கினார். விசேட பூசைகள் நடத்தப்பட்டு புதையல் தேட ஆரம்பித்த ஓரிரு நாள்களில் சோபன் சாமியாரையும், சீடர்களையும் குண்டுக்கட்டாகத் தூக்கி அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டனர் பொலிஸார்.

இந்தநிலையில் சாமியாரின் பிரதம சீடர் ஓம்ஜி அவஸ்தி அதிரடித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார். ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், "சாமியார் கூறிய இடத்தில் தங்கம் இருக்கிறது. நிறுத்தப்பட்ட பணியை திரும்பத் தொடங்க வேண்டும். இது தொடர்பாக சட்டதிட்டங்களில் மாற்றம் கொண்டுவர வேண்டும். கைவிடப்பட்ட பணியைத் திரும்ப தொடங்க வேண்டும் என்று பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளோம். தங்கம் கிடைத்தவுடன் அது அப்படியே இந்திய வங்கி வசம் ஒப்படைக்கப்படும். தேடுதல் வேட்டைக்காக 10 லட்சம் ரூபா செலவு செய்துள்ளோம். இதற்கு மேல் ஆகும் செலவை கூட நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். ஒரு வேளை அங்கு தங்கம் கிடைக்கவில்லை என்றால் சிறைக்கு போகக் கூட சாமியார் தயாராக இருக்கிறார்" என்று கூறியுள்ளார்.

தங்கம் இருக்கின்றது என்று பரபரப்பைக் கிளப்பி தற்போது ஆச்சிரமத்தை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டிய நிலையில் இருக்கும் சோபன் சர்கார் சாமியார், அடுத்து சிறையில் தான் ஆச்சிரமம் அமைக்கவுள்ளார் போன்று தெரிகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் பேசிக் கொள்கின்றார்களாம். (ற)

# கொதித்தெழுந்தனர் மக்கள்


## தாய்லாந்தில் அவசர நிலை பிரகடனம்:
## பிரதமரைப் பதவி விலகக் கோரிப் பெரும் போராட்டம்

பாங்ஹொக், நவ.27
தாய்லாந்துப் பிரதமருக்கு எதிராக ஆரம்பித்த மக்களின் ஆர்ப்பாட்டங்கள் விஸ்வரூபம் எடுத்து மக்கள் புரட்சியாக மாறத் தொடங்கியுள்ளது.

தாய்லாந்துப் பிரதமராக பதவி வகிக்கும் யூங்கலக் ஷினந்திராவுக்கு எதிராகவே வீதியில் இறங்கியுள்ளனர் அந்தநாட்டு மக்கள்.

அண்மையில் ஷினந்திரா பொது மன்னிப்புச் சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தினார். அந்த சட்டத்தின் அடிப்படையில் ஊழல் குற்றச்சாட்டில் தண்டனை பெற்றிருந்த அந்நாட்டின் முன்னாள் பிரதம ரான தக்சின் ஷினவந்த்ரா அந்த நாட்டை விட்டுப் பாது காப்பாக வெளியேறியுள்ளார். இவர் தற்போதைய பிரதமர் யூங்கலக் ஷினந்திராவின் சகோதரராவார். தமது சகோதரரைக் காப்பாற்றுவதற்காகவே யூங்கலக் ஷினந்திரா பொது மன்னிப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

அதையடுத்து குறித்த சட்டத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று கோரியும், யூங்கலக் ஷினந்திரா பதவி விலக வேண்டும் என்று கோரியும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு ஆதரவாக யூங்கலக் ஷினந்திராவின் அமைச்சரவையைச் சேர்ந்த இரு அமைச்சர்களும் களத்தில் இறங்கியுள்ளனர்.

சிறிது சிறிதாக ஆரம்பித்த ஆர்ப்பாட்டத்தில் தற்போது பல்லாயிரக்கணக்கானோர் பங்குகொண்டுள்ளனர். அதனால் தலைநகர் பாங்ஹொக் ஸ்தம்பித்துள்ளது.

பொதுமக்கள் அந்த நாட்டின் நிதியமைச்சகம் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சக அலுவலகங்களை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். அதையடுத்து அவசர நிலையைப் பிரகடனப் படுத்துவதாக பிரதமர் யூங்கலக் ஷினந்திரா அறிவித்துள்ளார்.

தற்போது ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோருக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல்கள் ஆரம்பித்துள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# அடுத்தாண்டு ஆரம்பத்தில் சிரிய அமைதிப் பேச்சுகள்

*பான்-கீ-மூன் அறிவிப்பு*

ஜெனிவா, நவ.27
சிரியாவில் கடந்த இரண்டாண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் எதிர்வரும் ஜனவரி மாதம் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று ஐ.நா.சபையின் பொதுச் செயலர் பான்-கீ-மூன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"சிரிய உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் சிரிய அரசுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே ஜெனிவாவில் பேச்சுக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் 22ஆம் திகதி பேச்சுகள் ஆரம்பமாகும். சிரியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவருதற்கு இது ஓர் அரிய வாய்ப்பு. அதை இரு தரப்பினரும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. (ற)

# ஈரான் உடன்படிக்கை குறித்து ஒபாமா-நெதன்யாகு ஆராய்வு

நியூயோர்க், நவ.27
அணுசக்தித் திட்டங்கள் தொடர்பாக மேற்கு நாடுகளுடன் ஈரான் மேற்கொண்டுள்ள உடன்படிக்கை தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் தொலைபேசியூடாகக் கலந்துரையாடியுள்ளார்.



ஈரானுடன் அமெரிக்கா உட்பட மேற்குநாடுகள் மேற்கொண்டு வரும் சமரச முயற்சிகளை இஸ்ரேல் கடுமையாக விமர்சித்து வரும் நிலையிலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

ஈரானின் அணு செறிவூட்டல் செயற்திட்டங்களை ஆரம்பம் முதல் கடுமையாகக் கண்டித்து வரும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, மேற்கு நாடுகள் ஈரானுடன் மேற்கொண்டுள்ள உடன்படிக்கை ஒரு வரலாற்றுப் பிழை என்றும் அணு ஆயுதம் தயாரிக்கும் தனது நோக்கத்தை ஈரான் நிறைவேற்றிக்கொள்ள அது வழிவகை செய்யும் என்றும் தெரிவித்திருந்தார்.

அதையடுத்து மிக நெருக்கமான நட்பு நாடுகளான அமெரிக்கா-இஸ்ரேல் உறவில் அதிருப்தி நிலை தோன்றியிருந்தது. அதையடுத்தே பதற்றத்தைத் தணிக்கும் வகையில் பிரதமர் நெதன்யாகுவை தொலைபேசியில் தொடர்புகொண்டு கலந்துரையாடியுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வெள்ளை மாளிகை துணை செய்தித் தொடர்பாளர் ஜோஷ் எர்னஸ்ட் "ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதைத் தடுத்து நிறுத்த வேண் டும் என்பதில் இரு நாடுகளுக்கு மிடையிலான ஒருமித்தகருத்தை இரு தலைவர்களும் பகிர்ந்து கொண்டனர்" என்று தெரிவித்தார். (ற)

# கருக்கலைப்பு விளம்பரத்துக்கு ரஷ்யாவில் வந்தது தடை

மொஸ்கோ, நவ.27
கருக்கலைப்புத் தொடர்பான விளம்பரங்களுக்குத் தடை விதிக்கும் புதிய சட்டமூலத்துக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஒப்புதல் வழங்கியுள்ளார். அதையடுத்து எதிர்காலத்தில் கருக்கலைப்புத் தொடர்புடைய விளம்பரங்கள் எவற்றையும் அந்நாட்டு ஊடகங்களிலோ, பாதாகைகளிலோ காட்சிப்படுத்த முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் ரஷ்யாவில்தான் கருக்கலைப்பு வீதம் உயர்வாகக் காணப்படுகின்றது. அதையடுத்தே குறித்த புதிய சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசு அதிகாரிகள் கூறியுள்ளனர். (ற)

# ரூ.120 கோடி பெறுமதியான காதல் பரிசு; காதலனுக்கு வழங்குகின்றார் ஏஞ்சலீனா

நியூயோர்க், நவ.27
தனது காதலனின் பிறந்த நாள் பரிசாக 120 கோடி இந்திய ரூபா மதிப்புள்ள தீவு ஒன்றை வழங்கவுள்ளார் பிரபல ஹொலிவூட் நடிகை ஏஞ்சலீனா ஜூலி.



ஒஸ்கார் விருது வென்ற நடிகை ஏஞ்சலீனா ஜூலியும், அவரது காதலன் நடிகர் பிரோட் பிட்டும் திருமணம் செய்து கொள்ளாமல் ஒன்றாக சேர்ந்து வாழ்கின்றனர்.

நடிகர் பிரோட் பிட் தனது 50ஆவது பிறந்த நாளை அடுத்த மாதம் 18ஆம் திகதி கொண்டாட உள்ளார். அவருக்கு தனது காதல் பரிசாக ஏஞ்சலீனா ஜூலி இதய வடிவிலான ஒரு சிறிய தீவை பரிசளிக்க உள்ளார். அது அமெரிக்காவின் பெட்ரா போஸ்ட்ஸ் பகுதியில் உள்ளது. அங்கு இரண்டு பிரமாண்ட மாளிகைகளையும் ஏஞ்சலீனா ஜூலி கட்டியுள்ளார். அந்தத் தீவின் மொத்த மதிப்பு சுமார் 120 கோடி இந்திய ரூபாவாகும். (ற)

# ரயில் விபத்து: சுவிஸில் 11 பேர் காயம்

ஜெனிவா, நவ.27
சுவிட்ஸர்லாந்தில் சுற்றுலாப் பயணிகள் ரயில் ஒன்றும் சரக்கு வாகனம் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியதில் ரயிலில் பயணித்த 11 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆல்ப்ஸ் மலையடிவாரத்தில் பயணித்துக்கொண்டிருந்த ரயில் கடவையின் குறுக்கே சென்றுகொண்டிருந்த சரக்கு வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

குறித்த ரயிலில் 41 பயணிகள் பயணித்தனர். அவர்களில் 11 பேர் சிறு காயங்களுக்குள்ளாகினர். வாகனத்தின் சாரதிகள் காயங்களின்றித் தப்பிக் கொண்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)



இந்தோனேசியாவின் சுமாத்திராத் தீவில் அமைந்துள்ள சினாபுங் எரிமலையின் செயற்பாடு கடந்த சில மாதங்களாக அதிகரித்து வந்தது. அண்மையில் இதில் இருந்து வெளியான கடும் புகை வானத்தில் பல கிலோமீற்றர்கள் உயரத்துக்குக் கிளம்பியுள்ளது. இந்த நிலையில் ஞாயிற்றுக் கிழமை புவியியல் அதிகாரிகள் இந்த எரிமலை எந்நேரமும் வெடித்துச் சிதறும் அபாயம் தோன்றியிருப்பதால் அவசர கால எச்சரிக்கை சமிக்ஞையை அதிக பட்சத்துக்கு உயர்த்தி பொது மக்களை எச்சரித்துள்ளனர். இந்த எச்சரிக்கை மூலம் குறித்த எரிமலை இருக்கும் பகுதியைச் சுற்றி வசிக்கும் சுமார் 15 ஆயிரம் பொது மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு இந்தோனேசிய அரசு உத்தரவிட்டுள்ளது. (ற)

# கடல் சீற்றத்தால் மூழ்கின கப்பல்கள்

*3 பேர் சாவு; 25 பேர் மாயம்*



பீஜிங், நவ.27
சீனாவின் ஷண்டாங் மாகாணத்தின் கடற்பகுதியில் இரு கப்பல்கள் மூழ்கியதில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். 25 பேர் காணாமற் போயுள்ளனர்.

பலத்த காற்று மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக பயணிகள் கப்பல் ஒன்றும் சரக்குக் கப்பல் ஒன்றும் விபத்துக்குள்ளாகி முற்றாக மூழ்கியுள்ளன. மூவரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில் காணாமல் போன 25 பேரை தேடும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என ஷண்டாங் மாகாண கடலோர காவல் படை உயரதிகாரி தெரிவித்தார்.

தொடர்ந்தும் சீரற்ற காலநிலை நிலவி வருவதால் தேடுதல் நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் ஓட்டோ செலுத்தியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ.27
சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி ஓட்டோவைச் செலுத்திச் சென்ற நபருக்கு பத்தாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத நபருக்கு ஓட்டோவைச் செலுத்திச் செல்ல அனுமதியளித்து, ஓட்டோவையும் வழங்கிய ஓட்டோ உரிமையாளருக்கு எதிராக பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த ஒருவர் தனது நண்பருக்கே அவ்வாறு ஓட்டோவைக் கொடுத்துள்ளார். ஓட்டோவைப் பெற்றுக் கொண்ட நபர் சாரதி அனுமதிப் பத்திரமின்றி மதுபோதையில் அல்லைப்பிட்டிக்கு ஓட்டோவைச் செலுத்திச் சென்றுள்ளார்.

இந்த நிலையிலேயே பொலிஸார் அவரைக் கைது செய்து ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முன்னிலைப்படுத்திய போது சந்தேகநபர் தன்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார்.


அதனால் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக 7 ஆயிரம் ரூபாவும், சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய குற்றத்துக்காக 2 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத ஒருவருக்கு ஓட்டோவைக் கொடுத்தவருக்கு எதிரான வழக்கு அடுத்த தவணைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ந-4)

## ‘சமூக பாதுகாப்பு’ கலந்துரையாடல்

கிளிநொச்சி, நவ.27
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் ‘சமூக பாதுகாப்பு’ தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மு.ப.10 மணிக்கு செயலக மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் பிரதேச சமுதாய காவல்துறை அலுவலர்கள், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள் ஆகியோர் பங்குபற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)



காரைநகர் சிவகௌரி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழாவும் மலர் வெளியீடும் அண்மையில் பெரியமணல் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சிவகௌரி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சு.விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகவும் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி, யாழ். மாவட்ட சி.க.கூ.சங்கங்களின் சமாசத் தலைவர் செ. இலகுநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வெள்ளி விழா மலரின் மதிப்பீட்டுரையை ஓய்வு நிலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி நிகழ்த்தி நூலை வெளியிட்டு வைக்க, காரைநகர் அபிவிருத்திச் சபையின் உப தலைவர் வே.முருகமூர்த்தி பெற்றுக் கொண்டார். கலை நிகழ்வுகளும், பட்டிமன்றமும் சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெற்றன. (ஓ-250)

## கொள்ளை முயற்சி தோல்வி

வலி.வடக்கு, நவ.27
உறவினர் வீட்டுக்குச் சென்ற ஆசிரியையின் கழுத்தில் இருந்த நகைகளை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் பறித்தெடுக்க மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்காத போதிலும் ஆசிரியை தலையில் காயப்பட்ட நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுவிலில் இருந்து மல்லாகம் வடக்கு கல்லாரை என்னும் இடத்தில் உள்ள உறவினரின் வீட்டுக்குச் செல்வதற்கு சைக்களில் வந்த ஆசிரியையைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள், ஆள்கள் நடமாட்டம் குறைந்த இடத்தில் வைத்து நகைகளை அறுக்க முற்பட்டுள்ளார்கள்.

இந்த வேளையில் குறிப்பிட்ட ஆசிரியை சைக்கிளுடன் தள்ளுண்டு வீழ்ந்ததில் தலையில் காயம் ஏற்பட்டது. இதன்போது அங்கு மக்களும் கூடினர். இதனைத் தொடர்ந்து மோட்டார் சைக் கிளில் வந்த இளைஞர்கள் தப்பி ஓடிவிட்டனர் ஆசிரியை வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-86)

## பன்றியைக் கடத்தியோர் சிக்கினர் பொலிஸிடம்

*இருவருக்கு மூவாயிரம் அபராதம்*

யாழ்ப்பாணம், நவ.27
மானிப்பாயிலிருந்து வளர்ப்புப் பன்றி ஒன்றை சட்டவிரோதமாக கொழும்பு “ஜாஎல” பகுதிக்குக் கொண்டு செல்ல முற்பட்ட தென்பகுதியைச் சேர்ந்த இருவருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

வாகனம் ஒன்றில் குறித்த வளர்ப்புப் பன்றியை இருவரும் ஜாஎலவுக்குக் கொண்டு செல்ல முற்பட்டுள்ளனர்.

உரிய ஆவணங்கள் எதனையும் பெற்றுக் கொள்ளாது சட்ட விரோதமாக அதனைக் கொண்டு செல்லும்போது தமது தேவை நிமித்தம் மண்டைதீவுக்குச் சென்ற பொலிஸாரால் அது கண்டறியப்பட்டது.

அதனை அடுத்து குறித்த நபர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்திய போது இருவரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இருவருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. பன்றியைக் கொண்டு சென்ற வாகனம் உரிமைக் கோரிக்கைக்காக நீதிமன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (ந-4)

## கோட்டக் கல்விப் பணிப்பாளரை உடனடியாக இடமாற்றம் செய்க

*புதுக்குடியிருப்பு அதிபர்கள் கோரிக்கை*

புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளரை உடனடியாக இடம் மாற்றுமாறு குறித்த கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து அந்த கோட்டத்தை சேர்ந்த 18 பாடசாலைகளின் அதிபர்கள் கையொப்பமிட்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கோட்டக்கல்வி அலுவலர் பதவிக்கு கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் ஒருவரே நியமிக்கப்பட வேண்டும். ஆனால் தற்போது கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுபவர் அதிபர் சேவைத் தரம் 2-1 இற்குரியவர். இவர் இந்தப் பதவிக்கு பொருத்தமற்றவர்.

இதேவேளை கல்வி நிர்வாகத்தைச் சேர்ந்த அலுவலர் கல்வி வலயத்தில் எந்தவித பதவியும் இன்றி உள்ளார். அவரை இந்தப் பதவிக்கு அமர்த்துவது பொருத்தமானது.

தற்போது கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுபவர் சுமார் 10 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து இருப்பதால் தனது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ற வகையில் செயற்படுகின்றார். அதிபர், ஆசிரியர்களின் இடமாற்றத்தின் போது தனது தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி தனக்கு விருப்பமில்லாதவர்களை இடமாற்றம் செய்து வருகின்றார்.

எனவே கோட்டக் கல்விப் பணிப்பாளரை இடமாற்றம் செய்து எமது மாணவர்களின் கல்வியை பாதுகாக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் –என்றுள்ளது. (ஐ-400)

## மனிதர்கள் வாழும் போதே மதிப்பளிக்க வேண்டும்

*சனசமூகநிலைய உபதலைவர் உரை*

யாழ்ப்பாணம், நவ.27
சாவடைந்த பின்னர் மனிதர்களுக்கு மாலை சூட்டுவதும் கண்ணீர் அஞ்சலி விளம்பரங்கள் அடிப்பதும், மலர் வளையம் வைப்பதும் இந்த மண்ணில் இனி மறைய வேண்டும்.

மனிதன் வாழும்போது அவனது பஞ்சம், பசி, பட்டினி தீர்க்கப்படவேண்டும். முதியோரை மதித்துக் கௌரவிக்க இளையோரும் சமூகமும் முன்வரவேண்டும் என நவாலி முருகானந்தா சனசமூக நிலைய உப - தலைவர் மகேந்திரன் தெரிவித்தார். ஜே/135 நவாலி கிழக்கு முதியோர் சங்க கௌர விப்பு விழா தலைவர் கி.பவுலின் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது.

சமூகத்துக்கு நேரடியாகவும் - மறைமுகமாகவும் பெரும்பணியாற்றிய தலைவர்கள், சமூகத் தொண்டர்கள் இன்று வயது முதிர்ந்த நிலையில் உள்ளனர். ஆனால் அவ்வாறான பெருந்தகைகளை பாராட்டுவதற்கு சமூகங்களில் உள்ள பொது அமைப்புக்களும் முன்வருவதில்லை. அரச நிறுவனங்களும் முன்வருதில்லை.

நாம் எமது இயலுமைக்கு ஏற்ப முருகானந்தா இளைஞர் அணியுடன் இணைந்த வகையில் 46 முதியோரை கௌரவித்துள்ளோம். அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதையிட்டு நாமும் மகிழ்ச்சி அடைகின்றோம் - என்றார். (ந-50)

## ராஜீவ்காந்தி கொலை வழக்கு: மறு விசாரணை தேவையில்லை

*சொல்கிறார் மத்திய அமைச்சர் நாராயணசாமி*



சென்னை, நவ.27
இந்தியாவின் முன்னாள் பிர தமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மறு விசாரணை கோருவது சரியானதல்ல என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித் துள்ளார்.

சென்னை விமான நிலை யத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் உயர் அதிகாரிகள் திடீரென்று மாற்றுக் கருத்துக் களை கூறிவருகின்றனர். அரசு உயர் அதிகாரிகள் பத வியில் இருக்கும்போது ஒரு கருத்தும் ஓய்வுபெற்ற பின்னர் வேறு விதமாகவும் முரணான வகையில் கருத்து வெளியிடு வது சரியானதல்ல. கடந்த 22 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை முழுவதும் உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, உறுதி செய்யப்பட்ட நிலையில் திடீரென மறுவிசாரணை கோருவது சரியானதல்ல - என்றார்.

## அபராதம்

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர்களின் ஒன்றியத்தால் வாராந்த விடுமுறை தினம் ஞாயிற்றுக் கிழமை என அறிவிக்கப்பட்டிருந் தது.

இதனை மீறி ஞாயிற்றுக்கிழமைகளில் சிகை ஒப்பனை நிலையத்தை திறந்து வைத்திருந்த உரிமையாளர்கள் மீது ஒன்றியத்தின் விசேட கண்காணிப்பாளர்கள் உடன்நடவடிக்கையை மேற்கொண்டு அபராதம் விதித்தனர்.

அத்துடன்கடந்தவாரம் நேரக் கட்டுப்பாட்டை மீறியோர் மீதும் நடவடிக்கை எடுக்கப் பட்டது. (ந)

வாகனம் விற்பனைக்கு
TOYOTA ஹைஏஸ் வான்
உடன் விற்பனைக்குண்டு.
XX-XXXX
தொடர்பு:077 632 0345
(37593)(4.6.3)

இளவாலை, ஆனைவிழுந்தான் விக்கின விநாயகர்
ஆலயகுரு பிரம்மஸ்ரீ இராம பாலசந்திரக்குருக்கள்
அவர்களுக்கு அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் வழங்கப்பெற்ற
தேச அபிமானி விருதினைப் பாராட்டி வாழ்த்தி வழங்கப்பட்ட
பாராட்டுப் பாமாலை
சீர் இலங்கைத் திருநாட்டின் சிரசு போன்றே
செழுமை பெறும் யாழ்ப்பாண இளவாலைப் பதியில்
பேருடைய பெருந்தகை
இராமச்சந்திரக்குரு–சறோஜினி தம்பதிகள்
பேரார்வமொடு பெற்ற செல்வனே வாழியநீர்.
ஒப்பிலா வேதாகமம் தெளிந்து தேர்ச்சியுற்று
இப்புவியில் சைவம் தழைக்கும் சாதனை பெற்று
செப்பரிய சிறப்புடன் வாழும் நற்குருக்களே!
எப்பொழுதும் ஏகதந்தன் துணை நிற்க வாழி.
சிந்தை நிறைவுடன் சிரம்தாழ்த்தி வாழ்த்துகிறோம்.
வாழிய... வாழிய... வாழிய...
ஆனைவிழுந்தான் விக்கின விநாயகர்
தேவஸ்தான
பரிபாலன சபை, இளவாலை.
இன்றைய தினம்
ஆனைவிழுந்தான் ஆலயத்தில்
பாராட்டுவிழா இடம்பெறும்.
(40447) (7.6.3)



பாராட்டி வாழ்த்துகின்றோம்
யா/கோண்டாவில்
இராமகிருஷ்ண ம.வி அதிபர்
திருவாளர்
சண்.வாமதேவன்
SLPS-II
அவர்கள் அண்மையில் கல்வி
அமைச்சினால் வழங்கப்பட்ட
“பிரதீபா பிரபா” விருதினைப்
பெற்றுக் கொண்டமைக்காக அவரை
உளமார வாழ்த்தி அவர் மேன்
மேலும் பல விருதுகளைப்
பெற்று நலமுடன் வாழ
நல்லைக் கந்தன்
அருள் வேண்டி
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
திருமதி க.கபிலன்
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
திருமதி பி.இராஜசேகரம்
யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
திருமதி ந. கேதீஸ்வரன்
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
(40604)(3.6.4)



## சுகாதார அமைச்சருடன் மருத்துவர்கள் சந்திப்பு



மன்னார், நவ.27
வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் வி.சத்திய லிங்கத்துக்கும் மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற மருத்துவர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.ஆர்.யூட், மாகாண சுதேச வைத்தியப் பணிப்பாளர் எஸ்.துரைரத்தினம், வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்.பரீட், வடமாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.பீரிமூஸ் சிராய்வா , மருத்துவர் ஜீ.குணசீலன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற மருத்துவர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தற்போது மன்னார் மாவட்டத்தில் சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டதோடு அரச சார்பற்ற அமைப்புக்கள் சுகாதாரம் தொடர்பில் மேற்கொண்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# கந்தன்குளம் மக்களுக்கு வீட்டுத் திட்டத்தில் அநீதி

## முதலமைச்சரிடம் மனு கையளிப்பு

வவுனியா, நவ.27
வவுனியா கந்தன்குளம் பூவரசங்குளம் கிராம மக்களுக்கு இந்திய வீட்டுத் திட்டத்தில் அநீதி விளைவிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வடமாகாண முதலமைச் சரிடம் சமர்பித்த மனுவில் தெரிவித் துள்ளனர்.

அந்த மனுவில் தெரிவிக்கப் பட்டிருப் பதாவது:-

போரால் இடம்பெயர்ந்த கந்தன்குளம் கிராமத்தில் 80 குடும்பங்கள் வரை மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கியிருந்த இந்தக் கிராமம் 2010 ஆம் ஆண்டு படையினரால் விடுவிக் கப்பட்டு மக்கள் மீளக்குடியமர்த்தப் பட்டனர்.

ஆரம்பத்தில் இங்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டன. ஆனால் வசதிகள் எவையும் மேற் கொள்ளப்படவில்லை.

பெரும் காடு சார்ந்த பகுதியில் இந்தக் கிராமம் அமைந்துள்ளது. அண்மையில் எமது பகுதியில் குடிதண்ணீரைத் தேடிச் சென்ற 9 வயதே ஆன சிறுமி யொருவர் பாதுகாப்பற்ற நீர் நிலைக்குள் வீழ்ந்து இறந்து போனாள். இதனைத் தொடர்ந்து எமது கிராமத்துக்கு விரைந்த பிரதேச செயலர் தலைமையிலான அரச அதிகாரிகள் இந்தக் கிராமத்துக்கும் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் நிரந்தர வீடுகள் வழங்கப்படுமென உறுதியளித்திருந்தனர்.

இந்திய வீட்டுத்திட்டத்தின் கட்டம் மூன்றில் எமது கிராமம் உள்ளடக்கப்பட்டிருந்தது. அனுமதிய ளிக்கப்பட்ட பட்டியலிலும் எமது கிராமத்தின் பெயர் இடம்பெற்றிருந்தது.

ஆனால் தற்போது அமைச்சர் றிசாத் பதியுதீனின் உத்தரவுக்கமைய எமது கிராமத்தின் பெயர் இந்திய வீட்டுத்திட்டம் கட்டம் மூன்றில் இருந்து நீக்கப்பட்டு வேறொரு சகோதர இன கிராமத்துக்கு மாற்றப்பட்டதாக தெரிகின்றது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கிடைக்க வேண்டிய இந்திய வீட்டுத்திட்டத்தை வழங் கக் கோரியும் ஒரு கவன வீர்ப்புப் போராட்டத்தைக் கடந்த 20 ஆம் திகதி வவுனியா அரச அதிபர் காரியாலயத்துக்கு முன்னால் நடத்தி மனு ஒன்றும் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இதற்குப் பல்வேறு ஊடகங்கள் முக்கியத்துவம் அளித்திருந்தமையைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். இந்த நிலையில் போராட்டத்தின் முடிவில் மனுவைப்பெற்றுக்கொண்ட அரசஅதிபர் பின்வருமாறு பதிலளித்தார்.

'இந்த விடயம் குறித்து விசாரித்து அறியப்படும் .

மேலும் ஜனாதிபதிக்கும் வடமாகாண முதலமைச்சருக்கும் அறிவிக்கப்படும்,

தற்போது நீங்கள் ஒரு மாகாண சபையைத் தெரிவு செய்துள்ளீர்கள். அவர்களுக் கும் இதில் பொறுப்புள்ளது.

அவர்களுக்கு அமெரிக்க அரசு வீடுகளுக்காக நிதி வழங்கியுள்ளது. அவர்களையும் அணுகுங்கள்' எனத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கிராமத்தில் வழங்குவதாக உறுதி அளிக்கப்பட்ட இந்திய வீடுகளை வழங்குமாறு கோரிப் போராட்டம் நடத்தினால் அதி காரிகளோ நடந்துள்ள தவறு களை மறைத்து பிரச்சி னையை மாகாண சபையின் பக்கம் திருப்பி விடுகின்றனர்.

எனவே எமக்கு ஒதுக்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டத்தை பெற்றுத் தருவதற்கு தாங்கள் ஆவன செய்ய வேண்டும் என வேண்டுகின்றோம்.

இது குறித்த கவனத்தை தங்களின் ஊடாக இந்திய தூதுவராலயத்துக்கும் கொண்டு செல்லப்படவேண்டுமென விரும்புகின்றோம் என்றுள்ளது. (க)

## தருமபுரம் - வட்டக்கச்சி வீதி; பயணிக்க முடியாத நிலையில்

கிளிநொச்சி, நவ.27
கிளிநொச்சியிலுள்ள தருமபுரம் -வட்டக்கச்சி பிரதான வீதி புனரமைக்கப்படாமையால் இதனைப் பயன்படுத்தும் மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி தருமபுரம் மருத்துவமனைச் சந்தியில் இருந்து கட்டைக்காடு, தருமபுரம் கிழக்கு, கல்மடு நகர், பத்து ஏக்கர் திட்டம், இராமநாதபுரம், நாவல் நகர், வட்டக்கச்சி, மாயவனூர் உள்ளிட்ட பகுதிகளுக்குச் செல்லும் இந்தப் பிரதான வீதி எந்த விதமான புனரமைப்புப் பணிகளும் இடம்பெறாது மோசமான நிலையில் காணப்படுகின்றது.

மேலும் இந்த வீதியின் பல இடங்களிலும் குழிகள் காணப்படுவதால் இதனூடாகப் பயணிக்கும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களைஎதிர்கொண்டு வருகின்றனர்.

தினமும் இந்த வீதியை பயன்படுத்தும் 500 க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும், ஆயிரக் கணக்கானமக்களும் பல்வேறு இடர்களை தமது பயணத்தின்போது எதிர்கொள் வதைக் காண முடிகின்றது. (க-6)



வடமாகாண சபை உறுப்பினர் எஸ். சிவமோகனின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கற்சிலை மடுவில் இடம்பெற்ற நடமாடும் இலவச மருத்துவ சேவையின் போது மக்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகின்றது. (க-500)

## நெடுங்கேணியில் கிராமிய வங்கி திறந்து வைப்பு

நெடுங்கேணி, நவ.27
நெடுங்கேணியில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவுக் கிராமிய வங்கி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி சங்கத் தலைவர் விஜய பிரபாகரன் தலைமையில் இடம்பெற்றது.

வவுனியா வடக்கு பிரதேச செயலரும், வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனும் இணைந்து நாடாவை வெட்டி வங்கியைத் திறந்து வைத்ததோடு புதிய கணக்கையும் ஆரம்பித்து வைத்தனர்.

இதில் வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் மதுமதி வசந்தகுமார், வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.இரவீந்திரநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (க-435)

## ஒட்டுசுட்டான் ஒழுங்கைகளை புனரமைக்குமாறு வேண்டுகோள்

முல்லைத்தீவு, நவ.27
ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கிராமங்களுக்குச் செல்லும் ஒழுங்கைகளை இனங்கண்டு புனரமைக்க வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த ஒழுங்கைகள் யாவும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் நிர்வாக வரம்புக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றன.

சில ஒழுங்கைகள் பாவிக்க முடியாதவாறு தடைசெய்யப் பட்ட நிலையில் காணப்படுகின்றன. சிலவற்றில் குப்பை கூளங்கள் போடப்பட்டுள்ளன. இதனால் அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலையுள்ளது.

மேலும் இங்குள்ள கிராம மக்கள் இந்தக் கிராமிய ஒழுங்கைகளையே பயன்படுத்தி வருகின்றனர். வயல் நிலங்களுக்குச் செல்வதற்கும், கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கும் இந்த ஒழுங்கை களே பயன்படுத்தப்பட்டு வரு கின்றன. சில கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாடப் போக்குவரத்துக்கும் இந்த ஒழுங்கைகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே நீண்ட காலமாகப் புனரமைப்பின்றிக் காணப்படும் இந்த ஒழுங்கைகளை உடனடியாகப் புனரமைத்து மக்களின் பாவனைக்கு விடு மாறு பிரதேச சபையிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-500)

# பூநகரி பள்ளிக்குடாவில் மீன்பிடித் துறைமுகங்கள்

பூநகரி, நவ.27
பூநகரி பள்ளிக் குடாவில் சுமார் 17 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மீன்பிடித்துறை முகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பூநகரி பள்ளிக்குடா பகுதி கடற்றொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 'சோஆ' நிறுவனத்தினால் 17 மில்லியன் ரூபா செலவில் இந்த இரண்டு மீன்பிடித் துறைமுகங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கட்டுமான வேலைகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவடையவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 350 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் கரைக்கு மீன்பிடிப் படகுகளைக் கொண்டு வர முடியாத நிலையில் சுமார் 500 மீற்றர் தூரத்தில் படகுகளை நிறுத்திவிட்டு கடற்றொழில் உபகரணங்களைச் சுமந்து கொண்டு வரவேண்டிய நிலையிலுள்ளனர்.

தற்போது இந்தத் துறைமுகங்கள் அமைக்கப்படுவதன் மூலமாக தொழிலாளர்கள் கரையை இலகுவாக அடைந்து தமது, கடற்றொழில் வள்ளங்களை இலகுவாக அணைக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரி பள்ளிக்குடா கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், வளர்மதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியன முன்வைத்த கோரிக்கைகளின் அடிப்படையிலேயே இந்தத் துறை முகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## கடற்றொழில் திணைக்களத்துக்கு உத்தியோகத்தர்கள் நியமனம்

கிளிநொச்சி, நவ.27
கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்துக்கு ஐந்து உத்தியோகத்தர்கள் கடற்றொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் தமது கடமைகளை கடந்த வாரத்திலிருந்து பொறுப்பேற்றுள்ளனர்.

இவர்களில் மூன்று கடற்றொழில் பரிசோதகர்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரும் கடற்றொழில் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரும் அடங்குவர்.

மேற்படி திணைக்களத்தில் பல வருடங்களாக நிலவி வந்த ஆளணிப் பற்றாக்குறைக்கு அமைச்சர் எடுத்துக்கொண்ட நடவடிக்கையினால் தீர்வு காணப்பட்டுள்ளது. (க-115)

## புதுக்குடியிருப்பில் கசிப்பு வைத்திருந்தவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட நபரொருவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், அதனைச் செலுத்தத் தவறினால் 8 மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஆறு போத்தல் கசிப்பைத் தம்முடன் வைத்திருந்த ஒருவர் கடந்த புதன்கிழமை கைது செய்யப் பட்டார். ஆரம்பக்கட்ட விசாரணைகளின் பின்னர் குறித்த நபர் சான்றுப் பொருளுடன் முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

இந்த நபருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டதுடன் இதனைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் 8 மாத காலம் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார்.

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை புதுக்குடியிருப்பு, தேராவில், மாணிக்கபுரம், றெட்பானா ஆகிய பகுதிகளிலும் தேவிபுரம், வள்ளிபுனம், நாவலடி ஆறு ஆகிய பகுதிகளில் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மேற்படி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## காப்பெற் வீதியாக புனரமைப்பு


மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்திலுள்ள ஊர் வீதியை அகலமாக்கி காப்பெற் வீதியாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்காக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் 160 மில்லியன் ரூபா நிதியை முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த வீதியால் மக்கள் பயணிப்பதற்கு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மழை பெய்தால் வீதியில் காணப்படும் குழிகளுக்குள் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

அதனையடுத்தே இந்த வீதியை காப்பெட் வீதியாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் குறிப்பிட்டார்.

இந்த வீதியை கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக், மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.சி.நிசார்தீன் ஆகியோர் பார்வையிட்டு வீதியை அகலமாக்குவது குறித்து கலந்துரையாடினர். (ச)




அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பொதுக்கூட்டம் மாளிகைக்காடு பிஸ்மில்லா றெஸ்டோரண்ட் மண்டபத்தில் நடைபெற்றது.
இந்தநிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதனை சங்கத்தின் முன்னாள் தலைவர் பிரேம்திலக பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ச-30)

## விசேட தேவையுடையோர் இன்னும் ஆயிரக்கணக்கில்

### கூட்டமைப்பு கூறுகிறது

மட்டக்களப்பு,நவ.28

வடக்கு,கிழக்கு மாகாணத்தில் விசேட தேவையுடையோர் ஆயிரக்கணக்கில் இன்றும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். அவர்களுக்கான எந்த விதமான அடிப்படை வசதிகளையும் அரசு செய்து கொடுக்க முன்வரவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கூறினார்.

விசேட தேவையுடையவர்களுக்கான கலாசார நிகழ்வு வந்தாறுமூலை விஸ்ணு மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

"-"

மக்களினது வாழ்வாதாரத்துக்கு ஏற்றாற்போல் மாற்றுவதே உண்மையான அபிவிருத்தியாகும்.

வெறுமனே அபிவிருத்தி என்ற போர்வையில் வீதிகளை திருத்துவதனாலோ, புனரமைப்பு செய்வதனாலோ மக்களுக்கான உண்மையான அபிவிருத்தியைக் காணமுடியாது. மாறாக அவர்களினது தேவைகளை அறிந்து செயற்பட்டு அவர்களை வாழ்வாதாரத்துக்கு ஏற்றாற்போல் மாற்றுவதே உண்மையான அபிவிருத்தியாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-31)

## காத்தான்குடியில் கடற் கொந்தளிப்பு


### 5 படகுகள் சேதம்; ஒருவர் காயம்

மட்டக்களப்பு,நவ.28

மட்டக்களப்பு, காத்தான்குடி கடலில் நேற்று புதன்கிழமை அதிகாலை 2 மணிக்கு ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் 5 படகுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. அவற்றின் இயந்திரங்கள் காணாமல் போயுள்ளன.

இந்தச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடற் கொந்தளிப்பால் பல லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று புதிய காத்தான்குடி ஜெய்லானி மீனவர் சங்க தலைவர் எம்.ஏ.றசூல் தெரிவித்தார்.



"-"

கடல் கொந்தளிப்பால் பல லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

காத்தான்குடி,ஏத்துக்கால் கடற்கரையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகளே அலைகள் கரைக்கு வந்தமையால் சேதமடைந்துள்ளன என்று அவர் கூறினார்.

இந்தப் படகுகளிலொன்றை கடலுக்குள் செலுத்துவதற்காக தள்ளிக்கொண்டிருந்த மீனவரே படுகாயமடைந்துள்ளார். (ச)

## நெல் சுத்திகரிப்பு நிலையம் நீண்ட கால 'உறக்கத்தில்'

### தம்பட்டை மக்கள் விசனம்

அம்பாறை,நவ.28

அம்பாறை,தம்பட்டை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட விதை நெல் சுத்திகரிப்பு நிலையம் பல ஆண்டுகாலமாக பயன்பாடுகள் இன்றி மூடப்பட்டுக் காணப்படுகிறது என்று அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் பல மில்லியன் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்பட்ட இந்த நெல் சுத்திகரிப்புக் கட்டடம் அம்பாறை மாவட்ட முன்னாள் அரச அதிபர் அசங்க அபேவர்தனவினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

எனினும் இந்தக் கட்டடத்தில் உள்ள விதைநெல் சுத்திகரிக்கும் பகுதி மற்றும் நெல் களஞ்சியசாலை உள்ளிட்டவை இதுவரை இயங்காத நிலையிலேயே இருந்து வருகின்றன.

இதற்காக வழங்கப்பட்ட இயந்திரத் தொகுதிகள், நெல் அறுவடை இயந்திரம் மற்றும் உபகரணங்கள் பழுதடையும் நிலையில் காணப்படுகின்றன என்று மக்கள் குறிப்பிட்டனர்.

எனவே இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## புதிய முறையில் இறால்கள் பிடிப்பு



மட்டக்களப்பு வாவியில் தற்போது இறால் பருவகாலம் ஆரம்பமாகியுள்ளதால், கரை வலை வீச்சு மீனவர்கள் புதிய முறையைப்பயன்படுத்தி இறால்களை பிடித்து வருகின் றனர்.

இறால்களைப் பிடிப்பதற்காக கல்லடிப்பாலம், கோட்டைமுனைப்பாலம் மற்றும் புதிய பாலங்களின் கீழான ஆற்றினுள் மண்மூடைகளைக் கொண்டு மீனவர்கள் மேடையமைத்து வருகின்றனர்.

இரவு வேளைகளில் பிரகாசமான எரிலாம்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் இறால்கள் ஒளியை நாடிவரும்போது, அவை வலை வீசிப் பிடிக்கப்படுகின்றன என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் காலத்தில் ஒரு இரவில் மாத்திரம் மீனவர் ஒருவர் சராசரியாக 4 கிலோ முதல் 6 கிலோ வரை இறால்களைப் பிடிக்கின்றனர்.

இவ்வாறு பிடிக்கப்படும் பெரிய இறால்கள் ஒரு கிலோ 400 ரூபா முதல் 600 ரூபா வரை மட்டக்களப்பில் விற்பனையாகின்றன என்று மீன வர்கள் கூறுகின்றனர். (ச)

## பொலிஸார் கைகலப்பு; விசாரணை ஆரம்பம்

அம்பாறை,நவ.28

அம்பாறை, சவளக்கடை பொலிஸ் நிலையத்தில் நான்கு பொலிஸார் மதுபோதையில் கைகலப்பில் ஈடுபட்டதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பான விசாரணைகளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் மேற்கொண்டு வருகிறார்.

இந்தப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கிடையே திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து கைகலப்பு இருவர் காயமடைந்த நிலையில் ஒருவர் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையிலும் மற்றவர் நாவிதன் வெளி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து உடனடியாக பொலிஸ் நிலையத்துக்கு சென்ற உதவி பொலிஸ் அத்தியட்சகர் சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து கைகலப்பில் ஈடுபட்டமை குறித்து விசாரணைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஆசிரியர்களுக்கு சாரணியப் பயிற்சி

மட்டக்களப்பு,நவ.28

திருகோணமலை மாவட்ட சாரணர் சங்கம் திருமலை மாவட்ட ஆசிரியர்களுக்கு சாரணிய பயிற்சிகளை வழங்கவுள்ளது.

பாடசாலைகளில் சாரணர் குழுக்களை ஏற்படுத்தவும், அவற்றை வழிநடத்தி மாணவர்களிடையே சிறந்த ஆளுமைகளையும் நேரான மனப்பாங்குகளையும் வழங்கி வழிநடத்தவே இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிகள் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் திருகோணமலை வலயக் கல்வி பணிப்பாளர் ந.விஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ச-291)

## பொலிஸார்- மக்களிடையே கிழக்கில் சிறந்த நல்லுறவு

### பூஜித ஜெயசுந்தர கூறுகிறார்

மட்டக்களப்பு,நவ.28

கிழக்கு மாகாணத்தில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் வேலையை கடந்த ஒன்றரை வருடமாக மேற்கொண்டுள்ளேன் என்று சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நடைபெற்ற மட்டக்களப்பு பொலிஸாரின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட பின் னர், மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 30 வருட கால போரின் போது பொதுமக்களுக்கும் பொலி ஸாருக்கும் இடையில் நெருக்கம் இருக்கவில்லை. போர் காலத்தில் மக்களைப் பாதுகாக்கும் வேலையையே பொலிஸார் மேற்கொண்டனர்.

கடந்த காலப் போரின்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் இடைவெளி காணப்பட்டது. இந்த இடைவெளி தற்போது இல்லை.

பொருளாதாரத்திலும், உட்கட்டமைப்பிலும் மக்களின் வாழ்வாதாரத்திலும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுவது போல பொலிஸ் சேவையிலும் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படல் வேண்டும்.

பொலிஸ் சேவையில் எங்கும் கடமையாற்ற ஆயத்தமாக இருக்கவேண்டும். அந்த வகையில் பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கமைய நான் வட மாகாணத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளேன்.-என்றார். (ச)

## இரண்டு பொலிஸார் பதவி நீக்கம்

அக்கரைப்பற்று பொலிஸாரால் வன்புணர்வுக் குற்றச்சாட்டுத் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் இருந்து தப்பியோடிய சம்பவம் குறித்து அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸார் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று, பதூர்நகர் பிரதேசத்தில் கடந்த 16 ஆம் திகதி பெண் ஒருவரை வண்புணர்வு செய்ய எத்தனித்த ஒருவரை கைது செய்து வாக்கு மூலம் பதிந்து கொண்டபோது, அவருக்கு வலிப்பு ஏற்பட்டது.

அதனையடுத்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிகப்பட்டதையடுத்து அவர் அங்கிருந்து யன்னல் வழியாக தப்பியோடிய நிலையில் 17 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்

இந்தச் சம்பவம் தொடர்பாக குறித்த இரு பொலிஸாரும் கவனவீனமாகச் செயற்பட்டதால் குறித்த கைதி தப்பியோடியுள்ளார். அதனால் சிறு குற்றப்பிரிவில் கடமையாற்றி வந்த இரு பொலிஸாரும் உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (ச)

# 2014 இற்கான பட்ஜெட்டில் பெண்கள் புறக்கணிப்பு

*நாடாளுமன்றில் ஐ.தே.க. குற்றச்சாட்டு*



"நாட்டின் சனத்தொகையில் 51.5 சதவீதம் உள்ள பெண்களுக்குக் குறைந்த அளவு நிதியே வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணுக்கு வெறும் 121 ரூபா என்ற அடிப்படையிலேயே இந்தப் பங்கீடு உள்ளது" இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் மேலதிக கேள்வியை எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"அரசில் மொத்தமாக 60 அமைச்சுகள் இருக்கின்றன. இந்த அமைச்சுகளில் சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் 45ஆவது இடத்திலேயே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டில் 51.5 சதவீதமாக உள்ள பெண்களுக்கு 45 ஆவது இடத்திலேயே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒரு பெண்ணுக்கு வெறும் 121 ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 121 ரூபா போதுமானதா?

இந்தக் கேள்விக்கு சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த பதிலளிக்கையில், "எமது அமைச்சுக்கு இதைவிடவும் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் அதனையிட்டு நாம் மகிழ்ச்சியடைவோம். பெண்கள் அபிவிருத்தி தொடர்பில் எமது அமைச்சினூடாக மட்டுமல்ல, வேறு வேறு அமைச்சுகள் ஊடாகவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

அத்துடன், பொருளாதார மற்றும் தொழில்சார் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இலகுவானவாறு பெண்கள் அரசு வங்கி ஒன்று கடந்த வருடம் 7ஆம் மாதம் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பெண்களுக்கான நிதி ஒதுக்கீடு பற்றி நீங்கள் கூறினீர்கள். நாட்டிலுள்ள எல்லா பெண்களும் ஒரே தரத்தில் இல்லை. அவர்கள் வெவ்வேறு தரத்திலும், தகுதியிலும் இருக்கின்றனர்" - என்றார்.

# இலங்கையில் 8 ஆயிரத்து 500 பேர் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டுள்ளார்கள்

*எய்ட்ஸ் தடுப்பு ஆராய்ச்சி மையம் தகவல்*

இலங்கையில் சுமார் 8 ஆயிரத்து 500 பேர் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என எய்ட்ஸ் தடுப்பு ஆராய்ச்சி மையம் அண்மையில் நடத்திய ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.


கடந்த பெப்ரவரி மாதம் நாடெங்கும் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு கடந்த ஒக்ரோபர் மாதம் முடிவடைந்ததாகவும் அந்த ஆய்வின் அடிப்படையில் நாடெங்கும் 8 ஆயிரத்து 500பேர் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்தாகவும் எய்ட்ஸ் தடுப்பு ஆராய்ச்சி மையத்தின் பணிப்பாளர் டாக்டர் சிசிரலியனகே தெரிவித்திருக்கிறார்.

ஓரினச்சேர்க்கையின்மூலம் எய்ட்ஸ்நோய் பரவும் அபாயம் தீவிரமாகியுள்ளதாகவும் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி வரும் சர்வதேச எய்ட்ஸ் தினத்தில் நாடெங்கும் எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

விபசார விடுதிகளைப் பொறுத்தமட்டில் முன்னர் 45 ஆயிரமாக இருந்த விடுதிகளின் எண்ணிக்கை இப்போது 15ஆயிரமாகக் குறைந்துள்ளதாகவும் தெரிவித்த டாக்டர் சிசிர லியனகே, விபசார விடுதிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளபோதிலும் வேறு வழிகளில் விபசாரத் தொழில் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

# வன்புணர்வு குற்றச்சாட்டில் 252 பேருக்கு சிறைத்தண்டனை

*கடந்த வருடத்தில் மட்டும் என்கிறார் அமைச்சர் கஜதீர*



2012 ஆம் ஆண்டில் பெண்களை வன்புணர்வு செய்த குற்றச்சாட்டில் 252 பேர் சிறைகளில் வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் புனர்நிர்மாண மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன் றத்தில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் கஜதீர இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2005 தொடக்கம் 2012 வரை பெண்களை வன்புணர்வுக்கு உட்படுத்திய ஆயிரத்து 718 பேர் சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டனர். இதில் ஆகக்கூடிய தொகையாக 319 பேர் 2008ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறைத் தண்டனை அனுபவித்து வருபவர்களில் 463 பேர் 22க்கும் 30 க்கும் இடைப்பட்ட வயதினராவர். 691 பேர் 30க்கும் 40க்கும் இடைப்பட்டவர்கள். 481 பேர் 40க்கும் 50க்கும் இடைப்பட்டவர்கள். 50 பேர் 50க்கும் 60க்கும் இடைப்பட்ட வர்கள். 33 பேர் 60 வயதைத் தாண்டியவர்கள் - என்றார்.

# தெனியக்கொடவில் மனைவி தாக்கி கணவன் மரணம்

கணவன்-மனைவிக்கிடையிலான சண்டையில் மனைவி பொல்லால் தாக்கியதில் கணவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பெலியத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெனியகொட - கெகுலுகமுவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய, உயிரிழந்தவரின் மனைவி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# சந்தேகநபர்கள் இருவர் குளத்தில் மூழ்கிச் சாவு

*கான்ஸ்டபிள், மனைவி படுகொலையுடன் தொடர்புடையவர்கள்*

கம்புறுபிட்டிய, வலஸ்முல்லையில் பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் அவரது மனைவி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன்தொடர்புடையமேலும்இரு சந்தேகநபர்கள் குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்றுபொலிஸார்தெரிவித்தனர்.

திஸ்ஸமாராகம, பத்தேகமுவையில் வைத்து கைது செய்யப்பட்ட இருவரும் தெனகம குளத்திற்கு அருகில் தாம் மறைத்து வைத்திருக்கின்ற கைக்குண்டு மற்றும் ஆயுதங்களைக் காண்பிப்பதற்காக பொலிஸாரினால் அழைத்துச் சென்றபோதே இவ்விருவரும் குளத்தில் திடீரென பாய்ந்துள்ளனர்.

அவ்விருவரையும் காப்பாற்றுவதற்கு பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் குளத்தில் பாய்ந்த போதும் அந்த முயற்சி கைகூடவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் அவரது மனைவி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏற்கனவே உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதான சந்தேகநபர் இது வரை கைதுசெய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# படையிலிருந்து தப்பியவர்களை பிடிக்க தீவிர தேடுதல் வேட்டை

*நாடெங்கும் 20 ஆயிரம் பேர் மறைந்துள்ளனராம்*

இராணுவத்திலிருந்து தப்பியோடி நாடெங்கும் மறைந்து வாழும் சுமார் 20 ஆயிரம் சிப்பாய்களைத் தேடிப்பிடிக்கும் பணியை இராணுவப் பொலிஸ் பிரிவு தீவிரமாக்கியுள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தேடுதல் பணிகளுக்காக இராணுவம் பொலிஸ் பிரிவுக்கு 40 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

விடுமுறையில் சென்ற ஏராளமான சிப்பாய்கள் விடுமுறை முடிந்து பணிக்குத் திரும்பவில்லை. அவர்களும் இராணுவத்தை விட்டுத் தப்பியோடியவர்களின் வரிசையிலேயே சேர்க்கப்பட்டுள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தவை வருமாறு:-

தேடுதலின்போது கைது செய்யப்படுபவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவசியமானவர்கள் இராணுவ நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள்.

2012 ஜூன் முதலாம் திகதி முதல் 2013 மே 13 வரை நாட்டின் பல பகுதிகளில் நடந்த மனிதக் கொலைகளில் 16 முன்னாள் சிப்பாய்களும் பெண்கள் துஷ்பிரயோகச் சம்பவங்களில் 78 பேரும் கொள்ளைச் சம்பவங்களில் 52 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் தப்பியோடியவர்களின் முழுத் தொகையில் 2 தொடக்கம் 3 சதவிகிதமானவர்கள். தொடர்ந்தும் இத்தகைய குற்றச்செயல்கள் நடைபெறாமல் தடுப்பதற்காகவே தப்பியோடியவர்களைத் தேடிப் பிடிக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார்.

# வெள்ளம், மண் சரிவுகளால் கடந்த வருடம் 5இலட்சத்து 50 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

*இடர் முகாமைத்துவ அமைச்சர் தெரிவிப்பு*

கடந்த வருடம் நாடெங்கும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளால் ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 361 குடும்பங்களைச் சேர்ந்த 5 இலட்சத்து 50 ஆயிரத்து 238 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

இடம்பெயர்ந்தவர்களின் நிவாரணப் பணிகளுக்கு அரசு 18 கோடி ரூபாவை செலவிட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏழு நாள்களாகத் தொடர்ந்து வழங்கப்பட்ட சமைத்த உணவுக்காக 15 கோடி ரூபா செலவிடப்பட்டது.

அத்துடன், பாதிக்கப் பட்ட குடும்பங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஏழு நாள்களுக்கு உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

அநுராதபுர மாவட்ட ஐ.தே.க. நாடாளுன்ற உறுப்பினர் ஹெரிஸன் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிகையிலேயே அமைச்சர் மகிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்தார்.

# 4 ஆயிரம் கிராமசேவையாளர்களின் வெற்றிடங்கள் அடுத்தமாதம் நிரப்பப்படும்

*போட்டிப்பரீட்சை/ நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இறுதித் தேர்வு*

நாடெங்கும் கிராமசேவையாளர்களுக்கு நிலவும் 4 ஆயிரத்து 22 வெற்றிடங்களை அடுத்த மாதம் நிரப்ப அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நடந்து முடிந்த போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படுமெனவும், பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் மாவட்ட மட்டத்தில் நடந்துமுடிந்துள்ளதாகவும், நேர்முகப்பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட புள்ளிகள் அடுத்த வாரம் பரீட்சைகள் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படுமெனவும் அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

பரீட்சைகள் ஆணையாளரின் இறுதித் தேர்வு முடிந்ததும் இந்த வெற்றிடங்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# பேலியகொடை நகர சபை பட்ஜெட் மீண்டும் தோல்வி

பேலியகொடை நகர சபையின் தலைவர் நிஹால் ஆனந்த பெரேராவினால்( ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு) இரண்டாவது தடவையாக நேற்றுப் புதன்கிழமை மீண்டும் தாக்கல் செய்யப்பட்ட வரவு -செலவுத்திட்டம் மூன்று வாக்குகளினால் தோல்வியடைந்துள்ளது.

ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட இந்த சபையின் வரவு - செலவுத்திட்டத்திற்கு எதிராக ஆளும் கட்சியைச்சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் எதிர்க்கட்சியை சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் எதிராக வாக்களித்தனர்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com


## ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் திட்டமும் பயன்பாடும்

ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கென இப்போது நடைமுறையில் இருந்துவரும் புலமைப் பரிசில் பரீட்சை முறையைக் கைவிடுவது பற்றியும், அதற்கு பதிலாகப் மேல் வகுப்புகளில் குறிப்பாக, எட்டாம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையொன்றை நடத்துவதன் சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆராயப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன சில நாள்களுக்கு முன்னர் கருத்து வெளியிட்டிருந்தார்.

கல்வியாளர்களும் புத்திஜீவிகளும் கூட 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் திட்டத்தை வெகுவாகக் கண்டித்தும், அதனை உடனடியாக கைவிடக் கோரியும் அறிக்கைகள் விடுத்திருந்தார்கள்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையானது பச்சிளம் பிள்ளைகளை உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கி வருவதாக அவர்கள் கருதுகிறார்கள். நாலாம் ஆண்டை முடித்து 5 ஆம் ஆண்டு படிப்பில் கால் வைக்கும் பத்து வயதுப் பாலகர்கள் அந்த ஆண்டு முழுவதுமே ஏதோ பொறியொன்றுக்குள் சிக்கிவிட்ட பூனைகள் போல் தவிக்கிறார்கள். ஒரு பக்கம் பெற்றாரின் ஆசை, எப்படியும் பிள்ளையை பரீட்சையில் ஒப்பேற்றி வெட்டுப்புள்ளியைத் தாண்டச் செய்துவிட வேண்டும் என்ற அங்கலாய்ப்பு. அதனால் அந்தப் பிள்ளை மட்டுமல்ல அதன் பெற்றாரும் மன அழுத்தத்துக்குள்ளாகி விடுகிறார்கள். பிள்ளை சித்திபெற்றால் தமக்கு பெருமை என்பது ஒரு புறமிருக்க, பிள்ளையின் மேற்படிப்புக்கு நல்லதொரு கல்லூரியில் இடம்பிடித்து விடலாம் என்ற நப்பாசை. அதற்காக அவர்களும் நித்திரை முழிக்கிறார்கள், சேர்ந்து படிக்கிறார்கள், தனியார் கல்வி நிலையங்களுக்கு அழைத்து செல்கிறார்கள், தேவையானவற்றை வாங்கிக் கொடுக்கிறார்கள், கல்விக் கட்டணங்களையும் மகிழ்ச்சியுடன் செலுத்துகிறார்கள். வசதியுள்ளவர்கள் ஆசிரியர்களை தம் வீடுகளுக்கு அழைப்பித்து கட்டணமும் செலுத்திப் பிள்ளைகளைப் படிப்பிக்கிறார்கள். இந்த நிலையில் அந்தப் பிள்ளை தோல்வியுற்றால், அவர்களின் நிலை எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அப்படியான ஒரு நிலைக்கு உள்ளான ஒரு தந்தைதான் தென்னிலங்கையில் தம் பிள்ளை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாமையைப் பொறுக்க முடியாமல் இரும்புக் கம்பியை பழுக்க சூடேற்றி சூடு வைத்தார் என்பதாக வந்த செய்தி தெரிவித்தது.

எனவே இந்த புலமைப் பரிசில் பரீட்சையால் பிள்ளைகள் மட்டுமல்ல பெற்றாரும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். அதைவிட அவர்களின் வகுப்பாசிரியர்கள், அவர்கள் படிக்கும் பாடசாலையின் அதிபர்களும்கூட நெருக்குதல்களுக்கு உள்ளாகின்றனர். ஐந்தாம் ஆண்டு பிள்ளைகளுக்குப் படிப்பிக்கும் ஆசிரியர்கள் எவ்வாறேனும் சில பிள்ளைகளையாவது சித்தியடையச் செய்துவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதற்காக முயற்சி எடுக்கும் ஆசிரியர்களும் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் அதிபர்களையும் பார்க்கிறோம். சிறந்த பெறுபேறுகளைப் பெறும் பாடசாலைகள் உள்ள கல்விப் பிரிவுகளின் கல்வி அதிகாரிகளும்கூட பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறார்கள். அவ்வாறு இல்லாதவிடத்து இந்த கல்விசார் சமூகமும் உளம்சார்ந்த அழுத்தங்களுக்குள்ளாகும் நிலை ஒன்று இருக்கவே செய்கின்றது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து சிறந்த பாடசாலைகளில் சேர்த்துவிடும் பிள்ளைகளில் அநேகர் பெரும்பாலும் அதற்குப் பின் சோபிக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. சூழ்நிலைத் தாக்கத்தினால் சோதனையில் சித்தியடைந்தவர்கள் பின்தங்கிவிட இயல்பாகவே திறமையுள்ளவர்கள் முன்னேறுவதைப் பார்க்கிறோம்.


எனவேதான் எந்த வகையில் நோக்கினாலும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை சிறார்களின் முன்னேற்றத்துக்கு உதவுவதாகத் தெரியவில்லை.

அதனால்தான் அதனை இரத்து செய்துவிடும்படி பலரும் வற்புறுத்துகிறார்கள். எட்டாம் ஆண்டில் இவ்வாறான பரீட்சையொன்று வைப்பதாயின், சிறுவர்கள் ஓரளவுக்கு முதிர்ச்சியடைந்த நிலையில், தமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அறிவுள்ளவர்களாகக் காணப்படலாம். அந்த நிலையில் புலமைப் பரிசில் என்பதை வெறும் எழுத்துப் பரீட்சையென்று மட்டும் வைத்துக்கொள்ளாமல் சிறுவர்களின் ஏனைய திறமைகளையும் அவர்களுக்கு தெரியாமலே கணிப்பீடு செய்து புள்ளிகள் வழங்கும் ஒருமுறையைக் கைக்கொள்ளலாம். உதாரணமாக வரவு, ஒழுக்கம், கீழ்படிவு, முன்முயற்சி மற்றும் விளையாட்டுத் திறமைகளுக்கு புள்ளிகள் வழங்கும் ஒரு முறை கொண்டுவரப்படலாம்.

அவ்வாறாயின் சிறந்த ஆளுமையுள்ள எதிர்கால நற்பிரசைகள் உருவாகுவதற்கு இந்த புலமைப் பரிசில் திட்டம் உதவியதாக அமையும் என்று நம்பமுடியும்.

# காலம் கடந்த ஞானம்

ராஜீவ் காந்தியைக் கொல்லப் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுக்கு பற்றரி வாங்கிக் கொடுத்தார் என்பதுதான் பேரறிவாளன் மீதான குற்றச்சாட்டு. இந்த பற்றரி என்ன நோக்கத்துக்காக பயன் படப்போகிறது என்பது தெரிந்தே அவர் வாங்கிக் கொடுத்தார் என்ற அடிப் படையில்தான் அவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



பரபரப்பும் அரசியல் முக்கியத்துவமும் நிறைந்த ராஜீவ் காந்தி கொலை வழக்கில், முக்கிய குற்றவாளிகளான பிரபாகரனோ, பொட்டு அம் மானோ, சிவராசனோ, தனுவோ பிடிபடவே இல்லை. நிச்சயமாகத் தொடர்புடையவர்கள் என்று கூறப் பட்டவர்களில், நளினியைத் தவிர மற்றவர்கள் தண்டனைக் காலத்தையும் கழித்து விட்டனர்.

எஞ்சி இருப்பவர்கள் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பேரறிவாளன், முருகன், சாந்தன் மூவர் மட்டுமே. இந்த நிலையில் ராஜீவ் கொலை வழக்கில் பேரறிவாளனின் வாக்குமூலம் அவர் சொன்னபடியே பதிவு செய்யப்படாமல், திருத்திப் பதிவு செய்யப்பட்டது என்று சி.பி.ஐ. முன்னாள் அதிகாரியும் இந்த வழக்கை விசாரித்தவருமான வி.தியாகராஜன் பேட்டி அளித்திருக்கிறார்.

ராஜீவ் காந்தியைக் கொல்லப் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுக்கு பற்றரி வாங்கிக் கொடுத்தார் என்பதுதான் பேறறி வாளன் மீதான குற்றச்சாட்டு. இந்த பற்றரி என்ன நோக்கத்துக்காக பயன் படப்போகிறது என்பது தெரிந்தே அவர் வாங்கிக் கொடுத்தார் என்ற அடிப்படையில்தான் அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொலை குறித்து அவர் அறிந்திருந்தார் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு பொலிஸாரைச் சேர்ந்தது. இதனால் வாக்குமூலத்தை மாற்றி எழுதினோம் என்று விசாரணையில் தொடர்புடைய காவல் துறை அதிகாரி இன்று சொல்கிறார்.

### மனச்சாட்சியை மூடி மறைக்க முடியாது

உயர்அதிகாரிகளின் நெருக்குதல் காரணமாக, அதிகாரி தியாகராஜன் பேறறிவாளனின் வாக்குமூலத்தைத் திருத்தி எழுதியிருக்கலாம். தனது பதவிக்கு ஆபத்து வரும் என்ற பயத்தினால் இத்தனை காலம் மனச்சாட்சியை அவர் உறங்க வைத்திருக்கலாம். 22 ஆண்டுகள் கழித்து, தனது மனச்சாட்சியை விழிக்கச் செய்து இப்போதுதான் அவர் மனம் திறந் திருக்கிறார். அவரது பேட்டி வேறு பல கேள்விகளை எழுப்புகிறது. வாக்குமூலம் திருத்தி எழுதப்பட்ட உண்மை தியாகராஜனுக்கு மட்டுமல்ல, நிச்சயமாக பேறறிவாளனுக்கும் தெரிந்திருக்க வேண்டும். தனது வாக்குமூலத்தை தியாகராஜன் முழுமையாக பதிவு செய்யவில்லை என்றோ, மாற்றி எழுதியிருக்கிறார் என்றோ பேறறிவாளன் நீதிபதி முன்பாக சொல்லியிருந்தால் மட்டுமே, இப்போது அதிகாரி தியாகராஜனின் மனச்சாட்சி விழிப்புக்குப் பயன் கிடைக்கும். அவ்வாறு பேறறிவாளன் தனது வாக்குமூலம் குறித்த வழக்கின்போது எந்த மறுப்பும் சொல்லாமல் இருந்திருப்பாரேயானால், இப்போது தியாகராஜன் சொல்லும் மனச்சாட்சி விழிப்பு வெறும் பரபரப்பு செய்தியாக மட்டுமே முடிந்துபோகும். சட்டத்தின் முன் னால் இவரது காலம்தாழ்ந்த மனச் சாட்சி விழிப்பு எடுபடாது.

### இவர்களுக்கு யார் கொடுப்பார் தண்டனை?

இருபது ஆண்டுகளுக்கு மேலாக, தூக்கிலிடப்படாத தூக்குத் தண்டனைக் கைதியை விடுவிக்க வேண்டும் என்று பலதரப்பிலும் குரல்கள் எழும் இவ் வேளையில், இத்தகைய பொய்யான வாக்குமூலம் தயாரிப்புத் தொடர்பாக ஒரு காவல்துறை அதிகாரியே ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும் போது, ஏற்கெனவே நடந்தேறிய விசாரணைகள் அனைத்தும் பொய்யாகிவிடுகின்றன. மீண்டும் மறுவிசாரணையைத் தொடங்க வேண்டும் அல்லது வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலைசெய்ய வேண்டும் என்ற நிலைக்கு நீதித்துறை தள்ளப்படுகிறது. அது சாத்தியம்தானா என்பது அடுத்த கேள்வி.

வாக்குமூலத்தைத் திருத்திய அதிகாரி தியாகராஜனுக்கு என்ன தண்டனை? இவ்வாறு திருத்தி எழுதச் சொன்னவர்களுக்கு என்ன தண்டனை? தூக்குத்தண்டனைக் கைதியாக, நாளும் பொழுதும் செத்துப் பிழைத்துக்கொண்டிருக்கும் ஒரு கைதியின் வாழ்க்கை குறித்த உண்மையைச் சொல்ல 22 ஆண்டு காலம் காத்திருக்க வேண்டியதன் அவசியம் என்ன? பேறறிவாளன் தூக்கிலிடப்பட்டிருந்தால், அதிகாரி தியாகராஜனின் மனச்சாட்சி விழித்திருந்தால் என்ன, அப்படியே கண் மூடிப்போயிருந்தால்தான் என்ன?

### காலம் கடந்த மனச்சாட்சியின் விழிப்பு

அதிகாரிகளின் மனச்சாட்சி இவ்வளவு தாமதமாக விழிப்பது அவர்களுக்கும் நல்லதல்ல, குற்றம் சாட்டப்பட்டவருக் கும் நல்லதல்ல; இத்தகைய காலம் கடந்த ஞானம், அரசியலாகத்தான் பார்க்கப்படுமே தவிர, மனச்சாட்சியின் விழிப்பாகப் பார்க்கப்படுவதில்லை.

கோத்ரா கலவரத்தை அடக்காமல் வேடிக்கை பார்க்கச் சொன்னதாக குஜராத் முதல்வர் மோடி என்னிடம் கூறினார் என்று இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு சொல்வதும், ஓய்வு பெற்று வெளியே வந்த பிறகு ராணுவத்தில் ஊழல் நடந்தது என்று பேசுவதும், கொலை செய்த நபரைப் பிடிக்க முடியாமல் அப்பாவிகள் இருவரைப் பிடித்து சிறையில் அடைத்தேன் என்று பல ஆண்டுகள் கழித்து ஒப்புக்கொள்வதும், வாக்குமூலத்தைத் திருத்தினேன் என்று 22 ஆண்டுகளுக்குப் பிறகு சொல்வதும், அதிகாரிகளை நேர்மையானவர்களாகவோ, மரியாதைக்குரியவர்களாகவோ ஆக்காது. சட்டமும் இவர்களுக்குத் துணை நிற்காது. சுய விளம்பரம் தேடிக் கொள்ளவும், அரசியல் சாயம் பூசிக் கொள்ளவும்தான் இவை உதவும். காலம் கடந்த மனச்சாட்சியின் விழிப்பு அரசியல்நிறம் கொள்கிறது.



**வாக்குமூலத்தைத் திருத்திய அதிகாரி தியாகராஜனுக்கு என்ன தண்டனை? இவ்வாறு திருத்தி எழுதச் சொன்னவர்களுக்கு என்ன தண்டனை? தூக்குத்தண்டனைக் கைதியாக, நாளும் பொழுதும் செத்துப் பிழைத்துக்கொண்டிருக்கும் ஒரு கைதியின் வாழ்க்கை குறித்த உண்மையைச் சொல்ல 22 ஆண்டு காலம் காத்திருக்க வேண்டியதன் அவசியம் என்ன? பேரறிவாளன் தூக்கிலிடப்பட்டிருந்தால், அதிகாரி தியாகராஜனின் மனச்சாட்சி விழித்தால் என்ன, அப்படியே கண் மூடிப்போயிருந்தால்தான் என்ன?**

நன்றி: தினமணி

க.பரமேஸ்வரன்

# வடக்கு மாகாணத்தின் மீன்பிடித்துறை அபிவிருத்தி



ஒரு நாட்டில் கிடைக்கும் இயற்கை வளங்களை திட்டமிடல் அடிப்படையில் பயன்படுத்திக் கொள்வது அந்த நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு உதவும்.

இந்த அடிப்படையில் மிகப்பெரும் இயற்கை வளமாகவும், புதுப்பிக்கக்கூடிய வளமாகவும் காணப்படும் கடல்வாழ் உயிரினங்களை குறிப்பாக மீன் வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் போட்டிபோட்டு முனைப்புடன் நடைபெற்று வருவதைக் காண முடிகிறது.

புராதன காலம் தொட்டு இன்றுவரை கடல் வளங்களை சொந்தமாகக் கொண்ட நாடுகள் மட்டுமன்றி கடற்பகுதியை சொந்தமாகக் கொண்டிராத நாடு களும் மீன் சார்ந்த உற்பத்திச் செயற் பாடுகளில் ஈடுபட்டிருப்பதைக் காண முடிகிறது.

இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவுக்குத் தென் கிழக்கே அமைந்துள்ளது. இதன் புவியியல் தரைத்தோற்ற அமைவிடம் காரணமாக மீன்பிடித்தலுக்கு சாதகமான பல சிறப்பம்சங்களைக் கொண்டு விளங்குகிறது. ஏறக் குறைய 65,610 சதுரகிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இந்தத் தீவைச் சூழவுள்ள கடற்பரப்பின் அளவு ஏறக்குறைய 5,36,000 சதுரகிலோமீற்றர் ஆகும். இது இந்தத் தீவின் நிலப்பரப்பைப் போல 8 மடங்குக்கு அதிகமான பிரதேசத்தைக் கொண்டிருப்பது கடல் வளத்தின் புவியியல் அமைப்பை எடுத்துக் காட்டுகின்றது. இந்த வகையில் மீன்பிடித் துறையின் முக்கிய மையமாகத் திகழும் வடக்கு மாகாணம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய நான்கு கடற்றொழில் விரிவாக்க அலுவலர் மாவட்டங்களைக் கொண்டதாகும். இலங்கையின் மொத்தக் கரையோரத்தின் நீளத்தில் (1,920கிலோ மீற்றர்) வட பகுதியானது கிட்டத்தட்ட 806கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்டதாகும். மொத்தக் கரையோர நீளத்தில் இது 41.9 வீதமாகும். அதாவது தீவுகள், குடாக்கள் உட்பட யாழ்.மாவட்டம் 579 கிலோ மீற்றர் நீளத்தையும் மன்னார் மாவட்டம் 157 கிலோ மீற்றர் நீளத்தையும் , முல்லைத்தீவு மாவட்டம் 70 கிலோ மீற்றர் நீளத்தையும் கொண்டதாகும். இதைவிட கிட்டத்தட்ட 40 கிலோ மீற்றர் அகலம் கொண்டதும், ஆழம் குறைவானதுமான கண்டமேடைகளையும் பேதுரு மீன்பிடி மேடையின் 1/3 பகுதியையும், மன்னார் முத்து மேடையையும் இந்த மாகாணம் கொண்டிருப்பது மீன்பிடி புவியியல் சார்ந்த சாதக நிலையை எடுத்துக் காட்டுகின்றது.

இத்தகைய வளங்களை தன்னகத்தே கொண்டிருந்த போதிலும் கடந்த மூன்று தசாப்த காலமாக இந்த மாகாணத்தில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக மீன்பிடித்துறை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. எனவே அன்றாட ஜீவனோபாய தொழிலையும், வருமானத்தையும் நம்பி வாழும் பல ஆயிரக் கணக்கான மீனவக் குடும்பங்களின் சமூக, பொருளாதார வாழ்வாதார அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லும் பெரும் பொறுப்பு வடமாகாண சபை முன்னே காத்திருக்கின்றது.



### வினைத்திறன் கொண்ட கட்டமைப்புக்களை உருவாக்குதல்

♦ வடக்கு மாகாணத்தில் பல நூற்றுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கிராம மட்டத்தில் அமைக்கப்பட்டு இயங்கி வந்தன. தற்போது நிர்வாகக் குறைபாடுகள் மற்றும் பொருத்தமான ஆளணி இல்லாததன் காரணமாக பல சங்கங்கள் எந்தவித சேவையும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவே கிராம மட்டத்திலான இந்தச் சங்கங்களைப் புனரமைத்து பிரதேச ரீதியான சமாசங்களும், அதனை நெறிப்படுத்துவதற்கு சம்மேளனத்தையும் அமைத்து அதனை வினைத்திறன் கொண்ட கட்டமைப்பாக இயங்க வைக்க அது நேரடியாக மாகாண கடற்றொழில் துறை அமைச்சரின் கண்காணிப்பில் இருப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்வதுடன் இந்தச் சங்கங் களின் நிதி, நிர்வாக விடயங்களில் அதிக கவனமெடுத்து கூட்டுறவு ரீதியான செயற்பாட்டை விருத்தி செய்தல்.

### இரு தரப்பு சந்திப்புக்களை ஏற்படுத்தல்

♦ அண்மைக் காலமாக குறிப்பாக 2009 ஆம் ஆண்டின் பின்னர் வடபகுதி கடற்பரப்பினுள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன் பிடிப்பதும் இலங்கை கடற்படையினால் தாக்கப்படுவதும் கைது செய்யப்படுதல் தொடர்பான சம்பவங்களும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. குறிப்பாக பருத்தித்துறை, முல்லைத்தீவு, நெடுந்தீவு, மன்னார் போன்ற இடங்களிலுள்ள கடல் வளங்களை சுரண்டும் நிலை காணப்படுகிறது. எனவே இதனைத் தடுப்பதற்கு சர்வதேச சமவாயங்களை அனுசரித்து கடல் எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கு எமது மீனவர் சங்கப் பிரதிநிதிகளும், தமிழ்நாட்டு மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் சந்தித்து இரு தரப்பு உடன்பாடு ஒன்றை கைச்சாத்திட்டு இந்த உடன்படிக்கையின் பிரகாரம் மீன்பிடிப் பிரதேசம் மற்றும் ஆள்புல எல்லைகளையும் நிர்ணயம் செய்வதுடன் மாதாந்தம் இரு தரப்பும் பரஸ்பரம் சந்தித்து கலந்துரையாடுவதன் மூலம் எமது தொப்புள் கொடி உறவாகிய தமிழ் நாட்டுடனான உறவைப் பலப்படுத்தி சமூக பொருளாதார அரசியல் ரீதியில் சுமுகமான தீர்வுக்கு வரமுடியும். இதனை வடக்கு மாகாண சபை காலக் கிரமமின்றி விரைந்து செயற்படுத்த வேண்டும்.

♦ வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மீனவர்களும் தத்தமது சொந்த இடங்களில் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் தொழிலில் ஈடுபடக் கூடிய சூழ்நிலையை உருவாக்குதல். குறிப்பாக யாழ். மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு பிரதேசமாகிய சேந்தான்குளம், மாதகல், பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை, வலித்தூண்டல் பிரதேசங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், நாயாறு பிரதேசங்களும் மீனவர்கள் முழுமையாக தொழிலில் ஈடுபட முடியாத நிலை இன்றும் தொடர்கின்றது. அத்தோடு பல ஆயிரக் கணக்கான குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படாமல் தற்போதும் இடைத்தங்கல் முகாம்கள், நலன்புரி நிலையங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். எனவே இந்தப் பகுதி மீனவர்கள் அனைவரும் தத்தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டு அவர்களது சமூக பொருளாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

♦ இந்த மாகாணத்தின் கடல் வளம் சார் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து துறைசார் பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்களினூடாக ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவுவதுடன் நவீன தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் உபகரணத் தொகுதிகளை இந்த நிலையத்தில் அமைக்க வேண்டும்.

> இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவுக்குத் தென் கிழக்கே அமைந்துள்ளது. இதன் புவியியல் தரைத்தோற்ற அமைவிடம் காரணமாக மீன்பிடித்தலுக்கு சாதகமான பல சிறப்பம்சங்களைக் கொண்டு விளங்குகிறது. ஏறக் குறைய 65,610 சதுரகிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இந்தத் தீவைச் சூழவுள்ள கடற்பரப்பின் அளவு ஏறக்குறைய 5,36,000 சதுரகிலோமீற்றர் ஆகும்.

♦ மீனவர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதற்குப் பொருத்தமான நிலையங்களை அமைத்து கப்பலோட்டம், இயந்திரம் பழுதுபார்ப்பு மற்றும் மாலுமி சாஸ்திர நவீன மீன்பிடி முறைகள் சார்ந்தம், பயிற்சிகளை வழங்குதல்.

துறைசார் கட்டுமானங்களாக மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்தல், படகு கட்டும் நிலையங்கள் அமைத்தல், வெளிச்ச விளக்குகள் அமைத்தல், படகு தரிப்பு நிலையங்கள் அமைத் தல், மீன் சந்தைப்படுத்தும் நிலை யங்கள் என்பவற்றுடன் கிராம வீதிகள், மேம்பாலங்கள், குடியிருப்புக்கள் என்பவற்றை அமைப்பதும் ஏற்கெனவே காணப்படுபவற்றை புனரமைத்துக் கொடுத்தலும் வேண்டும்.

♦ கடற்றொழிலாளர் நலன்புரி சார் திட்டங்களான மீனவர் காப்புறுதித் திட்டம், மீனவர் ஓய்வூதியத் திட்டம் என்பவற்றுக்குள் அனைத்து மீனவர்களையும் உள்வாங்கி சமூகப் பாதுகாப்பை வழங்க வேண்டும்.

♦ கரையோர பாதுகாப்புச் செயற்பாடுகளாக முருகைக் கற்கள் அகழ்வதைத் தடுத்தல், காற்றுத்தடை வேலிகள் அமைத்தல், கரையோரத் தாவரங்கள் பேணுதல், கரையோர பாதுகாப்பு முகாமைத்துவம் என்பவற்றினூடாக நீடித்திருக்கும் கடல் வளம் சார்ந்த முன்னெடுப்புக்களை மேற்கொள்ளுதல்.

♦ யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வடகடல் நிறுவனத்தின் (சீனோர்) செயற்பாடுகளை முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கும் விஸ்தரிப்புச் செய்து பொருத்தமான மீன்பிடி உபகரணங்கள், சாதனங்களை உற்பத்தி செய்தல்.

♦ கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் காணப்படும் குளங்களில் நன்னீர் மீன் வளர்ப்பை மேற்கொள்வதனூடாக மேலதிக புரத தேவையையும், உற்பத்தி வருமானத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

♦ மீனவ குடும்பங்களது கல்வி அறிவை மேம்படுத்துவதற்கு கிராமங்கள் தோறும் முறைசாராக் கல்வி சார் நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்திக் கல்வி அறிவை மேம்படுத்தல்.

♦ கடல் உணவுகளைப் பதனிடும் நிலையங்களை மாவட்டங்கள் தோறும் அமைப்பதனூடாக பெண்களுக்கான வேலை வாய்ப்பு மற்றும் வருமானத்தையும் வழங்க முடியும்.

போர் இந்தத் துறை சார்ந்த கட்டமைப்பில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சிதைவுகளி லிருந்தும் உடைவுகளிலிருந்தும் இந்தத் துறையை மீட்டெடுக்கும் பொறுப்பும் உடனடித் தேவையும் எம்முன்னே காத்திருக்கின்றது. எனவே காலக் கிரமமின்றி வடக்கு மாகாண சபையானது மேலே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், புலம் பெயர்ந்தோர் அமைப்புக்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் என்பவற்றினூடாக நிதி மற்றும் நிபுணத்துவம் சார் உதவி களைப் பெற்று இந்தத் துறையை வளர்த்தெடுப்பதன் மூலம் இலங்கை யின் மீன்பிடித்துறையில் வட மாகாணத்தை முதன்மை நிலையை பெறவைப்பதுடன் எமது மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியும் மேம் பாடடையச் செய்ய இயலும்.


# நொச்சிக்குளத்தில் அமைச்சர் டெனீஸ்வரனுக்கு வரவேற்பு

மன்னார், நவ.28

மன்னார் நொச்சிக்குளம் கிராமத்திலுள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் ஆலய பரிபாலன சபையும் இணைந்து வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து. வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கு வரவேற்பு வைபவம் ஒன்றை கடந்த சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடத்தின.

இந்த நிகழ்வு நொச்சிக்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், உயிலங்குளம் பங்குத் தந்தை அருட்திரு பிரான்ஸிஸ் மேரடிக்கோல் கலந்துகொண்டார். இதன் போது மக்களது தேவைகள் மற்றும் குறை நிறைகளை கேட்டறிந்த பின்னர், உரையாற்றிய அமைச்சர் தெரிவித்ததாவது:-



எமக்கு வாக்களித்த அனைத்து மக்களுக்கும் எமது விசேட நன்றிகள்.

வடமாகாணசபை நிதியின்றியே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், எதிர்வரும் காலங்களில் ஏனைய மாகாண சபைகளை விட ஒரு சிறந்த மாகாண சபையாக வட மாகாண சபை திகழும் என்பது உறுதி. அதற்கு மக்களாகிய உங்களது ஒற்றுமை அவசியமானது.

தமிழ், முஸ்லிம் வேறுபாடு, சமயங்களுக்குள் பிளவுகள் என்பன இல்லாதவாறு தமிழ் பேசுகின்ற சமூகமாக நாம் வாழும்போதுதான் நிலையான அபிவிருத்தியை அடைய முடியும் - என்றார். (க)

## கூட்டுறவுக் கல்லூரி அரைகுறை நிலையில்

ஒட்டுசுட்டானில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரிக்கான கட்டட வேலைகள் பல ஆண்டுகளாகப் பூர்த்தி செய்யப்படாது அரைகுறை நிலையில் உள்ளதைக் காண முடிகின்றது. தற்போது இந்தக் கட்டடம் அமைக்கப்பட்ட இடத்தில் பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன. இன்னும் சிறிது காலம் செல்லுமாயின் காடுகள் வளர்ந்து விடுமெனத் தெரிவிக்கப்படுகிறது. கூட்டுறவாளர்களுக்குப் பயன்பட வேண்டிய இந்த இடம் இவ்வாறு காணப்படுகின்றமை இங்குள்ள பலருக்கும் வேதனையை அளித்துள்ளது. ஆகவே இனியும் தாமதிக்காது கட்டட வேலைகளை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-500)

## விழிப்புணர்வு செயலமர்வு

பளைப் பிரதேச ஆலய நிர்வாகிகள், கலைஞர்கள் அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர்கள் ஆகியோருக்கான, கலாசார விழிப்புணர்வுச் செயலமர்வு கடந்த சனிக்கிழமை பளை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், மாவட்ட உளநல மருத்துவ சமூகப் பணியாளர் வி.ராமேந்திரா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். செயலமர்வில் பிரதேச கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந-9)

# ஓமந்தை விளாத்திக்குளம் வீதி மூடப்பட்டது

## பயணிகள் பெரும் சிரமம்

வவுனியா, நவ.28

வவுனியா ஓமந்தை பெரிய விளாத்திக் குளம் வீதி மூடப்பட்டதால் அந்தப் பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அரச முறிப்பு, ஓமந்தை, பெரிய விளாத்திக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கான பிரதான வீதியாக இந்த வீதி காணப்படுகின்றது. அண்மையில் ஓமந்தை ரயில் நிலையம் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது. அதன் போது புகையிரத நிலையத்துக்கு அருகில் இந்த வீதி அமைந்துள்ளதால் மூடப்பட்டது.

இந்த வீதிக்குப் பதிலாக வேறு பாதையொன்றைத் தற்காலிகமாகப் பயன்படுத்துவதற்கு பயணிகளுக்குப் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இந்த தற்காலிகப் பாதை மழையின் போது பயன்பாட்டுக்கு உகந்ததாக இல்லை.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஓமந்தை மருத்துவ மனைக்குச் செல்பவர்கள், வர்த்தக நிலையங் களுக்குச் செல்வோர் உட்படப் பலரும் மழை பெய்யும்போது தற்காலிகப் பாதையால் செல்லும் போது பல்வேறு இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

எனவே பெரிய விளாத்திக் குளம் வீதியை உரிய பாதுகாப்புக் கடவைகளைப் பொருத்திய பின்னர் மீண்டும் திறந்து விடுமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (க-402)

"_"

*அரச முறிப்பு, ஓமந்தை, பெரிய விளாத்திக்குளம் ஆகிய பகுதி களைச் சேர்ந்த மக்களுக்கான பிரதான வீதியாக இந்த வீதி காணப்படுகின்றது.*



யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கிவரும் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ளோரின் வாழ்வாதாரத்துக்காக கைதடி கிழக்கைச் சேர்ந்த அமரர் திருமதி சந்திரசேகரம் செல்லம்மாவின் நினைவாக அவரது மகன் ச.பிரதீஸ்வரன் பத்தாயிரம் ரூபாவை கடந்த வாரம் தொழிற்பூங்காவில் தங்கியுள்ள விழிப்புலனிழந்தோரிடம் வழங்கி உதவியுள்ளார். (வ-288)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத் தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

**இடபம்:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். அரசு விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**மிதுனம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தில் அமைதி நிலவும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**கடகம்** : புதிய முயற்சிகள் வெற்றியடையும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.

**சிங்கம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் பல தடவை முயன்று முடிக்க வேண்டி சூழ்நிலை உருவாகும். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகுமுறையை மாற்றுங்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும்.

**கன்னி:** யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். சிக்கனமாக இருங்கள். வியாபாரம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும், எதிலும் நிதானித்துச் செயற்படுங்கள்.

நாளை

கார்த்திகை-13 வெள்ளிக்கிழமை 29.11.2013
திதி: ஏகாதசி மு.ப.11.35 வரை
நட்சத்திரம்: அத்தம் மு.ப. 08.49 வரை
சுபநேரம்: 06.13 - 07.43 வரை
இராகுகாலம்: 10.43 - 12.13 வரை

**துலாம்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர்ப் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**தனுசு:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்கு வீர்கள்.

**மகரம்:** கடந்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகள், ஏமாற்றங்களை நினைத்து அவ்வப்போது மனம் கலங்குவீர்கள். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் அமைதி திரும்பும். மாலையிலிருந்து மகிழ்ச்சி தொடங்கும்.

**கும்பம்:** புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். எதிலும் முன்யோசனையுடன் செயற்படுங்கள்.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 7 | | | 2 | 3 | | |
| | 2 | 6 | | | | | | |
| | | | 4 | 6 | | 7 | | |
| 8 | | 4 | 5 | | | 9 | 7 | |
| 1 | | | 9 | 3 | 6 | | | 8 |
| | 6 | 5 | | | 8 | 1 | | 2 |
| | | 9 | | 5 | 7 | | | |
| | | | | | | 6 | 1 | |
| | | 8 | 1 | | | 2 | 5 | 7 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 6 | 1 | 4 | 3 | 9 | 2 | 5 |
| 1 | 5 | 4 | 9 | 8 | 2 | 6 | 3 | 7 |
| 2 | 3 | 9 | 5 | 6 | 7 | 4 | 1 | 8 |
| 7 | 4 | 5 | 3 | 1 | 6 | 8 | 9 | 2 |
| 3 | 9 | 2 | 8 | 7 | 5 | 1 | 4 | 6 |
| 6 | 1 | 8 | 2 | 9 | 4 | 7 | 5 | 3 |
| 4 | 2 | 7 | 6 | 5 | 1 | 3 | 8 | 9 |
| 5 | 8 | 1 | 7 | 3 | 9 | 2 | 6 | 4 |
| 9 | 6 | 3 | 4 | 2 | 8 | 5 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## முகப்புத்தகப் பாவனை
# தீமையே தரும்




21 ஆம் நூற்றாண்டில் உலகெங்கும் வாழும் அனைத்து மக்களிடையே முகப் புத்தகப் பாவனை மலிந்து காணப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் பாடசாலை மாணவர்கள் முதல் வீட்டில் இருக்கும் அனைவரிடமும் கைத்தொலைபேசியும், கணினியும் இல்லாதவர்கள் குறைவு என்றே கூறலாம்.

மாணவர்கள் பசி, தூக்கம், படிப்பு ஆகியவற்றை மறந்தாலும் 'பேஸ்புக்'கையோ, கைத்தொலைபேசியையோ மறக்க மாட்டார்கள். பெற்றோர்களிடம் தாங்கள் படிக்கிறோம் என்று பொய் சொல்வது மட்டுமல்லாமல் தங்களைத் தாமே ஏமாற்றிக் கொண்டு பூட்டிய அறையிலிருந்து நீண்ட நேரமாய் கண் விழித்து முகப் புத்தகத்தில் ஈடுபட்டு பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

முகப் புத்தகம் இல்லாதோர் தமது கையடக்கத் தொலைபேசியில் பேஸ்புக் பார்க்கிறார்கள்.

இந்த முகப் புத்தகப் பாவனையால் சிலர் தெரியாத நபருக்கு குறுந்தகவல் அனுப்புவதும் அது தொடர்ந்து நட்பாகி, காதலாகி பின்பு அவர்களின் உண்மையான சொரூபம் தெரிந்ததும் தற்கொலையில் முடிந்த கதையும் உண்டு.

முகப் புத்தகப் பாவனையால் மாணவர்களின் எதிர்காலம் வீணடிக்கப்படுகிறது. அதிக நேரம் முகப் புத்தகத்தை பாவிப்பதனால் சிலருக்கு தலையிடி, கண் குத்து, கண்பார்வை குறைதல் போன்றவை ஏற்படுகின்றன. சிறு வயதிலேயே மாணவர்கள் மூக்குக் கண்ணாடி அணியும் நிலை ஏற்படுகின்றது.

எனவே முகப் புத்தகத்தின் மூலம் பலர் ஏமாற்றப்படுவதுடன் பாதகமான விளைவுகளையும் சந்திக்கின்றனர். எனவே, முகப்புத்தகப்பாவனை தீமையே தருகின்றது.

**தயாமினி குபேரமூர்த்தி,**
**இணுவில் மேற்கு.**

முகப் புத்தகப் பாவனையால் மாணவர்களின் எதிர்காலம் வீணடிக்கப் படுகிறது. அதிக நேரம் முகப் புத்தகத்தை பாவிப்பதனால் சிலருக்கு தலை யிடி, கண் குத்து, கண்பார்வை குறைதல் போன்றவை ஏற்படுகின்றன. சிறு வயதிலேயே மாணவர்கள் மூக்குக் கண்ணாடி அணியும் நிலை ஏற்படுகின்றது.

## அந்த நாள் ஞாபகங்கள்

அப்பாவின் தோளில் உட்கார்ந்து
பின்னே வரும் அம்மாவின்
கையைப் பிடித்து வரும்
அண்ணாவை வம்பிழுக்க
அடிக்க வரும் அண்ணாவை
அம்மா இழுத்துப் பிடிக்க
அண்ணாவின் அடிபடாமல்
அப்பா தடுக்க
அண்ணாவுடன் சண்டைபோட்டு
அண்ணாவுக்கு அடித்து விட்டு
அண்ணா அடிக்கவர
அண்ணா அடிக்க வந்ததாக
அப்பாவிடம் கூற
அப்பா அண்ணாவுக்கு
அடிக்க வர நான் சிரிப்பதும்
என்று சிறுவயதில் நான் செய்த
குறும்புகளை நினைத்தால்
இன்றும் வேடிக்கையாக இருக்கிறது

மு. வேணுஹா
கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

முகப்புத்தகப் (பேஸ்புக்) பாவனை

**நன்மையா?**
**தீமையா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................
முகவரி :- ......................................................
..........................................................

........................ ........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மாணவரே விழித்தெழுங்கள்.....




"அரிது அரிது மானிடராதல் அரிது. அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல். அதனிலும் அரிது ஞானமும் கல்வியும் நயத்தல்" எனவே கல்வி என்பது ஒவ்வொருவருக்கும் வாழ்க்கைக்கு ஒரு ஊன்று கோல். 'கற்க கசடற' என்றார் வள்ளுவர். ஐயம் திரிபு அறக் கற்க வேண்டும். கல்வி கற்காதவர் முகத்தில் உள்ள கண்கள் இரண்டும் புண்களே என்கிறார். இதனால் கல்வியின் தேவை முக்கியத்துவம் உணரப்படுகிறது. உடம்புக்கு கண் எவ்வளவு முக்கியமோ வாழ்க்கைக்குக் கல்வி முக்கியம்.

இன்றைய இளைய சமுதாயமே எதிர்காலத்தில் சிறந்து வல்லமையுடைய சமுதாயத்தை கட்டியெழுப்பப் போகின்றது. இன்றைய நிலையில் மாணவ சமுதாயம் ஒரு தனியிடத்தை வகித்து நிற்கின்றது. அதனால் மாணவர் கல்வி ஒழுக்க விழுமியங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த பெற்றோர் பொருளாதார நிலையில் பின் தங்கியிருந்தாலும் ஏதோ கஷ்டப்பட்டுப் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள்: உள வலிமைதான் ஒருவருக்கு நம்பிக்கையைத் தர முடியும்; ஆற்றலை அளிக்க முடியும்; தன்னுள் இருக்கும் ஆத்ம ஞானத்தை வெளிப்படுத்த முடியும். உடற்பலம், உள்ளப் பலம், ஆத்ம பலம் இம்மூன்றும் கல்வியால் வளர்க்கப்படுகின்றன. கல்வியை வளர்க்கிறன. இத்தகைய சக்தியைப் பெற்றோர் கொண்டிருக்க வேண்டும். இச் சக்தி பிள்ளைகளிலும் காணப்பட்டால் கற்றலைச் சிறப்புறக் கொண்டு செல்ல முடியும்.

பாடசாலைக்கு வந்து சேரும் மாணவர்கள். இரு தரத்தில் உள்ளவர்கள் ஒன்று பொருளாதார வளமுடைய பெற்றோரின் பிள்ளைகள், மற்றது ஏழைப் பெற்றோரின் பிள்ளைகள். எல்லோரினதும் நோக்கம் கற்றலே. முன்பள்ளிகளில் ஆரம்பித்து ஆரம்பக் கல்வியைக் கற்று இடைநிலைக் கல்வியின் பின் உயர்கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்று பட்டத்தாரிக் கல்வியை முடித்து தொழிற்றுறைகளில் சேர்ந்து தாம் கற்ற கல்வியை சமூகத்துக்கு அளிக்கிறார்கள்.

வசதி குறைந்த பிள்ளைகளும் மகிழ்ச்சியாக கற்பதற்கு அரசு வேண்டிய உதவிகளை வழங்குகிறது. இலவசக்கல்வி, சீருடை, புத்தகம், மதிய உணவு என்பன மாணவர் உங்களுக்கு வழங் கப்படுகிறது. மாணவப் பருவமே ஆற்றல் வளரும் பருவம். இந்தப் பருவத்தில் மாணவரின் நோக்கம் கல்வியாக இருக்க வேண்டும். இந்தப் பருவத்தில் ஒழுக்கம் மிக மிக முக்கியம். மாணவர்கள் நினைவில் கொள்ள வேண்டியவை எவை எனில் ஒழுங்காக நேரத்துக்குப் பாடசாலைக்குச் செல்லல். சென்றவுடன் வகுப்பறை சுற்றாடல் சுத்தம் கவனித்தல். ஆசிரியருடன் அன்புடன் பழகல்; மதித்தல். அவரின் சொற்படி நடத்தல், வகுப்பில் அமைதியைப் பேணல். பாடங்கள் விளங்கப் படுத்தும் நேரத்தில் அவதானித்தல். கொடுக்கப்பட்ட பாடங்களை சரியாகச் செய்தல். விளங்காதவைகளை ஆசிரியரை அணுகிக் கேட்டுத் தெரிந்து கொள்ளுதல். கொப்பிகளை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருத்தல், தன் பொருள்களைக் கவனமாக வைத்திருந்தல், கெட்ட பழக்கங்களைத் தவிர்த்தல். களவு, பொய் கோள் சொல்லுதல் பாட நேர அமைதியைக் குழப்புதல் போன்றவற்றை முற்றாகத் தவிர்க்க வேண் டும். ஆசிரியரிடம் சிறந்த மாணவன் என்றபெயர்எடுக்க வேண்டும்.

**திருமதி, பூ.தர்மபால சிங்கம், ஓய்வு பெற்ற ஆசிரியை,**
**வட்டுக் கோட்டை.**



பாடசாலைக்கு வந்து சேரும் மாணவர்கள் இரு தரத்தில் உள்ளவர்கள். ஒன்று பொருளாதார வளமுடைய பெற்றோரின் பிள்ளைகள், மற்றது ஏழைப் பெற்றோரின் பிள்ளை கள். எல்லோரினதும் நோக்கம் கற்றலே.




யாழ். சென்.சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும் மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட கிராமிய நடனத்தின் காட்சியை காணலாம். (ஓ)

# முஸ்லிம்களின் விவாகத்தில் புதிய சட்ட ஏற்பாடு அவசியம்

யாழ்ப்பாணம், நவ.28

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் 115 இல் திருத்தத்தினை மேற்கொள்வதற்கு அகில இலங்கை ஜமியதுல் உலமா சபை, காதி நீதிபதி அமைப்பு, முஸ்லிம் சட்டத் தரணிகள் அமைப்பு இலங்கை முஸ்லிம் பேரவை மற்றும் இலங்கை தேசிய முஸ்லிம் கவுன்ஸில் ஆகிய அமைப்புக்கள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்குமாறு யாழ். மாவட்ட முஸ்லிம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் செயலாளர் எம்.எம்.சபூர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் படி வெளிநாட்டு முஸ்லிம்கள் இலங்கை முஸ்லிம்களை விவாகப் பதிவு செய்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் ஏ.எம். குணசேகர தெரியப்படுத்தியமை தொடர்பில் வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

> "-"
> முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் 115 இன் படி இலங்கை முஸ்லிம்கள் இருசாராரும் தங்கள் விவாகப் பதிவுகளை பதிவு செய்வதற்கு சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் 115 இன்படி இலங்கை முஸ்லிம்கள் இருசாராரும் தங்கள் விவாகப் பதிவுகளை பதிவு செய்வதற்கு சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் வெளிநாட்டு முஸ்லிம்கள் இலங்கை முஸ்லிம்களை விவாகப் பதிவு செய்வதற்கு சட்டம் 115 இல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. தற்போதுள்ள சுற்றறிக்கையின்படி வெளிநாட்டு முஸ்லிம்கள் இலங்கை முஸ்லிம்களுடன் திருமண பந்தத்தில் இணைய முடியாது. எனவே இந்த விடயம் தொடர்பில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. (ந-10)

## விசேட தேவை உடையோர் தின விழா

யாழ்ப்பாணம், நவ.28

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர் தின விழா எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி நொமைன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழிப்புணர்வுச் சங்கப் பொருளாளர் ப.கமிலஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக மருத்துவர் எம்.மலரவன், விசேட கல்வித் துறை ஆசிரியர் வி.விஸ்ணுகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

## சிறந்த பாடசாலையாக சங்கானை மாவடி அறநெறிப் பாடசாலை

யாழ்ப்பாணம், நவ.28

யாழ். மாவட்டத்தில் மிகச் சிறந்த அறநெறிப் பாடசாலையாக சங்கானை மாவடி அறநெறிப் பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இதற்கான விருது வழங் கும் நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அறநெறிப் பாடசாலைகளில் சிறந்த அறநெறிப் பாடசாலைகளுக்கான செயற்பாடுகளை இந்தப் பாடசாலை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டிப்பரீட்சையில் ஆண்டு 9 மாணவன் வரதராஜன் நிருபன், தரம் 11 மாணவன் யோகேஸ்வரன் பிரசாந்தன் ஆகியோர் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். இவர்களுக்கான பரிசில்களும் மேற்படி நிகழ்வில் வழங்கப்படவுள்ளன எனப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசன் அறிவித்துள்ளார். (ந-29-14)


## மனிதனிலுள்ள மனிதத்தன்மைகள் எவ்வாறு நசுக்கப்படுகின்றன?

மனிதனிடத்தே இருக்கும் மனிதத் தன்மையை அரிஷ்டவர்க ஆறு உள்ளார்ந்த விரோதிகள்:-
காம, குரோத, லோப, மோக, மத, மாத்சர்ய அதாவது அவா, கோபம், பேராசை, மயக்கம், பெருமை, பொறாமை ஆகியவை முற்றாக நசுக்கி ஒழிக்கின்றன.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது
சாயி சிந்தனை


## ஆதார வைத்தியசாலையில் தொலைக்காட்சி திருட்டு

யாழ்ப்பாணம், நவ.28

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் மலசல கூட யன்னல் கம்பியை உடைத்து உள்ளே நுழைந்த திருடன் தொலைக் காட்சிப் பெட்டியைத் திருடிக் கொண்டு பிரதான வாயில் வழியாக சென்றுள்ளான்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.47 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஞாயிற்றுக்கிழமை குறித்த சிகிச்சைப் பிரிவு இயங்காததால் அங்கு பணியாளர்கள் எவரும் செல்லவில்லை.

திங்கட்கிழமை காலை கடமைக்குச் சென்ற பணியாளர்கள் அங்கு தொலைக் காட்சிப் பெட்டியைக் காணாததுடன் மலசல கூடத்தின் யன்னல் கம்பிகள் உடைக்கப்பட்டு இருப்பதையும் கண்டனர்.

உடனே வைத்தியசாலை அத்தியட்சகர் ஊடாக தெல்லிப்பழை பொலிஸாருக்கு அறி விக்கப் பட்டது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த சிகிச்சைப் பிரிவில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்புக் கண்காணிப்புக் கமராவின் பதிவுகளின் படி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-36)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
அன்னப்பிள்ளை ஆசைப்பிள்ளை



மண்ணில்
12.10.1923

விண்ணில்
29.10.2013

குலம் காக்கவந்துதித்த குலமகளே! பண்பினால் பாராண்ட பெருமகளே!
நேர்மைக்கே இலக்கணமாய் அமைந்தாயம்மா நெஞ்சத்தால் எமைக்கவர்ந்த உத்தமியே!
தக்கதுணையாய் எமைக்காத்த பெருமாட்டி பார்போற்றும் உயர்பண்பால் உயர்ந்து நின்றாய்
குடும்பத்தில் ஒளிவிளக்காய் பிரகாசித்தாய் உற்றார் உறவுகள் உயர வைத்தாய்
தொண்ணூறாண்டுகள் தொண்டுகள் செய்தாயம்மா இங்குள்ளார் உனக்கு நிகர் யாருமில்லைப் பாரில்
யார் செய்த தீவினையோ! முன்செய்த பழவினையோ, எம்மையெல்லாம் பாரில் தவிக்கவிட்டு, விட்டு
காலன்வசப்பட்டு பறந்தோடிச் சென்றிட்டாய் தலங்கள் பலசென்று தவங்கள் செய்தாலும்
எப்பிறப்பில் உமதன்பை நாம் காண்போமம்மா! ஆத்மசாந்திக்காய் ஆண்டவனைத் துதிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (28.11.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

கலைவாணி சன சமூக நிலைய வீதி,
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.

(சி.13841) (45.6.3)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கந்தவனம் கயிலாசபிள்ளை

தோற்றம் 14 . 02 . 1931
மறைவு 09 . 12 . 2012

எமது குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிர்ந்து
அன்போடும், பண்போடும், பாசத்தோடும்
பார்போற்ற வாழ்ந்து, எம்மையெல்லாம்
இன்பத்திலமிழவைத்த எமது
இதயத்தெய்வத்தின் நினைவுகள்
என்றும் எம்மைவிட்டு நீங்கா.

கடந்த 09.12.2012 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர் கந்தவனம் கயிலாசபிள்ளை அவர்களின் முதலாம் ஆண்டுத்திவச நிகழ்வுகள் இன்று (28.11.2013) வியாழக்கிழமை முற்பகல்.11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"அன்னை அகம்"
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில்.

(40406)(12.3.6.)

குடும்பத்தினர்.



# 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

தோற்றம்
10.04.1929

மறைவு
29.10.2013

அமரர்
தம்பியப்பா தில்லைநாதன்



கண்ணீருக்குத் தடை போட்டது போல
உம் நினைவுகளுக்குத் தடைபோட முடியவில்லை
நினைவுகளை மட்டும் நிறையவே தந்துவிட்டு
நீர் எங்கு சென்றீரோ!

கடந்த 29.10.2013 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதி வரை இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (28.11.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(40525) (7.6.3)

359/34, நல்லலெட்சுமி அவெனியு,
கோயில் வீதி, நல்லூர்.

குடும்பத்தினர்.

# அரச ஊழியர்களுக்கு தொடர்ந்தும் ஏமாற்றம்

## அரச பொது ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு

அம்பாறை,நவ.28

"காலத்துக்குக் காலம் தேசிய சம்பள நிர்ணய ஆணைக் குழுக்கள் நியமனம் என்ற போர்வையில் அரச ஊழியர் கள் ஏமாற்றப்பட்டே வருகின்றனர். உருப்படியான சம்பள உயர்வின்றி அரச ஊழியர்கள் கடன் சுமையில் மூழ்கியுள்ளனர்." இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் கூறினார்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவ சபைக் கூட்டம் கல்முனை சனச மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கணிசமான அளவு அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுமென்ற எதிர்பார்ப்புடன் அரச ஊழியர்கள் இருந்தனர். ஆனால் வெறும் கண் துடைப்பாக 1,200 ரூபா விசேட படியே வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது பெரும் ஏமாற்றமாகவே அமைந்துள்ளது.

எப்போதும் வரவு - செலவுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்படும் கால கட்டங்களில் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை நிர்ணயிப்பதற்கான தேசிய சம்பள நிர்ணய ஆணைக் குழுவொன்று நியமிக்கப்படுவது வழக்கமான ஒன்றாகும்.

தற்பொழுதும் இத்தகைய தேசிய சம்பள நிர்ணய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு அரச ஊழியர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட சம்பள நிர்ணய ஆணைக் குழுக் களின் பரிந்துரைகள் கிடப்பில் போடப்பட்டு புஸ்வாணமான நிலைமை இன்னும் தொடரக் கூடாது.

**பெரும்சுமை**

இன்று வாழ்க்கைச் செலவு உயர்வின் பாதிப்பால் அரச ஊழியர்கள் விரக்தியின் விளிம்புக்கே சென்றுள்ளனர்.

இந்தச் சுமையைச் சமாளிக்க முடியாது அரச ஊழியர்கள் பெரும் கடன் சுமையில் சிக்கித் தவிப்பது மட்டுமன்றி பிச்சை எடுக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

பொறுப்புள்ள அரசு பூச்சாண்டி காட்டுவதை விடுத்தும் அரச ஊழியர்களின் பரிதாப நிலைமையைப் புரிந்தும் கணி சமான சம்பள உயர்வை உடன் வழங்க முன் வர வேண்டும்.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 1, 200 ரூபா விசேட படித் தொகையை எடுத்துப் பார்த்தால், ஒரு நாளைக்கு ஒரு பால் தேநீர் அருந்துவதற்காக 40 ரூபாவே வழங் கப்பட்டுள்ளது.

இதேவேளை வழங்கப்படும் விசேட படிகள் என்ன விடிவை அரச ஊழியர்களுக்கு வழங்கப் போகின்றது? எனவே இத்த கைய அலவன்ஸ்கள் அடிப்படைச் சம்பளத் தில் சேர்க் கப்படவும் ஆவன செய்யப்பட வேண்டும்.

**வடக்கு, கிழக்கு**

இந்த முறை வரவு -செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் எந்தத் திட்டமும் உள்ளடக்கப்படவில்லை.

இத்தகைய புறக்கணிப்புக்கள் நாட்டில் நல்லிணக்கத்தையும், நல்லாட்சியையும் மலரச் செய்வதற்கு வழிவகுக்காது. நாட் டின் சகல பாகங்களும் ஒரே கண் கொண்டு பார்க்கப்படுவதன் மூலமே சிறந்த ஜனநாயகம் நிலை பெறும் என்பதை ஆளும் அரசு புரிந்து செயற்பட வேண் டும்.

**ஆளுநர் மாற்றம்**

வடமாகாண ஆளுநரை மாற்ற வேண்டுமென்று வடக்கு முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் குரல் எழுப்பியுள்ளார். இந்தக் கருத்தை நாமும் வர வேற்கின்றோம். வடமாகாணத்தை நன்கு தெரிந்த, நன்கு புரிந்த ஒரு சிவில் உயரதிகாரியோ, அனுபவம் வாய்ந்த அரசியல் பிரமுகர் ஒருவரோ ஆளுநராக நியமிக் கப்படுவதே பொருத்தமானதா கும்" - என்றார். (ச-30)


## மரண அறிவித்தல்

### கந்தையா கனகலிங்கம்



யாழ்ப்பாணம், சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.146, திருநாவற்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகலிங்கம் 26.11.2013 செவ்வாய்க் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாதன் கந்தையா - அந்தோனியாள் தம்பதியரின் அன்புப் மகனும், காலஞ் சென்றவர்களான வேலன் சங்கரன் - கண்மணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஏகாம்பிகையின் அன்புக் கணவரும், மதியழகன், இராஜமயூரன், மதிவாணன், மயூரி, லக்ஷா, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவதர்மினி, கேதீஸ்வரன் ஆகியோரின் மாமனும், கஜிஷின் அன்பு பேரனும், நாகம்மா, சுப்பிரமணியம், மகாலிங்கம், கமலாதேவி, சுந்தரலிங் கம், சண்முகம்பிள்ளை, சுப்புலட்சுமி ஆகியோரின் சகோதர னும், மகேந்திரன், கமலாம்பிகை, உலகேஸ்வரி, சங்கேஸ்வரி ஆகியோ ரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மரக்காரம்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

இல.146, திருநாவற்குளம்,
வவுனியா.
(40572) (45.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி சரோஜினிதேவி நவரெத்தினம்



யாழ். வேலணை கிழக்கு அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், 103/1, கோயில் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி நவரெத்தினம் (25-11-2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா நகுலேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், செல்லத்தம்பி சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவரெத்தினம் அவர்களின் அன்பு மனைவியும்,தேவிகா, தேவதாஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான அன்னலெட்சுமி, பூமணி, இராசலட்சுமி, மற்றும் மனோன்மனி, கமலாம்பிகை (பிரான்ஸ்), சோமசுந்தரம், காலஞ்சென்ற தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயகுமார் (நந்தன்), சுகந்தினி(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,காலஞ்சென்றவர்களான பொன்னையா, இராசலிங்கம், செல்வராசா, செல்லத்துரை, கிருஷ்ணபிள்ளை மற்றும் விமலாதேவி, காலஞ் சென்றவர்களான அன்னலெட்சுமி, ஐயம்பிள்ளை, அருளம்மா, செல்லம்மா, மற்றும் நடராஜா, பாக்கியம், இராசமணி, சீதேவி, காலஞ்சென்றவர்களான துரையன், சண்முகலிங்கம், தில்லைநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், துஷ்யந்தன், கௌதமன், கௌதமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-11-2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நந்தன் (மருமகன்)
021 222 1981

103/1, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(40532) (3.6.2)

## 31வது நாள் நினைவு அஞ்சலி

### செல்வி
### மணியம் திருச்செல்வம் (மணி அக்கா)

காலஞ்சென்ற வேலும்மயிலும் சட்டத்தரணியின் மருமகளான மணியம் திருச்செல்வம் (மணிஅக்கா) அவர்களின் 31வது நாள் நினைவு அஞ்சலி 28.11.2013 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பூஜையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரு க்கும் அன்புடன் அறியதருகின்றோம்.

தகவல் :
வேலும்மயிலும் ஞானவடிவு,
தயானந்தராஜா, சுமித்திரா, கமறன்,
யுவன், நித்தியானந்தராஜா,
மயில்வாகனராஜா, சித்திரா,
கமலேஸ்வரன் ஆதர்ஷன், கேஷாந்,
ஆனந்தராஜா கிருஷ்ணராஜா,
விஷ்னுபவன், ஜெயந்தினி.

## மரண அறிவித்தல்

### தானியல் றெக்ஷியன்

(தலைவர் நெடுந்தீவு பிரதேச சபை)

வேலணை, சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தானியல் றெக்ஷியன் (ரஜீவ்) 26.11.2013 செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் தானியல் குலோத்தமை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற கருணானந்தசிவம்- தன லட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், அனிதாவின் அன்புக் கணவரும், டொறினா, கம்சன், டிலக்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசாத்தி காலஞ்சென்ற ஞானசீலன் மற்றும் வசந்தி, ரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அரவிந்தன், அமுதா, அகிலா, அஜந் தன், அனுசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2013) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, புங்குடுதீவு சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
பெருங்காடு,
புங்குடுதீவு.

தகவல் :
குடும்பத்தினர்
(40534)(7.6.3)

## 10ஆம் ஆண்டு நினைவு தினம்

பிறப்பு
05.10.1927

இறப்பு
19.11.2003



### அமரர் கதிர்காமு கிருஷ்ணன்

(பிரபல முறிவு நெரிவு வைத்தியர்) மீசாலை வடக்கு, கொடிகாமம்.

திதி: 28.11.2013

ஆண்டுகள் பத்து ஆனதையா
ஆறவில்லை உம் பிரிவுத்துயர்
நீண்ட தூரம் சென்று விட்டாய்
நீங்கவில்லை உன் நினைவு

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(40531)(10)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## மீள் கேள்வி விளம்பர திருத்தம்

21.11.2013ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட எமது சபைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான மீள் கேள்வி விளம்பரம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி | : 2013.11.21 - 2013.12.04 பி.ப 3.00 மணிவரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி | : 2013.12.05 பி.ப 12.00 மணி வரை |
| கேள்வி திறக்கும் திகதி | : 2013.12.05 பி.ப 3.30 மணி |


திருமதி நா.ஐங்கரன்
தவிசாளர்,
வலிமேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.
28.11.2013

(சி/13848)
(7.6.3)













'உதயன்" பத்திரிகை தனது 28 ஆவது அகவையை நிறைவு செய்து 29 ஆவது அகவையினுள் நேற்றுத் தனது காலடியை எடுத்து வைத்தான். இதனையொட்டி உதயன் ஊழியர்களால் குருதிக் கொடை நிகழ்வு ஒன்று நேற்று பணியகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் கலந்து கொண்டு குருதிக் கொடையளித்தார்.

மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், இ.ஆர்னோல்ட், வலி.வடக்கு பிரதேச சபை தலைவர் சோ.சுகிர்தன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கினர். இதன் பின்னர் விவசாய அமைச்சரின் வேண்டுகோளின் பேரில் 'உதயன்' பணிமனை வளாகத்தில் மரக் கன்றுகள் நடப்பட்டன. (உ -21-20)

## புனர்வாழ்வு பெற்றவர்களின் பிள்ளைகளுக்கு உதவிகள்

புதுக்குடியிருப்பு, நவ.28

புதுக்குடியிருப்பில் வசிக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகளின் பிள்ளைகளுக்கு சைக்கிள்களும், கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

தடுப்பு முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வசிக்கும் முன்னாள் போராளிகளின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவ முன்வந்துள்ள புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் திணைக்களம் சிங்கப்பூரில் உள்ள கொடையாளர்களின் அனுசரணையுடன் பல இலட்சம் ரூபா பெறுமதியான 300 சைக்கிள்களையும் கற்றல் உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது சரணடைந்த போராளிகளுக்கு அரசினால் தடுப்பு முகாம்களில் வைத்துக் குறிப்பிட்ட காலத்துக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டது. இதன் பின்னர் போராளிகள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். இத்தகைய போராளிகளின் பிள்ளைகளான 300 மாணவர்களுக்கு சைக்கிள்களும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. (க-115)

# உவர் காரணமாக நிலங்களை இழந்தவர்களுக்கு நட்டஈடு

## வடமாகாண சபையிடம் கோரிக்கை

அக்கராயன், நவ.28


கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம் ஆகிய கிராமங்கள் உவரடைந்ததால் நிலங்களை இழந்து இடம்பெயர்ந்து செல்லும் குடும்பங்களுக்கு வடமாகாண சபை நிவாரண உதவிகளை வழங்குவதுடன் பயிர்ச்செய்கைக்குரிய நிலத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

*இந்தக் குடும்பங்கள் குடியிருந்த இடங்களில் காணப்பட்ட பயன்தரு மரங்களும் அழிவடைந்துள்ளன.*

இந்த இரண்டு கிராமங்களிலும் இருந்து 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் குடியமர்ந்துள்ளன.

இந்தக் குடும்பங்கள் குடியிருந்த இடங்களில் காணப்பட்ட பயன்தரு மரங்களும் அழிவடைந்துள்ளன. இதனால் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட இத்தகைய குடும்பங்களுக்குரிய உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு வடமாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-18)

# இடர் முகாமைத்துவ விழிப்புணர்வு நிகழ்வு



யாழ்ப்பாணம், நவ.28

மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையமும் நல்லூர் பிரதேச செயலகமும் இணைந்து அரியாலை கிழக்கு ஜே/90 கிராம அலுவலர் பிரிவின் பூம்புகார் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை பேரிடர் முகாமைத்துவ முன்னெச்சரிக்கை குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டன.

பூம்புகார் கிராம அலுவலர் தலைமையில் பூம்புகார் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற இந்த முன்னெச்சரிக்கை ஒத்திகையில், நல்லூர் பிரதேச செயலர், மாவட்ட இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர், நல்லூர் உதவி திட்டப் பணிப்பாளர், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது இடர் ஏற்படும் போது தங்களை எவ்வாறு மக்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்த செயல்முறை விளக்கங்களை வழங்கினர். இந்த நிகழ்வில் பொதுத் தாபனங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இதேநேரம் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் நாரந்தனை வடமேற்கு ஜே/56 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இடர் முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு ஒத்திகைப் பயிற்சி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்களை அமைதியாக இருக்குமாறும் ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பம் அடையத் தேவையில்லை எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். (ந-7)

# கல்வியில் போட்டி வேண்டும், ஆனால் பொறாமை கூடாது

## அருட்தந்தை ஜெராட் அடிகள் அறிவுரை

அக்கராயன், நவ.28

மாணவர்கள் கல்வியில் போட்டிமனப்பான்மையுடன் ஈடுபட வேண்டும். ஆனால் பொறாமைப்படக் கூடாது. இவ்வாறு தெரிவித்தார் அருட்தந்தை ஜெராட் அடிகளார்.

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்கள் 63 ஆண்டுகளாக உரிமைப் போராட்டத்தை நடத்தியுள்ளார்கள். இதில் பெரும் பாதிப்புக்களையும் அவர்கள் எதிர்கொண்டுள்ளனர். ஆனால் தமிழர்களின் பெரும் சொத்தாக கல்வி விளங்கி வருகின்றது. எமது முன்னோர்கள் கல்வியைப் போற்றி வளர்த்துள்ளனர். நாமும் எமது கல்வியை வளர்க்க வேண்டும். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை மாணவர்கள் அதிகளவில் கற்க வேண்டும். சிறுவயது முதலே படிப்பில் மாணவர்களுக்கு ஊக்கம் வரவேண்டும்.

மாணவர்கள் கல்வியில் போட்டி வேண்டும். ஆனால் பொறாமை கொள்ளக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், நவ.28

திறந்த போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட வடமாகாண முகாமைத்துவ உதவியாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் டிசெம்பர் இரண்டாம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வழங்கப்படுமென மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது.

நியமனக் கடிதங்கள் ஆளுநர் அலுவலகத்தில் வழங்கப் படுமென ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதாகவும் தற்போது வீரசிங்கம் மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-9)

# மன்னார், யாழில் மரங்களை நட்டார் விவசாய அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ.28

மாவீரர் வாரத்தில் மரங்களை நட்டால் அடுத்த மாவீரர் தினத்தில் உமது நினைவாக மரம் நட வேண்டிவரும் என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு தொலைபேசி மூலம் அநாமதேய கொலை அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்ட போதும் நேற்று அவர் யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் பத்திரிகை காரியாலயத்திலும் நேற்று முன்தினம் மன்னாரிலும் மரங்களை நட்டார்.



உதயன் அலுவலகத்தில்.....

மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கும் விவசாய அமைச்சருக்குமான கலந்துரையாடல் உயிலங்குளத்தில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பண்ணையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடல் நடந்து கொண்டிருந்த போது அவருக்கு வந்த தொலைபேசி அழைப்பில் மரங்களை நடுவதை நிறுத்தவேண்டும் என்று தெரிவித்தும் அவ்வாறு நட்டால் அடுத்த மாவீரர் தினத்தில் அவரது நினைவாகவும் மரங்களை நடவேண்டிய நிலை ஏற்படும் என்றும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் விவசாயிகளுடனான கலந்துரையாடலை நிறைவு செய்து உரையாற்றிய அமைச்சர்,

"மரணித்தவர்கள் நினைவாக மரங்களை நடுவது குற்றமாகாது. இங்கு தங்கள் பிள்ளைகளைப் போரில் இழந்த ஆயிரக்கணக்கான பெற்றோர்கள் இருக்கின்றனர்.

அவர்கள் கண்ணீர் விட்டு அழுது தங்கள் துயரை ஆற்றுவதற்கு இந்த அரசு தடை விதிப்பது எந்த வகையிலும் நியாயமாகாது. மாவீரர் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்ட நிலையில் எல்லோரும் வீடுகளில் அவர்களது நினைவாக உயிருள்ள ஜீவ சமாதிகளாக மரங்களை நடுவோம்" என்றும் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண போக்குவரத்து, மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் மரக்கன்றுகளை நட்டனர். (வ-12)



மன்னாரில்....

## தமிழ் - பௌத்த அறநெறி பாடசாலை பரீட்சைக்குத் தோற்றிய 27 மாணவர்



யாழ்ப்பாணம், நவ.28

வடமாகாணத்தில் முதன் முதலாக இடம்பெற்ற தமிழ் - பௌத்த அறநெறிப் பாடசாலையின் முதலாம் ஆண்டுப் பரீட்சைக்கு தமிழ் மாணவர்கள் 27 பேர் தோற்றியுள்ளனர்.

நந்தராம தமிழ் - பௌத்த அறநெறிப் பாடசாலையின் வகுப்புக்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு, முதன் முறையாக அதன் பரீட்சைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டுள்ளன.

தமிழ் மாணவர்கள் 27 பேரில் ஒரு தொகுதியினர் தமிழ் மொழி மூலமும் இன்னொரு தொகுதியினர் ஆங்கில மொழி மூலமும் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.


இந்தப் பரீட்சையில் தோற்றி சித்தியடையும் பரீட்சார்த்திகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் முதல் ஐந்து இடங்களைப் பெறும் மாணவர்களும் அவர்களது பெற்றோரும் கொழும்பிலுள்ள பௌத்த சாசன அமைச்சில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர். (ஒ-5)

# புதிய சமையல் கூடம்

*அச்சுவேலி மருத்துவமனைக்கு*

அச்சுவேலி, நவ.28

அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் 20 லட்சம் ரூபா செலவில் புதிதாக சமையல் கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.



அச்சுவேலி மத்திய கல்லூரியின் கனடா வாழ் பழைய மாணவர்களின் நிதி உதவியுடன் புதிய சமையல் கூடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சமையல் செய்வதற்கான உபகரணத் தொகுதியும் காஸ் அடுப்பு மற்றும் காஸ் சிலிண்டர் உள்ளிட்டவையும் 75 ஆயிரம் ரூபா செலவில் கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச வைத்திய சாலையின் நோயாளர் நலன்புரி சங்கம் கட்டுமானப் பணிகளை மேற்பார்வை செய்தது. புதிய சமையல் கூடம் மற்றும் சமையல் கூடத்துக்கான உபகரணத் தொகுதிகளை வழங்கிய அச்சுவேலி மத்திய கல்லூரியின் கனடா வாழ் பழைய மாணவர்களின் முன்மாதிரி முயற்சிக்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது. (வ-11)

## டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு செயற்றிட்டங்கள்

முல்லைத்தீவு, நவ.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் வடமாகாண சுகாதார டெங்கு விழிப்புணர்வு வாரத்தையொட்டி பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. வடமாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் நாளை முதல் டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

துணுக்காய் பிரதேசத்தில் காணப்படும் காணிகள் உரிய முறையில் துப்புரவு செய்யப்படாதவிடத்து காணி உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

# இரணைமடு நீர் விநியோகத்தை 2015 இல் நிறைவேற்ற இலக்கு

*சமூகவியலாளர் ஆர். மோகனராஜா தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.28

இரணைமடு குடிதண்ணீர் விநியோகத் திட்டம் 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பூர்த்தியாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளபோதிலும் 2015 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அதனை நிறைவேற்ற இலக்கு வைத்துள்ளதாக சமூகவியலாளர் ஆர். மோகனராஜா தெரிவித் தார்.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத்திட்டம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த திங்கட்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. நல்லூர் பிரதேச திட்டமிடல் பணிப்பாளர் இ.சுகேந்திரநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் சமூகவியலாளர் மோகனராஜா கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீர் சுத்திகரிப்புத் தாங்கி அமைக்கப்பட்டு அங்கிருந்து குடாநாட்டின் முக்கிய பகுதிகளுக்கு குழாய் மூலம் நீர்விநியோகம் இடம்பெறும். நீர் வழங்கலுக்குத் தேவையான நீரை உள்ளெடுக்கக் கூடிய தான நிலையம் நிர்மாணிக்கப்படவும் நீரை விநியோகிக்கும் இணைப்புக் குழாய்களை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

18 ஆயிரத்து 328 மில்லியன் செலவில் இந்தத் திட்டத்தின் கீழ் நீர் வழங்கல் மூலம் 3 லட்சம் மக்களும், கழிவு நீரகற்றல் மூலம் 80 ஆயிரம் பயனாளிகளும், நீர்ப்பாசனம் மூலம் 55 ஆயிரம் பயனாளிகளும் பயனடைவர். விவசாயிகளுக்கு நீர் வழங்கப்படும். எனினும் நீர் பற்றாக்குறை ஏற்படின் நிவாரணம் வழங் கவும் இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் உள்ளன - என்றார். (வ-7)

## 3 தீவக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், நவ.28

வீடு முற்றாக அழிந்து சேதமடைந்ததை அடுத்து அந்த வீட்டில் வசித்துவந்த மாணவர் மூவருக்கு கற்றலுக்கான சாதனங்கள், காலணி, சீருடைகள் என்பவற்றை தீவகக் கல்வி வலயம் வழங்கி குறித்த மாணவரின் கல்விச் செயற்பாடுகளுக்கு உதவியுள்ளது.

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 3 சகோதர மாணவர்களின் வீடு தீப்பற்றி முழுமையாக எரிந்தது. இதனால் குறித்த மாணவர் மூவருக்கும் கற்றல் சாதனங்களை வழங்க தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன்குயின்ரன் துரித நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.

அதனடிப்படையில் அந்த மாணவர்களுக்கு கற்றல் சாதனங்கள் வழங்கப்பட்டன. (வ-7)

## நாவாந்துறை வீதிகளை திருத்தக் கோரும் மக்கள்

யாழ்ப்பாணம், நவ.28

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் கெனடி வீதி, சேர்ச் லேன் வீதிகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த வீதிகளைத் திருத்தியமைக்க இதுவரை எவரும் முன்வரவில்லை என்று நாவாந்துறை மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கெனடி வீதி 35 வருடங்களுக்கு மேலாக திருத்தத்தைக் காணாதுள்ளது. அதைப் புனரமைக்க நடவடிக்கை எடுத்து கற்கள் குவிக்கப்பட்டன. எனினும் அவை திடீரென மாயமாகிவிட்டன. சேர்ச்லேனும் கவனிக்கப்படாத நிலையில் தான் உள்ளது. குறித்த இரு வீதிகளுமே மக்கள் போக்குவரத்துக்கு தகுந்ததாக இல்லை.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் குறித்த வீதிகளை திருத்தியமைக்க முன்வரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-7)

## கனகபுரம் மக்கள் மின்சாரம் இன்றி இருளில்

கிளிநொச்சி கனகபுரம் கிராமத்தின் சில பகுதிகளுக்கு மின்சாரம் வழங்காமையால் அந்தப் பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின் றனர்.

கனகபுரம் கிராமத்தின் 10 ஆம் வீதி மற்றும் 11 ஆம் வீதி ஆகியவற்றுக்கு இன்றுவரை மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை. இதனால் கிராமத்தின் குறித்த பகுதிகள் இருள் சூழ்ந்து காணப்படுகின்றன. மேலும் புனரமைப்பு இன்றி இந்த வீதிகள் காணப்படுவதால் இரவு நேரங்களில் இந்த வீதியூடே பயணங்களை மேற்கொள்பவர்கள் தெரு விளக்கு இன்மை யால் விபத்துக்களை சந்தித்து வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (எ-6)

## இலவசக் கோழிகளால் இருந்தவையும் போயின

முள்ளியவளை, நவ.28

புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றால் குடும்பத்துக்கு 15 கோழிகள் வழங்கப்பட்டன.

எனினும் வழங்கப்பட்ட கோழிகளுக்கு தடுப்பு மருந்து எதுவும் வழங்கப்படவில்லை. இதனால் அவை நோயால் பாதிக்கப்பட்டு இறந்து போயின.

அத்துடன் அந்தக் குடும்பங்கள் ஏற்கனவே தமது வாழ்வாதாரத்துக்காக வளர்த்த கோழிகளும் நோயால் பாதிக்கப்பட்டு இறந்து போயின.

இதனால் சில குடும்பங்கள் வாழ்வாதாரத்தையே இழந்து நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. (வ-433)

# ரோந்துப் பணிக்கு படகுகள் தேவை

*கோத்தபாய தெரிவிப்பு*

கொழும்பு,நவ.28

கடல்சார் பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் ஆழ்கடலில் ரோந்துப் பணிகளை மேற்கொள்ள இன்னும் பல கடற்படைப் படகுகள் இலங்கைக் கடற் படைக்குத் தேவைப்படுகின்றன என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலியில் திங்கட்கிழமை ஆரம்பமாகிய, கடல்சார் பாதுகாப்புக் கருத்த ரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கரையில்இருந்துநெடுந்தொலைவில் கடலில் செயற்படவும், கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், ஆழ் கடலில் ரோந்துப் பணிகளை மேற்கொள்ளவும் மேலும் பல கடற்படைக் கப்பல்களை இலங்கை பெற வேண்டியுள்ளது.

ஏற்கனவே பல செல்வந்த நாடுகளிடம் இருந்து இத்தகைய கப்பல்களைத் தருமாறு கேட்டிருக்கிறோம்.

இந்தநிலையில், அடுத்த ஆண்டில் இரண்டு ரோந்துப் படகுகளை அன்பளிப்புச் செய்யும் ஆஸ்திரேலிய அரசின் முடிவை நன்றியுடன் வரவேற்கிறேன். இதன் மூலம், சட்ட விரோத ஆள்கடத் தல்களைத் தடுப்பதுடன், இந்தியப் பெருங் கடல் பிராந்தியத்தின் உறுதிப்பாடு மற்றும் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தவும் முடியும்.

இலங்கை தனது தற்போதைய வெளிவிவகாரக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வர்த்தக நோக்கிலேயே சீனா உதவியுள்ளது. அதனை, முத்து மாலை வியூகத்தில் கோர்ப்பதாக தவறாக எடை போடக் கூடாது. இலங்கை எப்போதுமே அணி சேராத வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டுள்ள நாடு- என்றார்.



பிராந்திய கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயும் உயர் மட்ட பாதுகாப்பு மாநாடு நேற்றுமுன்தினம் காலி லைட்ஹவுஸ் ஹோட்டலில் ஆரம்பமானது. கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயலத் கொலம்பகே தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயராஜபக்ஷ ,ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வாக்களிப்புக்கு புதிய முறை

*கட்சிகளுடன் கலந்துரையாடிய பின் நடைமுறைப்படுத்த முடிவு*

கொழும்பு,நவ.28

தேர்தலை எதிர்காலத்தில் வினைத்திறன் மிக்கதாக நடத்தும் வகையில் வாக்களித்தல் மற்றும் வாக்கு எண்ணும் முறைகளில் பல புதிய யோசனைகளை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய முன்வைத்துள்ளார்.

இந்த யோசனைகள் குறித்து அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடியதன் பின்னரே அவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பில் உள்வாங்கப்பட வேண்டிய புதிய கருத்துகள், யோசனைகள் மற்றும் தேர்தல்கள் திணைக் களத்தின் குறைபாடுகள் என்பவை தொடர்பான கருத்துக்கள் பொதுமக்களிடமிருந்து எழுத்து மூலமாக பெறப்படும் என்று அவர் கூறினார்.

தேர்தல்கள் ஆணையாளர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை செய்தியாளர்களுடனான சந்திப்பின்போதே புதிய யோசனைகள் குறித்து தெரிவித்துள்ளார்.

இந்த புதிய யோசனைகள் வருமாறு:-

மாவட்டம் தொகுதி வாரியாக பிரிக்கப்பட வேண்டும்.

அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் வகையில் வாக்காளர் ஒரு வேட்பாளருக்கு மாத்திரமே வாக்களிக்கும் முறைமை.

மனிதர்களால் ஏற்படக்கூடிய அநாவசிய பிழைகளை தவிர்த்துக் கொள்ளும் வகையில் வாக்கு எண்ணும் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

வாக்கு எண்ணுதலை இலகுபடுத்தல் மற்றும் நேர விரயத்தை தவிர்க்கும் வகையில் வாக்குச் சீட்டின் நீளத்தைக் குறைத்தல்.

பிளாஸ்டிக் பெட்டி இலகுவில் வெடித்துவிடக் கூடிய அபாயமுடையதால், குறைந்த விலையில் இலங்கைக்கே உரிய பாணியில் உள்ளூரிலேயே மரத்திலான தரமான வாக்குப் பெட்டிகளைத் தயாரித்தல் ஆகியவையே ஆகும். (ச-22)

# ஒழுக்காற்று விசாரணை; குழு அமைத்தது ஐ.தே.கட்சி

கொழும்பு,நவ.28

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒழுங்கு விதிகளை மீறிச்செயற்பட்டார்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணை தொடர்பில் ஆராய்வதற்கு மூவரடங்கிய விசேட குழு நியமிக்கப்பட்டுள் ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் மைக்கல் பெரேரா, பி,ஹரி சன், ரோசி சேனாநாயக்க ஆகிய மூவரே இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்றுமுன்தினம் கூடிய ஐ.தே.கட்சியின் தலைமைத்துவ சபைக் கூட்டத்தின் போதே குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.பாலித ரங்கே பண்டார, அசோக அபேசிங்க ஆகியோரிடம் விசாரணை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று உறுப்பினரொருவர் தெரிவித்தார். (ச)

# கண்டுபிடிப்பாளர்களின் தேசிய மட்டக் கண்காட்சி

*30 முதல் 2 வரை*

கொழும்பு,நவ.28

இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கான தேசிய கண்காட்சி நாளைமறுதினம் சனிக்கிழமை முதல் டிசெம்பர் 2 ஆம் திகதி வரை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உள்நாட்டைச் சேர்ந்த 800 இற்கும் அதிகமான கண்டுபிடிப்பாளர்கள் பங்குபற்றவுள்ள இந்தத் தேசியக் கண்காட்சியை தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க ஆரம்பித்து வைப்பார்.

இலங்கை கண்டுபிடிப்பாளர்களை பொருளாதார ரீதியில் ஊக்குவிக்கும் முகமாகவே இந்தக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கு தமது கண்டுபிடிப்புக்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தைப்படுத்துவதற்கும், தமது கண்டுபிடிப்புக்கள் மூலம் நிரந்தர வருவாயை பெற்றுக் கொள்வதற்கும் வழி வகுத்துக் கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கண்காட்சியில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, கல்வி அமைச்சர் பந்துலகுணவர்தன,இளைஞர்விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும ஆகியோரும் கலந்து கொள்வர். (ச)

" - "

இலங்கை கண்டுபிடிப்பாளர்களை பொருளாதார ரீதியில் ஊக்குவிக்கும் முகமாகவே இந்தக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

# அபிவிருத்தி செயற்பாடுகளில் மக்கள் பங்களிப்பு அவசியம்

*தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் கூறுகிறார்*

மூதூர்,நவ.28

அரசால் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் குறிக்கோள்களை எட்டுவதற்கு பொது மக்களின் பங்களிப்பு அவசியம் என்று தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எம். சுபியான் தெரிவித்தார்.

சிராஜ் சிறுவர் பூங்காவுக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறி னார். அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:

பொது மக்கள் தங்கள் பிள்ளைகளினதும் வேலை, வியாபாரம் மற்றும் கல்வி செயற்பாடுகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை பொழுதுபோக்கு அம்சங்களுக்கு வழங்குவதில்லை.

தம்பலகாமம் பிரதேச சபைக்கு அபிவிருத்தி செயற்பாடு களுக்கான ஒதுக்கீடு செய்யப் படும் நிதியில் பெரும்பகுதியை பிரதேசத்தின் வாசிகசாலை, விளையாட்டு மற்றும் பொழுது போக்கு அம்சங்களின் விருத்திக்கு பங்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, அபிவிருத்தி திட்டங்கள் மேன்மேலும் செயற்படுத்துவதற்கும் அவை நீண்ட காலம் நிலைத்து நிற்பதற்கும் பொது மக்களின் பங்களிப்பு சகல விதத்திலும் அவசியம் என்றார். (ச-40)

# தொன்மையான பௌத்த தலம் கண்டுபிடிப்பு

கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பே புத்தர் வாழ்ந் திருக்கலாம் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தக் கூடிய, ஒரு பழைமை யான பௌத்த வழிபாட்டுத் தலத்தை தாம் கண்டறிந்துள்ளதாக நேபாளத்தில் உள்ள அகழ்வாய்வாளர்கள் தெரி வித்துள்ளனர்.

தெற்கு நேபாளத்திலுள்ள லும்பினியில், செங்கல்லால் கட்டப்பட்ட கோயிலின் கீழே, மரத்தால் செய்யப்பட்ட ஒரு வழிபாட்டுத் தலத்தின் இடிபாடுகளுக்கான சில தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மரத்தாலான அந்த வழிபாட்டுத் தலத்தில், ஒரு திறந்த வெளியும் ஒரு மரமும் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

# ரூ.1,200 கொடுப்பனவு வெறும் கண்துடைப்பு

*அரச தாதிய உத்தியோகத்தர் சங்கம் கூறுகிறது*

இந்தமுறை வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 1,200 ரூபா மேலதிக கொடுப்பனவு எதற்கும் பயனற்ற வெறும் கண் துடைப்பு கொடுப்பனவு என்று அரச தாதிய உத்தி யோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ள குடும்பமொன்று வாழ்வதற்கு மாதமொன்றில் 47,000 ரூபா தேவைப்படுகிறது என்று அரசு கூறுகிறது. எனினும் அரச ஊழியரொருவரது குறைந்த பட்ச சம்பளம் 11,730 ரூபா ஆகும். கொடுப்பனவுகளுடன் குறைந்த பட்ச சம்பளம் 19,000 ரூபாவாகும். எஞ்சியுள்ள பற்றாக்குறைத் தொகையான 28,000 ரூபாவையும் நிரப்பிக் கொள்ள மக்கள் என்ன செய்யமுடியும்?

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு தனியார் துறையினர் மற்றும் அரச ஊழியர்களது குறைந்த சம்ப ளங்களுக்குத் தீர்வுகள் வழங் கப்பட்டு இந்தமுறை வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் மக் களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்த்திருந்தோம். எனினும் அந்த எந்தவொரு எதிர்பார்ப்பும் நிறைவேற வில்லை.- என்றார். (ச-22)

# வாகன விபத்தில் மாணவி சாவு

மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாலையடிவட்டை பிரதான வீதியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு,மண்டூர், நவகிரி வித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி பயிலும் யோகநாதன் பகிரந்தினி ( வயது-8) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். பாடசாலை விட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் பாலையடிவட்டை,புளியடிப்பிள்ளையார் ஆலயத்தின் முன்பாக நவகிரியிலிருந்து, பாலையடி வட்டை நோக்கி பால் ஏற்றிக் கொண்டு வந்த வாகனம் மாணவி மீது மோதியதாலேயே விபத்து இடம்பெற்றுள்ளது என்று சம்ப வத்தை நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர். (ச-32)

# சிரோசிஸ் நோயால் 5573 பேர் உயிரிழப்பு

கொழும்பு,நவ.28

மதுபாவனை மூலம் ஏற்படும் ஈரல் கரையும் 'சிரோசிஸ்' என்ற நோயால் கடந்த 5 வருட காலத்தில் 5573 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க தெரிவித்தார்.

கடந்த 5 வருட காலத்தில் சிரோசிஸ் நோயினால் 56,348 பேர் பாதிக்கப்பட்டதோடு 37,268 பேர் மன நோயால் பீடிக்கப்பட்டனர் என்று அவர் குறிப்பிட்டார்.

மதுபாவனையால் நோய் வாய்ப்படுபவர்களுக்காக சிகிச்சையளிக்க அதிக பணம் செலவிடப்படுகிறது.

மது பாவனையால் பக்க வாத நோய்க்கு இலக்கானவருக்காக 5800 ரூபாவும், இருதயம் சார்ந்த நோய்க்காக 9100 ரூபாவும் செலவிடப்படுகிறது என்று அவர் கூறினார்.

எதிர்காலத்தில் ஒவ்வொரு நோயாளிக்கும் அரசு செலவிடும் தொகையை அறிவிக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மாவீரரை ஏன் அஞ்சலிக்கக்கூடாது? தமிழர் அடக்குமுறையை நிறுத்துக

## நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு சீற்றம்

"போரில் இறந்த இராணுவத்தினரையும், ஜே.வி.பி. கிளர்ச்சியில் உயிரிழந்தவர்களையும் நினைவுகூர முடியுமானால், தமிழர்களின் உரிமைக்காகப் போராடிய மாவீரர்களுக்கு ஏன் தமிழர்கள் அஞ்சலி செலுத்தக் கூடாது?"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமசந்திரன் கேள்வி எழுப்பினார்.

"அரசு தொடர்ந்தும் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு தமிழர்களை அடக்கு முறைக்குள் வைத்திருப்பதை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்" என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசிய அவர், மேலும் தெரிவித்ததாவது,

"தமிழர்களின் நீண்டநாள் கனவான வடமாகாண சபைத் தேர்தல் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று வெற்றி பெற்றது. கூட்டமைப்பு மீது மக்கள் கொண்ட நம்பிக்கையே இந்த வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

ஆனால், மக்களின் நம்பிக்கையை பூர்த்தி செய்ய முடியாத ஒரு சூழ்நிலையிலேயே வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளார். காரணம், அவருக்கு அதிகாரங்களுமில்லை, அதிகாரிகளின் ஒத்துழைப்பும் இல்லை. அங்குள்ள அதிகாரிகள் அனைவரும் ஆளுநருக்குக் கீழேயே செயற்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்கள்.

இப்படியாயின் ஏன் மாகாண சபைத் தேர்தல்களை அரசு வைக்க வேண்டும்? வடக்கிற்கு மட்டுமல்ல ஏனைய மாகாணங்களுக்குமான அதிகாரங்கள் அந்தந்த முதல்வர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என அரசை நாம் வலியுறுத்துகிறோம்.

நேற்றும் (நேற்று முன்தினம்) இன்றும் (நேற்று) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் படையினரின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டது. அவர்கள் போரின் போது இறந்தவர்களை நினைவுகூரக் கூடாது, அப்படி நினைவு கூர்ந்தால் அது சட்டப்படி குற்றம் என்று மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது மிகவும் மோசமானதொரு செயற்பாடாகும். அரசு யுத்தத்தில் இறந்த இராணுவத்தினரையும், ஜே.வி.பியினர் தாங்கள் செய்த கிளர்ச்சியில் இறந்தவர்களையும் நினைவு கூரும் போது ஏன் நாம் போரின் இறந்தவர்களை நினைவு கூரக்கூடாது. அரசின் பார்வைக்கு இறந்தவர்கள் பயங்கரவாதிகளாக இருக்கலாம். ஆனால், தமிழர்களின் பார்வையில் இறந்தவர்கள் அனைவருமே உரிமைக்காகப் போராடி மாண்டவர்கள். அவர்கள் பயங்கரவாதிகளல்லர்.

அதேவேளை, முல்லைத்தீவு, மாங்குளம், முத்தையன்கட்டு பிரதேசத்திலுள்ள இராணுவப் பயிற்சி முகாமில் 2000 மாடுகள் சிக்கியுள்ளன. உயர் பாதுகாப்பு வலயம் என்பதால் மாடுகளை உரிமையாளர்களால் மீட்க முடியவில்லை. இதனால், இராணுவத்தினர் மூலம் அங்குள்ள மாடுகளிடமிருந்து பால் கறக்கப்பட்டு இராணுவ முகாம்களுக்கு அவை அனுப்பி வைக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, மேலதிக பால் 'நெஸ்லே' நிறுவனத்துக்கு தலா 40 ஆயிரம் முதல் 45 ஆயிரம் ரூபா வுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இது மிகவும் பிழையான செயலாகும். இதனால், மாடுகளின் உரிமையாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசு இதுபோன்ற செயல்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

# இறுதிப் போர் படுகொலைகள் நம்பகமான விசாரணை தேவை

## *மஹிந்தவிடம் கோரினேன் என்கிறார் கமரூன்*

லண்டன், நவ.28

இறுதிக் கட்டப் போரில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் நம்பகமான - வெளிப்படைத்தன்மையான சுதந்திரமான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். தவறின் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஏற்படுத்தப்படும் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாக வலியுறுத்தினேன் என்று பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கில் தான் பார்த்த காட்சிகள் இன்னமும் மனதில் நிழலாடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'ஏசியன் லைற்' ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாத அமைப்பு. ஆனால் அதற்குச் சமாந்தரமாக இலங்கை அரசு வேறு விடயங்களை நோக்கக்கூடாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோது இறுதிப் போர்க் குற்றம் குறித்து வெளிப்படையான - நம்பகத்தன்மையான சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தேன். அவ்வாறு நடத்தத் தவறினால் அடுத்த மார்ச் மாதம், ஐ.நா.சபையினூடாகச் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படும் என்பதை வலியுறுத்தினேன்.

இலங்கையின் வடக்கு மாகாணத்துக்குச் சென்று ஒரு வார காலத்துக்கு மேலாகி விட்டது. ஆனாலும் அங்கு பார்த்த காட்சிகள் இன்னமும் என் மனதில் நிழலாடுகின்றன.

இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றம் வேண்டும். உண்மையான கருத்துச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் நிலவ வேண்டும். தமிழர் - சிங்களவரிடையே நல்லிணக்கம் ஏற்படவேண்டும் - என்றார். (த-5)

# தங்கம் கடத்திய 3 பெண்கள் கைது

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டுக்கு தங்கம் கடத்த முயன்ற ஒரு சிறுமி உள்ளிட்ட மூன்று பெண்கள் கட்டு நாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவினரால்கைது செய்யப்பட்டுள்ளனர்.

53, 38 வயதுடைய பெண்களும்15 வயது சிறுமியும் நேற்று அதிகாலை கைது செய் யப்பட்டதாக விமான நிலைய சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

மூன்று சங்கிலிகள் 10 வளையல்கள் என்பவற்றைஅணிந்திருந்த இவர்கள் சென்னை நோக்கிச் செல்ல இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த தங்க நகைகளின் பெறுமதி 33 லட்சத்து 80 ஆயிரம் ரூபா என சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார். கைது செய்யப்பட்ட மூன்று பெண்களும் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதோடு நகைகள் அரசுடமையாக்கப்பட்டுள்ளன.

## கூட்டத்தில் உரையாற்றியவர் மயங்கினார்

தென்மராட்சி, நவ.28

கிராமத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்புத் திட்டம் தொடர்பாகக் கூட்டத்தில் கலந்து உரையாற்றிய ஊர்ப் பிரமுகர் மயங்கி வீழ்ந்து மருத்துவமனைக்குக் கொண்டுவரும்போது உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பூநகரியில் இடம்பெற்றது. (வ-9)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தடைகளையும்

இத்தகைய தடைகள், நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் மக்கள் விடியலுக்காக உயிர் நீத்தவர்களுக்குப் பல இடங்களில் தீபங்கள் ஏற்றப்பட்டன.

நேற்று மாலை யாழ். பல்கலைக்கழகத்துக்குள்ளும் மாணவர்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

சுடரேற்றும் நேரமான மாலை 6.05 மணிக்கு நேற்று யாழ். போதனா வைத்தியசாலையின் மாடிக் கட்டடத்தின் உச்சியில் சுடரேற்றப்பட்டது. யாழ். நகர் மத்தியில் ஏற்றப்பட்ட இந்தச் சுடரால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. அங்கு உடனடியாக விரைந்த படையினர் சிறிது நேரத்தில் அந்தத் சுடரை அணைத்தனர்.

இந்தச் சுடரை படம் பிடிக்கச் சென்ற 'உதயன்' ஊடகவியலாளரின், ஒளிப்படக் கருவி இராணுவத்தினரால் பறிக்கப்பட்டு, அதிலிருந்த படங்கள் அழிக்கப்பட்டன.

மானிப்பாய் பகுதியில் ஒரு சில இடங்களில் சுடரேற்றப்பட்டதுடன் ஆலயங்களில் மணி ஓசைகளும் எழுப்பப்பட்டன. மூளாய், வட்டுக்கோட்டை, யாழ்நகர், கல்வியங்காடு, திருநெல்வேலி, மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, சங்கானை, உடுவில், சுன்னாகம், மருதனார்மடம் ஆகிய இடங்களிலும் நேற்று மாலை சுடர்கள் கொழுந்து விட்டு எரிந்தன.

தமிழீழ விடுதலைப் புலிச் சின்னம் பொறிக்கப்பட்டு மாவீரர்களை நினைவு கூருமாறு தெரிவித்து கிளிநொச்சியில் பல வீடுகளில் வாசல்களில் கடிதங்கள் போடப்பட்டிருந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேராவில் பகுதியில் இடித்தழிக்கப்பட்ட கற்குவியல் முன்பாக மலரஞ்சலி செலுத்தி சுடரேற்றப்பட்டுள்ளது. இறுதிப் போர் இடம்பெற்ற பகுதிகளிலும் சுடரேற்றப்பட்டுள்ளது.

முள்ளியவளையில் பட்டாசு வெடிகள் கொழுத்தப்பட்டுள்ளன. இதனையடுத்து அங்கு வந்த சீருடையினர் குடும்பஸ்தர் ஒருவரைச் சரமாரியாக தாக்கியுள்ளனர்.

மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் பல இடங்களில் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டதுடன் ஆலயங்களில் மணிகளும் ஒலிக்கப்பட்டன. வீடுகளிலும் மக்கள் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் பகுதிகளிலும் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டன.

(த-5-4-402-6-426-422)

## தமிழகத்தில்

நிகழ்வுகளுக்கு தமிழகப் பொலிஸார் இடையூறுகள் ஏற்படுத்தவர் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் அப்படி பெரியளவில் எதுவும் நடைபெறவில்லை.

இதேவேளை, தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் நேற்று மாவீரர் தின நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் திரண்டு வந்து பங்கேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

லண்டனில் பிரதான நிகழ்வு எக்ஸ்ஸல் மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ்த் தேசிய நினைவேந்தல் அகவம் என்ற அமைப்பு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. நேற்று மாலை ஆரம்பமான இந்த நிகழ்வில் பிரிட்டன் வாழ் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் பங்கேற்றனர்.

சுவிற்சர்லாந்திலும் மாவீரர் தின நிகழ்வுகள் நடைபெற்றன. அந்த நிகழ்வில் தமிழகத்தில் இருந்து சென்ற சிறப்புப் பிரதிநிதி வீரசந்தானம் பொதுச் சுடரினை ஏற்றி வைத்தார்.

இதேபோன்று பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, டென்மார்க், கனடா, அமெரிக்கா, பெல்ஜியம், இத்தாலி, நியூஸிலாந்து ஆகிய நாடுகளிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் இதில் கலந்துகொண்டனர். (த)

## பல்கலை

குள் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் ஒன்று கூடிய விரிவுரையாளர்கள் சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தினர்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு வெளியே இராணுவத்தினரும், புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்த நிலையில் அமைதியான முறையில் ஆலயத்தில் சுடர் ஏற்றி மௌனப் பிரார்த்தனையில் தாம் ஈடுபட்டதாக விரிவுரையாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் அநேகமான பீடங்களின் விரிவுரையாளர்கள் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அரசின்

ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் ஊடான மரக்கன்று விநியோகம் யாழ்ப்பாணத்திலும் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

யாழ். மாவட்டத்தில் சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் சமுர்த்தி அலுவலகம், கிராம சேவையாளர் அலுவலகம் என்பவற்றின் ஊடாக வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்பட்டன.

இதனைப் பொலிஸாருடன் சென்ற படையினர் தடுத்து நிறுத்தியதுடன் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் இவற்றை விநியோகிக்க வேண்டாம் என்று எச்சரித்துள்ளனர். சில இடங்களில் அவற்றைப் பறித்துச் சென்றுள் ளனர்.

இருபாலை பழம் வீதியில் உள்ள சமுர்த்தி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மரக்கன்றுகள் பறித்துச் செல்லப்பட்ட அதேவேளை, நேற்று அதிகாலை குறித்த அலுவலகம் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. (த-5)

## பிரதேச சபை

யக் கூட்டமைப்பின் உறுப்பினர் சி.சிறீரஞ்சனின், மீசாலை கிழக்கில் உள்ள வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

'என்னைக் கொலை செய்யும் நோக்குடனேயே தாக்குதலாளிகள் வந்தனர்' என்று சிறிரஞ்சன் உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 1.50 மணியளவில் 6 மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோரே தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பிரதேச சபை உறுப்பினர் தனது வீட்டு ஒழுங்கைக்குள் மோட்டார் சைக்கிள்கள் வருவதைக் கண்டதும் தனது குழந்தை, மனைவி ஆகியோருடன் வீட்டின் பின்புறமாகச் சத்தமிட்டுக் கொண்டு ஓடியுள்ளார்.

இதன்போது வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள், தொலைக்காட்சிப் பெட்டி, தண்ணீர்த் தொட்டி உள்ளிட்ட பல பெறுமதியான பொருள்களை அடித்து நொருக்கினர்.

அத்துடன் வீட்டிலிருந்த உடுபுடைவைகளையும் அவர்கள் தீயிட்டு எரித்துள்ளனர்.

பிரதேச சபை உறுப்பினரின் சத்தம் கேட்டு அயலவர்கள் அங்கு திரண்டு வந்தபோது இனந்தெரியாதவர்கள் துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டவாறு தப்பிச் சென்றுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(த-5-9-13)

## நாடாளுமன்றிலும்

"தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகப் போராடிய அனைத்து வீரப் பெருந்தகைகளுக்கும் கண்ணீர் அஞ்சலியை செலுத்திவிட்டு எனது உரையைத் தொடர்கின்றேன்" என்று கூறினார்.

## மீண்டும்

கில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழையில் கைது செய்யப்பட்ட 4 இளைஞர்கள் வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், மன்னாரில் கைது செய்யப்பட்ட ஒருவரும் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் மாவீரர் நாள் நிகழ்வுகள் யாழ். பல்கலைக் கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட களேபரத்தின் போது பல்கலைக் கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டனர் அதன் தொடர்ச்சியாக யாழ். குடாநாட்டில் 50 பேர் வரை பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதன் பின்னர் இவ் வருடமும் இதே காலப்பகுதியில் நடவடிக்கைகள் வடக்கில் முடக்கிவிடப்பட்டுள்ளன.

கடந்த 25 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில், முருங்கன் பிரதேசத்தில் திருச்செல்வம், கிறிஸ்துராஜன் (வயது -31) என்பவர், வவுனியாவிலிருந்து வந்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

அத்துடன் தெல்லிப்பழையில் ஜனாதிபதியின் பதாகையை கிழித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 4 இளைஞர்களும், வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் மாவீரர் தினம் தொடர்பான கருத்துக்களை வெளியிட்டவர்களும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் இந்த நடவடிக்கை வடக்கு மக்களிடையே மீண்டும் அச்சமான சூழலை தோற்றுவித்துள்ளது.

(த-5)

## நெடுந்தீவு

தலையிலிருந்து 9 மில்லி மீற்றர் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

ஈ.பி.டி.பியின் ஆளுகைக்குட்பட்ட நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளராகக் கடமையாற்றி வந்த றெக்ஷியன், கடந்த இரண்டு மாதங்களாகச் சபை நடவடிக்கைகளுக்குச் செல்லவில்லை. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நெடுந்தீவுப் பிரதேச சபைக்குப் புதிய தவிசாளரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நண்பகல் றெக்ஷியனின் சடலம் அவரது வீட்டில் இருந்து இரத்தம் தோய்ந்த நிலையில் மீட்கப்பட்டது.

புங்குடுதீவு வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுப் பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தது

நேற்று மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில், ஒரு மீற்றர் முதல் 5 மீற்றர் வரையான தூர இடைவெளியில் வைத்தே அவர் கைத் துப்பாக்கியால் தலையின் பின் பக்கம் சுடப்பட்டிருக்க வேண்டும் என்றும், இதனால் மூளையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் உயிரிழந்திருக்க வேண்டும் என்றும் தெரியவந்துள்ளது. (த-5)

## ஊடக

இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு நடைபெற்ற இந்த நிகழ்வில் உதயன் பிரதம ஆசிரியர் ம. வ.கானமயில்நாதன் ஸ்ராஸ்பேர்க் நகர பிரதிநிதியிடம் இருந்து இந்த விருதினை பெற்றுக் கொண்டார். உதயன் நிறுவனத்தின் சார்பில் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் இந்த நிகழ்வில் உரையாற்றினார்.

(த)

# சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், நவ.28

வடமராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவுப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

**10 வயது ஆண்கள்**
பி.மனோஜ் (நெல்லியடி அ.மெ.மி.த.பாடசாலை), ஆர்.ரஜீவன் (தும்பசிட்டி மெ.மி.த.பாடசாலை), வி.சாகித்தியன் (பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்).

**10 வயதுப் பிரிவு பெண்கள்**
ரி.சாகித்தியா (பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலை), கே.இராகவி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கே.தனுஸ்கா (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்).

**11 வயது ஆண்கள்**
ஜே.சயந்தன், ஜே.ரிசிகோபன், ரி.வசீகரன் (பருத் தித்துறை ஹாட்லிக் கல் லூரி).

**11 வயதுப் பெண்கள்**
ஜே.சாமினி, கே.விஸ்னுஜி, ஆர்.மாதுமை (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**12 வயது ஆண்கள்**
ஆர்.தனுசன், கே.வித்திய சங்கர், (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), எஸ்.சுமன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).


**12 வயதுப் பெண்கள்**
ஜே.ஆர்த்திகா (வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரி), வி.யுவஸ்திகா (பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி).

**13 வயது ஆண்கள்**
எஸ்.ரமணன், கே.கஜானன், ரி.அபினேஸ் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி).

**13 வயதுப் பெண்கள்**
கே.மாதங்கி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை), எஸ்.யதுஷா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இ.ராஜினி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**14 வயது ஆண்கள்**
ஆர்.உதயதர்சன், எஸ்.கோபிதன், பி.ஜொய்கன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி).

**14 வயதுப் பெண்கள்**
கே.துஸ்யந்தி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), கே.தர்மினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வி.மாதுமை (பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி). (த-23-8)



இலங்கை கராத்தே சம்மேளத்தின் வடக்கு மாகாணத்துக்கான கராத்தே சுற்றுப் போட்டித் தொடர் அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் 17 வயதுப் பிரிவில் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் தங்கப் பதக்கம் பெற்றுக் கொண்டனர். பதக்கம் பெற்ற வீர, வீராங்கனைகள் வித்தியாலய அதிபர் எஸ்.சிவானந்தன், உடற்பயிற்சி ஆசிரியர் ரி.றீகன், காரத்தே பயிற்றுநர் சென்சேய் விஜயராஜ் ஆகியோருடன் உள்ளனர். (த-23)

# நாளை மோதும் அணிகள்

யாழ்ப்பாணம், நவ.28

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**பி.ப 3.30 மணிக்கு**
சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் எல்லாளன் விளை யாட்டுக்கழகம்.

**மாலை 4.30 மணி**
பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் யாழ். பல்கலைக்கழக அணி. (த-23)

## பெண்களுக்கான கிரிக்கெட் நாளை காலை ஆரம்பம்

அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (த-23)

# அரியாலை ஐக்கியத்தை வென்றது பாடும் மீன்

வலி.வடக்கு, நவ.28

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.



இதில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## மரதன் ஓட்டம் நாளை

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் நடத்தப்படும் மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும் ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைமை அலுவலக முன்றலில் ஆரம்பிக்கவுள்ள மரதனோட்டம் செருக்கன் சந்தி ஊடாகச் சென்று புளியங் கூடல் சந்தி, சரவணைச் சந்தியை அடைந்து ஊர்காவற்றுறை பிரதான சந்தி வழியாக முடிவிடத்தை வந்தடையும். (த)

# அராலி மாவத்தை வி.க வின் உழவர் உதைபந்தாட்டம்

## "நாளை ஆரம்பம்"

வலி.வடக்கு, நவ.28


அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் உழவர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி நடத்தும் 7 பேர் பங்கு பெற்றும் உதைபந்தாட்டப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாக வுள்ளது.

போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* அராலி துணைவி செனித் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் வட்டுக்கோட்டை சிவன் விளையாட்டுக்கழகம்.

*அராலி கலைவாணி விளையாட்டுக்கழகம் எதிர் அராலி வானவில் விளையாட்டுக்கழகம். (த-86)

# யங்ஸ்ரார் கிரிக்கெட் தொடர்: சாதித்த அணிகள்



யாழ்ப்பாணம், நவ.28

வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 19ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி மின்னொளியில் நடத்தப்படும் 6 பேர் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித்தொடரில் கடந்த திங்கட்கிழமை வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமானது.

முதலில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

யங்பைற் விளையாட்டுக்கழக அணிக்கும் பூமா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்பைற் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்கினை இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தமிழ் 47 ஓட்டங்களையும், சுரேன் 28 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் பூமா அணி சார்பில் பிரகாஸ், அரவிந்தன் ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர். 92 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பூமா விளையாட்டுக்கழக அணி 4.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 35 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சயினி 15 ஓட்டங்களையும், பிரகாஸ் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யங்பைற் விளையாட்டுக்கழக அணி சார்பில் நிரூபன், சுரேஸ் ஆகியோர் தலா 2 இலக்கினை வீழ்த்தினர்.

யங்பைற் விளையாட்டுக்கழக அணி 55 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஐ.எஸ்.ஏ. விளையாட்டுக்கழக அணிக்கும் சீர்திருத்தம் விளையாட்டுக்கழக அணிக்கும் இடை[illegible] ஆட்டத்தில் முதலில் துடுப்பெ[illegible]டிய ஐ.எஸ்.ஏ. விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் ப[illegible]ங்கள் நிறைவில் 2 இலக்கினை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சக்தி 32 ஓட்டங்களையும், டினேஸ் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சீர்திருத்தம் விளையாட்டுக்கழக அணி சார்பில் கலை, சுதன் ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர்கள்.

56 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சீர்திருத்தம் விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 37 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதி[illegible] கலை 13 ஓட்டங்களையும், சுத[illegible] 14 ஓட்டங்களையும் தமது அ[illegible] சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஐ.எஸ்.ஏ. விளையாட்டுக்கழக அணி சார்பில் சக்தி, முரளி, அனுஷன் ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர்.

ஐ.எஸ்.ஏ. விளையாட்டுக்கழக அணி 18 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஆதவன் விளையாட்டுக் கழக அணிக்கும் சூப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆதவன் விளையாட்டுக்கழக அணியினர் 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் கிச்சா 15 ஓட்டங்களையும், தர்சன், விஜய் ஆகியோர் தலா 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சூப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் தியாகேஸ் 2 இலக்கினையும் சதீஸ் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

43 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சூப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 4.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்கினை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பாஸ்கர் 28 ஓட்டங்களையும், ரகு 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்துவீச்சில் ஆதவன் விளையாட்டுக் கழக அணி சார்பில் கிச்சா, கேதீஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர். இதில் சூப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2 இலக்குகளால் வெற்றி பெற்றது.

குட்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் அம்மன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய குட்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்கினை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் துஷாந் 16 ஓட்டங்களையும், சுபாஸ் 7 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் கார்த்திக், ரமேஸ், தயாளன் ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர். 32 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அம்மன் விளையாட்டுக் கழக அணி 4.3 பந்துப் பரிமாற்றங்கள்நிறைவில்2இலக்கினை இழந்து 35 ஓட்டங் களைப் பெற்றது.

இதில் ரமேஸ் 15 ஓட்டங்களையும், றுவான் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் குட்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் சதீஸ் 2 இலக்கினை வீழ்த்தினார். அம்மன் விளையாட்டுக் கழக அணி 3 இலக்குகளால் வெற்றி பெற்றது. (த-23)



# இலங்கை வருகிறது இங்கிலாந்து லயன்ஸ்

இங்கிலாந்தின் 'ஏ' அணியான இங்கிலாந்து லயன்ஸ் அணி இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளது என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் இந்தச் சுற்றுலா இடம்பெறுவதை இங்கிலாந்து கிரிக்கெட் சபை தங்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இங்கிலாந்து லயன்ஸ் அணி இரண்டு 3 நாள் போட்டிகளிலும் மூன்று 4 நாள் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இப்போட்டிகள் ஜனவரி 27ஆம் திகதி ஆரம்பித்து மார்ச் 2ஆம் திகதி நிறைவடையவுள்ளதாகவும் தெரிவித்துள்ள இலங்கை கிரிக்கெட் சபை, இத்தொடருக்கான போட்டி அட்ட்வணை விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது. (த)

# புதிய திட்டங்கள் தயார்

இடம்பெற்றுவரும் ஆஷஷ் தொடரின் இரண்டாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி புதிய திட்டங்களோடு களமிறங்கும் என ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் டரன் லீமன் தெரிவித்துள்ளார்.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி மிகச்சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தி 381 ஓட்டங்களால் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருந்தது. இந்நிலையிலேயே டரன் லீமன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முதலாவது போட்டி இடம்பெற்ற பிறிஸ்பேண் ஆடுகளம் அதிக வேகமுடையதாக காணப்பட்ட போதிலும் அடுத்த போட்டி இடம்பெறவுள்ள அடிலெய்ட் ஆடுகளம் மெதுவானதாக துடுப்பாட்டத்திற்குச் சாதகமானதாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்த அவர், 'ஆஸ்திரேலிய அணி இன்னமும் முன்னேற வேண்டிய தேவையுள்ளதாகவும் தொடர்ந்தும் முன்னேற விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். பிறிஸ்பேண் போட்டியில் ஆஸ்திரேலிய அணி சிறப்பாக விளையாடியதாகவும், ஆனால் அடுத்த போட்டி வித்தியாசமானதாக அமையுமெனவும் குறிப்பிட்ட டரன் லீமன், அடுத்த போட்டிக்காக சிறந்த சில திட்டங்களைக் கொண்டுள்ளதாகவும் அவற்றை நடைமுறைப்படுத்த விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

முதலாவது போட்டியில் இரு அணிகளும் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்த நிலையில், தனது அணி வீரர்கள் ஆக்ரோஷமாக விளையாடுவதை வரவேற்பதாக குறிப்பிட்ட டரன் லீமன், குறித்த எல்லையைத் தாண்டி அவர்களது ஆக்ரோஷம் செல்லாதவரை பிரச்சினைகளில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (த)



# சிட்னி தண்டர்ஸ் அணியில் டில்ஷான்

பிக் பாஷ் லீக் 20/20 தொடரில் சிட்னி தண்டர்ஸ் அணி சார்பாக போட்டிகளில் பங்குபற்றுவதற்காக இலங்கையின் சகலதுறை வீரர் திலகரட்ண டில்ஷான் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். சிட்னி தண்டர்ஸ் அணியின் 3ஆவது போட்டியிலிருந்து திலகரட்ண டில்ஷான் பிக் பாஷ் லீக் தொடரில் பங்குபற்றுவார் என் அறிவிக்கப் பட்டுள்ளது.

டிசெம்பர் 20ஆம் திகதி பிக் பாஷ் லீக் தொடர் ஆரம்பிக்கவுள்ளது. எனினும் பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் டிசெம்பர் 27ஆம் திகதியே நிறைவடையவுள்ளன. இந்த நிலையில், அதற்குப் பின்னர் திலகரட்ண டில்ஷான் பிக் பாஷ் லீக் போட்டிகளில் பங்குபற்றுவார் என அறிவிக்கப்படுகிறது.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் பின்னர் டெஸ்ட் போட்டிகள் இடம்பெறவுள்ள போதிலும் திலகரட்ண டில்ஷான் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதன் காரணமாக அவரால் பிக் பாஷ் லீக் தொடரில் பங்குபற்றக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

பிக் பாஷ் லீக் தொடரில் பங்குபற்றுவதற்கு ஆர்வத்துடன் காணப்படுவதாகத் தெரிவித்துள்ள திலகரட்ண டில்ஷான், இதற்கு முன்னைய 3 வருடங்களிலும் பிக் பாஷ் லீக் தொடரில் பங்குபற்ற விரும்பிய போதிலும் இலங்கை சார்பான சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்ற வேண்டியிருந்ததன் காரணமாகப் பங்குபற்ற முடியவில்லை எனக் குறிப்பிட்டார்.

இலங்கை அணியின் முன்னாள் உதவிப் பயிற்றுவிப்பாளர் சந்திக்க ஹத்துரசிங்க சிட்னி தண்டர்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளராக இருப்பதால் அவருடனான உறவு சிட்னி தண்டர்ஸ் அணியைத் தெரிவு செய்ய வைத்தது எனக் குறிப்பிட்ட டில்ஷான், மைக்கல் ஹசியுடன் இணைந்து துடுப்பெடுத்தாடுவதற்கு ஆர்வத்துடன் காணப்படுவதாகக் குறிப்பிட்டார். (த)

# சம்பியன்ஸ் லீக் முடிவுகள்

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடரின் போட்டிகளில் பசெல், ஆர்சனல், பொருஸியா டோர்ட் மன்ட், அஜக்ஸ், ஏசி.மிலான் அணிகள் வெற்றிபெற்றன.

பசெல் அணிக்கும் செல்சீ அணிக்கும் இடையிலான போட்டி யில் பசெல் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அவ்வணி சார்பாக மொஹமட் சாலா 87ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பெற்றுக் கொடுத்தார்.

ஸ்ரெவுவா புகுரெஸ்ரி அணிக்கும் ஸ்கால்க்கே அணிக்குமிடையிலான போட்டி கோல்கள் பெறப்படாது சமநிலையில் முடிவடைந்தது. ஆர்செனல் அணிக்கும் மார்செய்லி அணிக்குமிடையிலான போட்டியில் ஆர்செனல் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. போட்டியின் முதலாவது மற்றும் 65வது நிமிடத்தில் ஜக் வில்ஷெயர் கோல்களைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

பொருஸியா டோர்ட்மன்ட் அணிக்கும் எஸ்எஸ்சி நேபோலி அணிக்குமிடையிலான போட்டியில் பொருஸியா டோர்ட்மன்ட் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பொருஸியா டோர்ட்மன்ட் அணி சார்பாக 10ஆவது நிமிடத்தில் மார்க்கோ றுவெஸ், 38ஆவது நிமிடத் தில் ஜக்குப் பிளெஸ்சி கௌஸ்கி, 78ஆவது நிமிடத்தில் பியரே எம்றிக் ஔபமேயங் ஆகியோரும் எஸ்.எஸ்.சி.நேபோலி அணி சார்பாக 71ஆவது நிமிடத்தில் லொரென்சோ இன்சைன் உம் கோல் களைப் பெற்றுக் கொண்டனர். செனிற் பீற்றர்ஸ்பேர்க்-அற்லெற்றிக்கோ மட்ரிட் அணிகளுக்கிடையிலான போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. அற்லெற்றிக்கோ மட்ரிட் அணி சார்பாக 53ஆவது நிமிடத்தில் அட்ரியனும் செனிற் பீற்றர்ஸ்பேர்க் அணி சார்பாக 74ஆவது நிமிடத்தில் றொபி அல்டென்வெய்ரெலாட் உம் கோல்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

எப் சி போர்ட்டோ அணிக்கும் ஒஸ்ரியா வெய்ன் அணிக்குமிடையிலான போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. ஒஸ்ரியா வெய்ன் அணி சார்பாக 11ஆவது நிமிடத்தில் றோமன் கெய்னாஸ்ற்றும் எஃப் சி போர்ட்டோ அணி சார்பாக 48ஆவது நிமிடத்தில் ஜக்சன் மார்ட்டினெஸ் ஸும் கோல்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

அஜக்ஸ் அணிக்கும் பார்சிலோனா அணிக்குமிடையிலான போட்டியில் அஜக்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அஜக்ஸ் சார்பாக 19ஆவது நிமிடத்தில் துலானி செரேரோவும் 41ஆவது நிமிடத்தில் டனி ஹோசெனும் கோல்களைப் பெற்றுக்கொடுத்ததோடு பார்சிலோனா சார்பாக 49 ஆவது நிமிடத்தில் ஷேவி ஹெர் னான்டஸ் கோலொன்றைப் பெற்றுக் கொடுத்தார்.

ஏசி மிலான் அணிக்கும் செல்ரிக் அணிக்குமிடையிலான போட்டியில் ஏசி மிலான் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அவ்வணி சார்பாக 13ஆவது நிமிடத்தில் காகா, 49ஆவது நிமிடத்தில் கிறிஸ்ரியன் சபாட்டா, 60ஆவது நிமிடத்தில் மரியோ பலற்றொல்லி ஆகியோர் கோல்களைப் பெற்றுக்கொடுத்தனர். (த)

# பிரமாண்டமான மைதானம் உருவாக்குகிறது ஜப்பான்


ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் 2020ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளன. எனவே மிகப்பெரிய மைதானம் அமைப்ப தற்காக ஜப்பான் விளையாட்டு ஆணையம், பல்வேறு துறை வல்லுநர்களைக் கலந்து ஆலோசித்தது.

இதனை தொடர்ந்து 70 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பில் புதிய மைதானம் ஒன்றை உருவாக்கும் பணியில் ஜப்பான் ஈடுபட்டுள்ளது. இதில் 25 சதவிகித பணிகள் முடிவடைந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. மைதானத்தின் மேற்கூரை அமைப்பதற்கு மட்டுமே 10 பில்லியன் முதல் 15 பில்லியன் வரையிலான யென் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

மொத்தத்தில் 185.2 பில்லியன் யென் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

வருகிற 2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்த மைதானம் முழுமையாக தயாராகும் என்றும் கூறப்பட்டுள்ளது. (த)


# ஷிகர் தவான் அதிரடிச் சதம் தொடரை வென்றது இந்தியா



மேற்கிந்திய தீவுகள் அணியை 5 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா தொடரைக் கைப்பற்றியுள்ளது.
இந்தியா வந்துள்ள மேற்கிந்திய தீவுகள் அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது.
இதில் இரண்டு ஒருநாள் போட்டிகளின் முடிவில் இரு அணிகளும் 1-1 என சமநிலை வகித்தன.
இந்நிலையில் நேற்று மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நடந்தது. இதில் முதலில் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகள் இழப்புக்கு 264 ஓட்டங்கள் எடுத்தது.
அதிகபட்சமாக சாமுவேல்ஸ் 71 ஓட்டங்களும், பாவெல் 70 ஓட் டங்களும் எடுத்தனர்.
இதனையடுத்து 264 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கைத் துரத்திய இந்திய அணியின் தொடக்க வீரர்களாக ரோஹித் சர்மா, ஷிகர் தவான் களமிறங்கினர்.
4 ஓட்டங்கள் மட்டுமே எடுத்த ரோஹித் சர்மா, ராம்பால் பந்தில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் ஷிகர் தவான் அதிரடியாக ஆடி அணியின் ஓட்டங்களை மளமளவென உயர்த்தினார். அவருடன் இணைந்த கோஹ்லி 19 ஓட்டங்களில் வெளியேறினார். அதன்பின்னர் ஷிகர் தவானும், யுவராஜ் சிங்கும் மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சைப் பதம் பார்த்தனர்.
பந்துகளை நான்குகளாக விளாசிய ஷிகர் தவான் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 5ஆவது சதத்தைப் பதிவு செய்ததுடன் 119 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.
தொடர்ந்து அரைச்சதம் கடந்த யுவராஜ் சிங், 55 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஆட்டமிழந்தார்.
முடிவில் 46.1 பந்துப்பரி மாற்றங்களில் 5 இலக்குகள் இழப்புக்கு 266 ஓட்டங்களை எடுத்தது.
இதன் மூலம் 2-1 என்ற கணக்கில் ஒருநாள் தொடரை வென்று கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது. (கு)


SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச,தனியார் ஊழியர்கள்,பல்கலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் 30.11.2013 சனிக்கிழமை
பிரிவு: 4 03.00-05.00
3 மாதத்தில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் படித்து பயன்பெற்ற பாடநெறி.
SAAMSON Language School 179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

## டானியல் வெற்றோரி இல்லை



நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான தொடரில் பங்குபற்ற விரும்பவில்லை என நியூசிலாந்து அணியின் சகலதுறை வீரர் டானியல் வெற்றோரி குறிப்பிட்டுள்ளார்.
கணுக்கால் உபாதை காரணமாக அண்மைக் காலத்தில் பாதிக்கப்பட்டு வந்த டானியல் வெற்றோரி கடந்த ஜூன் மாதத்தில் சத்திர சிகிச்சைக்கு உள்ளாகியிருந்தார். அதிலிருந்து மீண்டு வரும் அவர் இன்னமும் முழுமையாக போட்டிகளில் பங்குபற்றவில்லை.
ஒரு முதற்தரப் போட்டியிலும் சில மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளிலும் பங்குபற்றியுள்ள அவர், மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான தொடரில் பங்குபற்றுவதற்கான போதுமான உடற் தகுதி தொடர்பாக தனக்கு உறுதி கிடையாது எனத் தெரிவித்துள்ளார்.
சர்வதேசப் போட்டிகள் அதிலும் குறிப்பாக டெஸ்ட் போட்டிகள், உடலுக்கு அதிக பாரத்தை வழங்குவதாகக் குறிப்பிட்ட டானியல் வெற்றோரி, இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யுமளவுக்கு தனது உடல் உள்ளது என்ற நம்பிக்கையைப் பெறுவதற்கு போதுமான உள்ளூர்ப் போட்டிகளில் பங்குபற்றியிருக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.
உபாதைக்குள்ளாகியிருந்த நிலையில், முழுமையான உடற் தகுதியின்றி சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றினால் மீண்டும் உபாதை ஏற்படுவதற்கான வாய்ப்புக்களுள்ள நிலையில், அதைத் தவிர்க்க விரும்புவதாக டானியல் வெற்றோரி குறிப்பிட்டுள்ளார். நியூசிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் டிசெம்பர் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

## மரண அறிவித்தல்



திருமதி **தங்கமுத்து வைத்திலிங்கம்**
(நாகம்மா-ஓய்வுபெற்ற ஆசிரியை)

டச்சு வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கமுத்து வைத்திலிங்கம் நேற்று (27.11.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், சுப்பிரமணியத்தின் பாசமிகு சகோதரியும், இந்திராணி யின் அன்பு மைத்துனியும், யோகீஸ்வரன்லோநிதி (சாவகச்சேரி), நிதிதாசன் (லண்டன்), நிதாகரன் (லண்டன்), சுந்தரம்பிள்ளை சுதாநிதி (சுவிஸ்), நிதி கேசன் (சாவகச்சேரி), ரட்ணபாலு யசோநிதி (கொலண்ட்), குகனேஸ்வரன் கௌரிகாநிதி (லண்டன்), நிரேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமியும், வேணுகானன் (பிரான்ஸ்), வேணுகஜன் (கொழும்பு), புஸ்பதாசன் நதியா (லண் டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல் லப்ப டும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு வீதி,
சாவகச்சேரி.

தகவல்: நிதிகேசன்
(குட்டி அண்ணை)

# சவாலுக்குத் தயார்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் சவாலுக்கு தயார் என இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் தெரிவித்துள்ளார்.
இந்திய அணி தென்னாபிரிக்காவுக்கு அடுத்த மாதம் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது.
இதற்கான டெஸ்ட் அணியில் நீண்ட இடைவெளிக்குப் பின், சகீர்கான் இடம்பிடித்துள்ளார்.
இது குறித்து அவர் அளித்த பேட்டியில், மீண்டும் அணிக்குத் திரும்பியது உற்சாகமாக உள்ளது.
சவாலை சந்திக்கத் தயாராகி விட்டேன், சவால்களை சந்திப்பதும் அதை எதிர்கொள்வதும் சுவாரஸ்யமானது. கடந்த காலங்களில் தென்னா பிரிக்கா வில் பசுமையான நினைவுகளைப் பெற்றுள் ளேன். இதற்கு முன் பும், அங்கு போட்டி நடந்த போது தான் மீண்டும் அணியில் இடம் பிடித்தேன். எனவே, தென்னாபிரிக்கப் பயணத்தை ஆவலு டன் எதிர் நோக்கி உள்ளேன்.
அணியில் இடம் கிடைக்காமல் இருந்தபோது அணிக்குத் திரும்ப முடியுமா, முடியாதா என யோசித்தேன்.
மனதளவில் தயாராக இருந்த நான், உடலளவில் தயாராகுவதற்கு பயிற்சியாளர்களிடம் ஆலோசித்தேன்.
அவர்களுடன் இணைந்து ஆலோசித்து திட்டங்கள் வகுத்துச் செயல்பட்டேன்.
பொதுவாக இளம் வீரர்க ளுக்கு ஆலோசனை தரும் குணம் இயற்கையாக என்னிடம் உள்ளது. இதற்காக நான் தயங்குவதில்லை, ஏனெனில் இந்திய துணைக் கண்டத்தில் வேகப்பந்து வீச்சாளாராக நீடிப்பது அவ்வளவு சுலபமல்ல - என்று தெரிவித்துள்ளார். (கு)

விற்பனையாகின்றன
தொகுப்பு:-த. தவசேகர்
★கமநலதிணைக்களத்தின் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் தெரிவு
விலை:- 300/=
* SLEAS திறந்த பரீட்சை வழிகாட்டி சனிக்கிழமை கிடைக்கும்
விலை:-700/=
பிரபல புத்தக நிலையங்களில்

காணி விற்பனைக்கு
நீர்வேலி இராஜ வீதியில் (மாசிவன் சந்திக்கு அருகில்) 20 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 0825347

**திசைகாட்டி (பிறை) லிமிட்**

நேற்று 27.11.2013 பக்கம் 24 இல் பிரசுரமாகிய விளம்பரத்தில் ''இவ் வடிவக் குறிப்பு கௌரவ இயக்குநர் சபைக் கட்டளைப்படி இங்கே பிரசுரமாகின்றது'' என்பது தவறுதலாக விடுபட்டுள்ளது. அதனை சேர்த்து வாசிக்கவும்.

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
கிழமை நாட்கள், பிற்பகல் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், உங்களின் அனுமதிகளுக்கு முந்துங்கள்
Batch1: 30.11.2013
Batch2: 02.12.2013
Batch3: 07.12.2013
Batch4: 09.12.2013

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.11.2013இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.